
தமிழாக்கம்

செப்டம்பர் -அக்டோபர் 2021

# The Herald

## of Christ's Kingdom



## வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழு சபைகள்


- எபேசு, முதல் சபை
- சிமிர்னா சபை
- பெர்கமு
- தியாத்தீராவின் சோதனைகள்
- விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்
- வில்லியம் பென், சிலுவை மற்றும் கிரீடம்
- லவோதிக்கேயாவின் பொறுப்புகள்
- ஒரு கண்ணோட்டம்

## வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழு சபைகள்

# ஆதியிலே



இயேசு பேசும்போது, நாம் அனைவரும் கேட்க விரும்புகிறோம். வேறு எங்கிருந்து சிறந்த ஆலோசனை நமக்கு கிடைக்கும்?

இயேசு நம்முடைய சொந்த சபைக்கு நேரடியாக ஒரு செய்தியைச் சொல்வதாக கற்பனைச் செய்துப் பாருங்கள். கவனத்துடன், ஆர்வத்துடன், சிந்தனையுடன், தீவிரமாக அதனை கேட்டு, பின்னர் அந்த ஆலோசனையை நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உடனடியாகப் பயன்படுத்த யார் விரும்ப மாட்டார்கள்?

கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் ஆசியா மைனரில் ஏழு கிறிஸ்தவ சமூகங்களுக்கு வழங்கப்பட்ட ஆசீர்வாதம் அது. ஒவ்வொரு பகுதியின் தலைவருக்கு அனுப்பப்பட்ட இந்த செய்திகளைக் கொண்டு செல்லும் வழியாக அப்போஸ்தலனாகிய யோவான் இருந்தார்.

கடைசியாக மீதமுள்ள அப்போஸ்தலரால் அனுப்பப்பட்ட ஒரு நீண்ட கடிதத்துடன் ஒரு தபால் வந்ததாக கற்பனைச் செய்து பாருங்கள். ஆனால் யோவானின் நற்செய்தி அல்லது அவரது நிருபம் போலல்லாமல், இந்த கடிதம் எஜமானாகிய, இயேசு கிறிஸ்துவிடம் இருந்து வந்தது. பரிசீலனையில், இந்த கடிதத்திற்குள் உங்கள் சொந்தப் பகுதியில் உள்ள பரிசுத்தவான்களுக்காக வெளிப்படையாக எழுதப்பட்ட ஒரு செய்தி இருக்கிறது.

பல சகாப்தங்களுக்கு முன்பு சகோ. ஜான் ஹல் அவர்களின் மறக்க முடியாத ஞானஸ்நான உரையை நாம் கேட்டோம். அவர் ஞானஸ்நானம் பெற தயாராக இருப்பவர்களிடம். விண்ணிலிருந்து வந்த கடிதத்தை படித்து காட்டுவது போல் பேசினார். கிறிஸ்துவின் மணவாட்டியின் ஒரு அங்கமாக இருக்க, இதுவரை எவருக்கும் எந்த சமயத்திலும் வழங்கப்படாத மிக அற்புதமான சிலாக்கியத்திற்கான ஓர் அழைப்பு. இதில் நிபந்தனைகள், ஆலோசனைகள், மகிழ்ச்சியான சிலாக்கியங்கள் மற்றும் தெய்வீக உதவிகளின் வாக்குறுதிகள் இருக்கின்றன. அத்தகைய கடிதத்தை நாம் பொக்கிஷமாக வைத்து, அதை வாழ்நாள் முழுவதும் பாதுகாக்க மாட்டோமா? அதை மறுபரிசீலனைச் செய்து, மீண்டும் மீண்டும் படித்து, சிந்தித்து, அதை நேசிக்க மாட்டோமா?

அந்த சொற்பொழிவில் வேதம் மூலம் நமக்கு நீட்டிக்கப்பட்டப் பாடங்கள் மற்றும் சலுகைகளுக்கு ஒரு உருவகம் இருந்தது. ஆனால 1900 ஆண்டுகளுக்கு முன்பு ஆசியா மைனரில் ஏழு சபைக்கு எழுதப்பட்ட விஷயம், உண்மையானது தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டது.

இந்த விஷயத்தில் குறிப்படத்தக்கது என்ன வென்றால், இயேசு அந்த செய்திகளின் மூலம், யுகம் முழுவதும் உள்ள பரிசுத்தவான்களிடம் ஒவ்வொரு காலகட்டத்திலும் பேசினார், அது அவர்களின் காலம் மற்றும் சூழ்நிலைகளில் எதிர்கொள்ளும் அனுபவங்களுக்காக தனிப்பயனாக்கப் பட்டது.

இன்று நம் காலத்திற்கான கடிதத்தை மாத்திரம் இயேசுவிடம் இருந்து நாம் பெறவில்லை. மாறாக மற்ற ஆறு காலகட்டத்திற்கான செய்திகளையும் படிக்கவும், அவை ஒவ்வொன்றிலிருந்தும் நமக்குப் பயனுள்ள பாடங்களைப் பெறவும் நமக்கு வாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு செய்தியின் முடிவிலும் இயேசு நம் அழைப்பின் மகத்துவத்தையும், நம் ஒவ்வொருவருக்காகவும் வைக்கப்பட்டிருக்கும் தனிச் சிறப்புடைய நம் தகுதிக்கு அப்பாற்பட்ட சிலாக்கியங்களையும் நினைப்பூட்டுகிறார்.

நம் ஆசிரியர்கள் தங்கள் கட்டுரைகளைப் பற்றி ஆழமாக யோசித்திருக்கிறார்கள். சபை வரலாற்றின் ஏழு காலங்களின் வரலாறு மற்றும் சூழ்நிலைகளை நினைவு கூர்ந்து, ஒவ்வொன்றிலுமிருந்து ஊக்கமளிக்கும் பாடங்களை நமக்கு நினைவூட்ட, அவர்கள் நேரம் செலவழித்து, கவனமாக உழைத்திருக்கிறார்கள்.

ஏழு சபைகளுக்கு இயேசு எழுதிய கடிதங்களில் கவனம் செலுத்தவது என்ன ஒரு பாக்கியம். நம்முடைய குணலட்சணம், ஊழியம் மற்றும் விசுவாசத்தை வடிவமைப்பதில் நமக்கு அறிவுரைகளையும் வழிகாட்டுதல்களையும் கொடுக்கும்பொக்கிஷமான கடிதங்களாக அவை இருக்கட்டும்.


**செப்டம்பர் / அக்டோபர் 2021, தொகுப்பு 103, எண் 5**

**எபேசு, முதல் சபை**
வேலைகள், உழைப்பு மற்றும் பொறுமை

**சிமிர்னா சபை**
காலம் இரண்டு

**பெர்கமு**
சபை மூன்று

**தியாத்தீராவின் சோதனைகள்**
சபை நான்கு

**விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்**
சபை ஐந்து, சர்தை

**வில்லியம் பென், சிலுவை மற்றும் கிரீடம்**
பிலதெல்பியாவில் உள்ள சபையின் தூதர் (1667-1874)

**லவோதிக்கேயாவின் பொறுப்புகள்**
சபை ஏழு

**ஒரு கண்ணோட்டம்**
ஏழு காலங்கள்

**இன்றைய தீர்க்கதரிசனம்**
அரசாங்கங்களும் மதமும்

**வேலைகள், உழைப்பு மற்றும் பொறுமை**

# எபேசு, முதல் சபை



David Wittbrodt

"எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில் - ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலது கரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது" (வெளிப்படுத்தல் *2:1*)

வெளிப்படுத்துதலின் முதல் மூன்று அதிகாரங்களில், அப்போஸ்தலன் யோவான் ஏழு சபைகளை தொடர்ச்சியான ஒரு வரிசையில் உரையாற்றுகிறார். வரலாற்று ரீதியாக, இந்த சபைகள் ஒவ்வொன்றும் ஆசியா மைனரில் ஒரு நகரமாக இருந்தது. இந்த சபைகளை நாம் பார்வையிட வேண்டுமானால், பண்டைய நகரமான எபேசு நம்முடைய முதல் நிறுத்தமாக இருக்கும். இது இன்றைய துருக்கியின் மேற்கு கடற்கரையில் ஒரு துறைமுக நகரம். பின்தொடரும் ஆறு சபைகள் உள்நாட்டில் உள்ளது. அதாவது கடற்கரையில் இருந்து தொலைவில். எபேசுவில் இருந்து ஒரு பயணி வெளிப்படுத்தலில் அமைந்துள்ள அதே வரிசையில் மற்ற நகரங்களுக்குச் செல்வார். இது சபைகளுக்கான கால வரிசையை அறிவுறுத்துகிறது. முதலில் எபேசுவை பார்வையிட்டு, பின் சிமிர்னா... மற்றும் லவோதிக்கேயா சபையை அடையும் வரை செல்லவேண்டும். ஏழு சபைகள் முழு சுவிசேஷ யுகத்தை குறிப்பிடுவதால், ஒவ்வொரு தனிப்பட்ட சபையும் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியைக் கொண்டுள்ளது.

முதல் சபையாகிய எபேசு, அப்போஸ்தலர்கள் தீவிரமாக செயல்பட்ட சுவிசேஷ யுகத்தின் முதல் 40 வருடங்களை குறிக்கிறது. இது கிபி 33ல் பெந்தெகொஸ்தே முதல் கிபி 73ல் மசாடாவின் வீழ்ச்சி வரை கணக்கிடப்படுகிறது. இது யூத கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவந்தது. இதில் கிபி 70 எருசலேமின் வீழ்ச்சியும், யூதர்கள் மற்ற நாடுகளுக்கு சிதறடிக்கப்பட்டதும் அடங்கும்.

சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தை பெந்தெகொஸ்தே குறிக்கிறது. அந்நேரத்திலிருந்து மனுக்குலத்தின் மேல் தேவனுடைய ஆர்வம் எருசலேம் மற்றும் இஸ்ரயேலை மையமாகக் கொண்டிருக்கவில்லை. இப்போது, தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இஸ்ரயேல் மற்றும் யூத தேசம் இல்லாது, தங்களுடைய சொந்த இடம் உண்டு. எபிரெயர் 10:1,9 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, யூதர்கள் பின்பற்ற முயன்ற பிரமாணங்கள் மற்றும் பலிகளை விட்டு





அவர்கள் ஒரு "புதிய வழி" என்று அடையாளப்படுத்தப் படும் "புதிய தேசத்தில்" நுழைகிறார்கள்,

"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.... இரண்டாவதை நிலைநிறுத்து வதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார். "(எபிரெயர் 10:1,9)

தேவன் இப்போது ஒரு புதிய சிருஷ்டியை உருவாக்குகிறார். இயேசுவின் பலியின் மேலுள்ள விசுவாசத்தின் அடிப்படையில்"புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை "(எபிரெயர் 10:21) உண்டுபண்ணினார். சபைக்கான இந்த புதிய வழி, பழைய யூத வழிகளில் இருந்து ஒரு தெளிவான துண்டிப்பை காட்டுகிறது. ஆசியா மைனரில் இந்த புதிய தொடக்கம் பொருத்தமாக அடையாளப்படுத்தப்படுகிறது. இன்று நம் கிறிஸ்தவ நடைப்பயணத்திற்கு எபேசு ஒரு அற்புதமான முன்மாதிரியாக இருப்பதால் இந்த புதிய தொடக்கத்திற்கு ஒரு நல்ல ஆரம்பமாக விளங்குகிறது.

### நட்சத்திரம் அல்லது தூதர்

சபைகளை வழிநடத்த, சபைக்கு ஒரு தூதர் (நட்சத்திரம் அல்லது தூதர்) இருந்தார். ஒவ்வொரு "நட்சத்திரமும்" அதற்கு குறிப்பிடப்பட்ட காலத்தில், சபையை வழிநடத்தும் ஒளி, சத்தியம் மற்றும் வழிகாட்டுதலை வழங்குகிறது. (வெளிப்படுத்தல் 1:20) யூத தேசத்தை வெளியேற்றி, சபையில் புறஜாதிகளை ஒட்டவைத்ததே, எபேசு சபையில் நடந்த வரையறுக்கும் நிகழ்வாகும். இஸ்ரயேல் தேசம் தகுதியற்றதாக நிராகரிக்கப்பட்டது. துவக்கத்திலேயே தேவன் சபையில் புறஜாதியினரை அழைத்தார். பவுல் புறஜாதியினருக்கு அப்போஸ்தலனாக இருந்தார். (ரோமர் 11:13, கலாத்தியர் 1:16, 2:7) அவர் புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியை எழுதினார். யூதர்களுக்கும், புறஜாதி சகோதரர்களுக்கும் ஒரே விதமாக ஊழியம் செய்து, இந்த புதிய வழியில் அவர்களை ஒன்றாக வழிநடத்தினார். எனவே அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபைக்கு பிரகாசமான ஒரு நட்சத்திரமாக, அதன் தூதராக இருந்தார்.




இயேசுவே நீண்டகாலமாக எதிர்பார்த்த உண்மையான மேசியா என்பதையும், அவர் மேலுள்ள விசுவாசத்தினால் மட்டுமே ஒருவர் உண்மையாகவே ஜீவனை கண்டடைய முடியும் என்பதையும் பவுலின் மூன்று மிஷனரி பயணங்கள் சாட்சி அளித்தது. பவுல் சபைக்கு எழுதிய பல நிருபங்களினால், அனைவருக்கும் தொடர்ந்து ஊழியம் செய்தார். மேலும் இந்த யுகத்தின் முடிவு வரைக்கும் அவருடைய ஒளி இன்னும் நமக்கு பிரகாசிக்கிறது.

இந்த முதல் சபையின் காலம் யூதர்களின் உபத்திரவத்தாலும் அடையாளம் காணப்படுகிறது. இந்த புதிய மதத்தினால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டதாக உணர்ந்தனர், குறிப்பாக அப்போஸ்தலர்கள் முன்னாள் யூதர்களாக, யூத ஆலயங்களுக்கு வந்து சென்றனர். கிறிஸ்தவர்கள் தங்கள் பரிசுத்த ஸ்தலங்களை இழிவுபடுத்துவதாக யூதர்கள் எண்ணினார்கள். ஆகவே அவர்கள் அந்த புதிய துளிர்களை அகற்ற முனைந்தனர்.

**எபேசு பட்டணம்**

பழைய எபேசு பட்டணம், ஆசியாவின் இந்த பகுதியின் தலைநகரமாக இருந்தது. இது பணக்கார, மாறுபட்ட, மற்றும் பழங்கால ஏழு உலக அதிசயங்களில் ஒன்றான தீனாளின் (Artemis (Diana)) கோவில் இருந்தது. இந்த செழிப்பு அதன் துறைமுகத்தின் வழியாக வந்தது, இது அதிகமான வணிக வர்த்தகங்களை வழங்கியது. எபேசுவில் இருந்து வந்த பிரமாணங்களும், கட்டளைகளும், ஆரம்ப சபைக்கு வழங்கப்பட்ட அப்போஸ்தலர்களின் போதனைகளைச் சரியாகக் குறிப்பிடுகின்றது. பவுலோடும் கூட, மற்ற அப்போஸ்தலர்களும் ஆரம்பகாலக் கிறிஸ்தவ இயக்கத்தைப் போஷித்து, வளர்த்து, பராமரித்து, வழிநடத்தினார்கள். இது ஆவிக்குரிய ரீதியில் வளமான காலமாக இருந்தது.

**வெளிப்படுத்துதல் 2:1** இல், வெளிப்படுத்துதலின் எழுத்தாளரான அப்போஸ்தலன் யோவான், இந்த முதலாம் சபையின் தூதனான அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஒரு செய்தியை அனுப்பும்படி அறிவுறுத்தப்பட்டார். யோவான் ஒரு முகவராக இருந்தாலும், அந்த செய்தி யோவானுடையது அல்ல. ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலது கரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறவர் ...." இடமிருந்து செய்தி வந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஏழு சபைகளை பராமரித்து, கவனித்துக்கொண்டிருக்கும், நம் தலையாகிய இயேசுவிடமிருந்து செய்தி வந்தது. யோவான் இந்த செய்தியை பவுலுக்கு எழுதிய நேரத்தில் (கிபி 96ல்) எபேசு சபையின் முதல் சகாப்தம் நிறைவடைந்தது. சிமிர்னா சபையின் காலம் தொடங்கியது. எபேசு சபைக்கு கொடுக்கப்பட்ட செய்தி பிற்காலத்தில் வரும் சபைகளுக்கும் கொடுக்கப்பட்டது, இதனால் முழு சுவிசேஷ யுகத்தின் ஆவிக்குரிய சித்திரத்தை முழுமையாக பெற்றுக்கொள்வார்கள் என்பதே இதன் பொருளாகும். வெளிப்படுத்துதல் 2இல் எபேசு சபைக்கு சொல்லப்பட்ட செய்தியை அளித்த வசனங்களை கவனித்து, நம்முடைய தினசரி வாழ்க்கையில் பயன்படக்கூடிய பயன்பாடுகளை பிரித்தெடுப்போம்.

**பாராட்டு**

**2 மற்றும் 3** வசனங்களில் இயேசு சபையினரிடம் நேரடியாக அவர்களின் நல்ல செயல்களையும் வளர்ச்சியையும் பாராட்டி பேசினார். அவர் சார்பாக சபையின் எல்லா நல்ல கிரியைகளையும் (வேலைகள்), அவருக்காக நிறைவேற்றும் நற்கிரியைகளில் அவர்களின் நீண்ட உழைப்பையும் முயற்சிகளையும் அவர் நன்கு அறிந்திருந்தார். நீடிய பொறுமையோடு சகித்து மகிழ்ச்சியோடு அவை செய்யப்பட்டது.

எபேசு சபையின் மத்தியில் இருந்த உலக தாக்கங்களையும் கள்ள போதகர்கள் பரப்பும் தப்பறையான விசுவாசங்களையும் (பொய்கள்) தவிர்த்தது போல வேறு எந்த சபையின் காலத்திலும் நடக்கவில்லை. அப்போஸ்தலரின் அதிகாரத்தைத் தேடும் பல நபர்கள் இந்த நேரத்தில் தோன்றினர், ஆனால் அவர்களின் முயற்சிகள் எதிர்க்கப்பட்டது, அவர்கள் பொய்யர்களாகக் காட்டப்பட்டனர். "உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்று 1யோவான் 4:1 கூறுகிறது. அப்போஸ்தலர்கள் இருக்கும் வரையில் பரிசுத்தமான உபதேசங்களுக்கான விழிப்புணர்வு உண்மையாக காக்கப்பட்டது. அவர்கள் சென்றவுடன் அது வேகமாக சீரழிந்தது. அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் தவறான போதனைகள் பெருகி, இன்று வரை பரவலாக காணப்படுகிறது. இன்று இது நமக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையாகும், ஆனால் இதற்கு எபேசு சபை ஒரு சிறந்த உதாரணமாக இருந்தது.

எபேசு சபையின் பிரயாசத்தையும், சிரமங்களையும் சகித்த சோதனைகளையும், அவருடைய நாமத்திற்காக (வெளிப்படுத்தல் 2:3) சகித்துக்கொண்டு, பொறுமையோடு இருந்து, தொடர்ந்து சோர்வு இல்லாமல் அதே வேகத்தில் அவர்கள் சென்றதை இயேசு நன்கு அறிந்திருந்தார்.

### கவலைகள்

ஆரம்பகால சபை மிகவும் விசுவாசமாக இருந்தபோது, அவர்கள் தங்கள் முதல் அன்பை விட்டுவிட்டார்கள். **வசனம் 4** இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, அவருடைய சீஷர்கள், அப்போஸ்தலர்கள் உட்பட சிதறடிக்கப்பட்டு, ஏமாற்றமும் அடைந்தனர். அவர்களால் எதையும் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இருந்தது. ஆனால் பெந்தெகொஸ்தே நாளில், அவர்கள் சீஷத்துவத்திற்காகும் செலவையும், கிறிஸ்துவுக்காக தங்களுடைய ஜீவனை அர்ப்பணிப்பதற்கான மதிப்பையும் நன்கு அறிந்துகொண்டார்கள். சிலுவையில் இருந்து பெந்தெகொஸ்தே வரைக்கும் உள்ள அந்த நேரத்திற்குள், மீட்பின் கிரயத்தைக் குறித்த தேவனுடைய திட்டம், சபையின் அழைப்பு, வரக்கூடிய இராஜ்யம் மற்றும் முன்பு அவர்கள் அறிந்திராத காரியங்களைக் குறித்து இயேசு அவர்களுக்கு கற்பித்தார். நம்மை போல அவர்களும் தேவனுடைய திட்டத்தை நேசித்தார்கள்.



Jesus with seven stars in his right hand

காலப்போக்கில், அந்த அன்பு மங்கிவிட்டது. ஒருவேளை அவர்களின் கவனம் கிறிஸ்துவிலிருந்து விலகி, அவர்கள் ஆதியில் கொண்ட அன்பையும் அவர்களின் உண்மையான நோக்கத்தையும் விட்டு

ஒவ்வொருவருடைய தவறுகள் மற்றும் குறைபாடுகளின் மேல் திசைத்திரும்பி, அவைகளை அவர்கள் பேசுவதற்கு வழிவகுத்திருக்கலாம். கிறிஸ்துவிடம் விழிப்புடன் இருந்து, மாம்சத்தின் கவனச் சிதறல்களாகிய - ஒருவரை ஒருவர் தீர்ப்பிடுதல், அயலவர்களை அவமதித்தல் மற்றும் பரிசுத்தமான அன்பின் பார்வையை இழத்தல் - போன்றவைகளை தவிர்ப்பது இன்று நம் அனைவருக்கும் உள்ள பாடமாகும்.

### பரிகாரம்

ஆதியில் கொண்டிருந்த அன்பை நினைத்து, மனந்திரும்பி, அதன் இடத்திற்கு திரும்புவதன் மூலம் இதை சரிசெய்யலாம் என்று எபேசு சபைக்கு சொல்லப்பட்டது. **(வசனம் 5)** இந்த அறிவுரைகளைப் பின்பற்றுவதன் மூலம், கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் ஆதியில் கொண்டிருந்த அன்பின் மேல் கவனம் செலுத்த உறுதியாக இருக்கலாம். தேவனுடைய திட்டத்தையும், அது உருவாக்கிய நல்ல செயல்களையும் நாம் முதலில் புரிந்துகொண்டு, கண்டுபிடிக்கப்பட்ட புதிய சத்தியங்களுக்கு நாம் கொண்டிருந்த பற்றி எரியும் உற்சாகத்தையும் பக்தி வைராக்கியத்தையும் நாம் முதலில் நினைவில் கொள்ள வேண்டும். பின்பு நம்முடைய "விழுந்து போன" செயல்களுக்கு மனம் வருந்த வேண்டும். தேவனுடைய பார்வையில் நாம் அனைவரும் விழுந்துபோனவர்கள் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். நாம் மற்றவருடைய தவறுகளில் கவனம் செலுத்தக்கூடாது. மாறாக, நம்முடைய பாவங்களை முழுமையாக மறைத்த முதல் அன்பாகிய இயேசுவை நாம் நோக்கி பார்க்கவேண்டும். ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என்று இயேசு நமக்கு கொடுத்த ஒரு புதிய கட்டளையைக் குறித்து நாம் ஆச்சரியப்படவேண்டாம். (யோவான் 13:34, 15:10) இக்காரிங்களைச் செய்வதன் மூலம் மட்டுமே நாம் ஆதியில் கொண்ட அன்பிற்கு திரும்ப முடியும். நாம் மனந்திரும்பவில்லை என்றால், உலகில் ஒளி தாங்குபவர்களாக நம் நிலை நம்மிடமிருந்து எடுக்கப்படும். எபேசு சபையில் சிறப்பாக செயல்பட்ட மற்றொரு விஷயம் **6ஆம் வசனத்தில்** சுட்டிக்காட்டப்படுகிறது. இயேசுவும் வெறுக்கிற, "நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை" அவர்கள் தவிர்த்தார்கள். "நிக்கொலாய்" என்ற வார்த்தை நிக்கோஸ் (*nikos*,) என்ற வார்த்தையில் இருந்து வந்தது. இதற்கு வெல்வது அல்லது அடக்குதல் என்று பொருள். மேலும் லாவோஸ் (*laos*) என்பதற்கு ஜனங்கள் என்று பொருள். சொல்லர்த்தமாக, இது ஜனங்களை வென்று அவர்களை ஆளுவதைக் குறிக்கிறது. இதுபோன்ற முறையை யூத அமைப்பில் அவர்கள் கண்டதினால் அப்போஸ்தலர்கள் இதை ஸ்தாபிக்கவோ, அல்லது சபையில் தலைமை குருக்கள் என்ற பழக்கத்தை நடைமுறையில் அனுமதிக்கவே இல்லை. அப்போஸ்தலர்களுக்கு அதிகாரம் இருந்தபோதிலும், நிக்கோலாய் மதஸ்தரின் கிரியைகளை தவிர்த்து, அவர்கள் அனைவரையும் சமமாக, கிறிஸ்துவுக்குள் (கலாத்தியர் 3:28, 29, Iபேதுரு5:3)சகோதர சகோதரிகளாக கருதினார்கள்.

### வாக்குத்தத்தம்

இறுதியாக, **7ம் வசனத்தில்** "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற

ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் " என்ற வாக்குத்தத்தம் ஆண்டவரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற விடாமுயற்சியுடன் கவனமாக தேடி ஜெயங்கொள்பவர்களுக்கு வழங்கப்பட்டது. விசேஷமாக, வெளிப்படுத்தலில் உள்ள ஒவ்வொரு செய்தியும் குறிப்பாக எழுதப்பட்ட அந்தந்த சபைக்கு மதிப்புமிக்கதாக இருந்தது. கூடுதலாக, இந்த சிறப்பு செய்திகள் சுவிசேஷ யுகம் முழுவதிலும் வாழும் சபை அங்கத்தினருக்கும் பொருந்தும். ஆவியினால் கொடுக்கப்பட்ட இந்த அறிவுரைகளை அனைவரும் கவனிக்க வேண்டும்.

எபேசு சபைக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமானது முழுமையான ஜீவன், அதாவது அழியாமை. இங்கு பயன்படுத்தப்பட்ட அடையாளம், ஜீவவிருட்சம். இது பூமிக்குரிய ஏதேனை நமக்கு நினைவூட்டுகிறது. ஒருவேளை இந்த காலத்தில் ஜீவனைப் பற்றிய புரிதல் மீண்டும் பெறப்பட்டதினாலும், அதன் உண்மையான மதிப்பும் அதன் முழு அர்த்தமும் புரிந்து கொள்ளப்பட்டதினால், இந்த வாக்குத்தத்தம் எபேசு சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம்.

இன்று நாம் வாழ்வதற்கு எபேசு சபை ஒரு ஆழமான உதாரணம். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் எபேசு சபையை மனதில் கொண்டு, அவர்களுடைய தவறுகள் மற்றும் அவர்கள் பெற்ற பாராட்டுதல்களிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய ஆதி அன்பாகிய இயேசு மற்றும் அவருடைய ஈடுபலியின் வல்லமையின் மேல் கவனம் வைப்போம். நாம் விழிப்புடன் இருந்து, மற்றவர்கள் மேலுள்ள தவறுகளைத் தேடக்கூடிய சோதனையில் இருந்து நம்மை தவிர்த்து, உண்மையான உபதேசங்களை நம் இருதயத்தில் வைத்திருப்போம். மேலும் நம்முடைய சகோதரர்களை ஊக்குவித்து, ஆதரித்து அவர்களுக்காக ஜெபிப்போம்.

காலம் இரண்டு

# சிமிர்னா சபை


Jeffrey Earl

"சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் - முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது" (வெளிப்படுத்தல் *2:8*)


எபேசுவின் இடிபாடுகளுக்கு அல்லது அழிவுகளுக்கு வடக்கே சுமார் 40 மைல் தொலைவில், மேற்கு துருக்கியின் கடற்கரை உள்ள ஏஜீயனில் Aegean நவீன நகரமான இஸ்மிர் Izmir உள்ளது. இந்த நகரம் 11 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப குடியேற்றத்திற்கு முந்தைய ஒரு பழங்கால வரலாற்றைக் கொண்டுள்ளது. கிமு 580இல் லிடியாவின் இராஜா அலியாட்டேஸால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்படும் வரை இது பல்வேறு படையெடுப்புகளால் இது பல முறை கைமாறியது. கிட்டத்தட்ட 300 ஆண்டுகளாக அது வெறிச்சோடி இடிந்து கிடந்தது. பழைய நகரத்தின் தெற்கே சுமார் 2.3 மைல் (3.7 கிமீ) தொலைவில் உள்ள புதிய நகரமாகிய சிமிர்னா, மகா அலெக்சாண்டரினால் கட்டப்பட்டது. அதன் செல்வம் மற்றும் வர்த்தகத்தின் காரணமாக, இது மிக அற்புதமான நகரங்களில் ஒன்றாகும் என்றும் ஆசியா மைனரில் மிகச் சிறந்த நகரம் என்றும் கூறப்படுகிறது. ஆரம்பகால சபையின் தந்தைகளாகிய பாலிகார்ப் Polycarp மற்றும் ஜரினியஸ் Irenaeus (மற்றும் சொற்பொழிவாளராகிய Aristides அரிஸ்டைட்ஸ்) சிமிர்னாவைச் சேர்ந்தவர்கள். பல ஆண்டுகளாக அங்கு பாலிகார்ப் ஆயராக இருந்தார்.

சிமிர்னா என்ற பெயருக்கு "மைர் myrrh " என்று பொருள். இது வடகிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் அரேபியா பகுதிகளில் உள்ள ஒரு முள் மரணத்திலிருந்து எடுக்கப்படும் ஒரு வகை நறுமணப் பிசின். மத்தேயு, மாற்கு மற்றும் யோவான் சுவிசேஷங்களில் மைர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வார்த்தை அரபு வார்த்தை மாராவில் இருந்து பெறப்பட்டது. இதற்கு "கசப்பாக இருக்கவேண்டும்" என்பது பொருள். சூர் வனாந்திரத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் மூன்று நாட்கள் தேடிய பிறகு கசப்பான நீரை மட்டுமே கண்டுபிடித்த இடத்தை விவரிக்க இதே போன்ற எபிரெய வார்த்தையான மாரா பயன்படுத்தப்பட்டது. (யாத்திராகமம் 15:22-25) தேவன் ஒரு மரத்தை எடுத்து தண்ணீரில் போடச் சொன்னார். அது அவர்களுக்கு ஜீவனை கொடுக்கும் மதுரமான தண்ணீரை கொடுத்தது. ஆரம்பகால கிறிஸ்தவர்களின் பல்வேறு துன்புறுத்தல்களால் இந்த சபையின் காலம், கசப்பாக இருந்தது.

சிமிர்னா சபையைக் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் வெளிப்படுத்தல் 2: 8-11இல் எழுதினார். " (8) சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் - முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது.(9)உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும் தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல், சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன். (10) நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.(11) ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன், ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது."

### சிமிர்னா சபையின் தூதன் யார்?

**8 ஆம் வசனத்தின்** முதல் பகுதி, " சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் " என்று கூறுகிறது. யார் இந்த தூதன் அல்லது தூதுவர் ? மேலும் இந்த செய்தி எப்போது பொருந்தும் ? இந்தக் காலகட்டம் ரோமானிய பேரரசர் நீரோவுக்குப் பிறகு கிபி 70 இல் தொடங்கும் என்று ஆரம்பகால வேத அறிஞர்கள் மற்றும் பல வேத மாணவ மூப்பர்கள் காண்கிறார்கள். சிலர் கிபி 96க்குப் பிறகு தொடங்குவதாக காண்கிறார்கள். பெரும்பாலானோர், கிபி 303 முதல் 313வரை டையோக்லீஷியனால் தொடங்கப்பட்ட பத்து வருட துன்புறுத்தலுக்குப் பிறகு அது முடிவடைந்தது என்று ஒப்புக்கொள்கிறார்கள். இது கான்ஸ்டன்டைனின் ஒருங்கிணைந்த ஆட்சியுடன் அதவாது அவரது இராணுவப் போட்டியாளர்களைத் தோற்கடித்த பிறகு, 313ல் மிலன் கட்டளையோடு முடிவடைந்தது. இது ரோம சாம்ராஜ்யத்தில்


The Apostle John

கிறிஸ்தவத்திற்கு சகிப்புத்தன்மையை அறிவித்தது. மற்றவர்கள் கிபி 325இல் நீசியா ஆலோசனை கூட்டத்துடன் இந்த காலம் முடிவடைவதாக காண்கிறார்கள். பொதுவாக அப்போஸ்தலனாகிய யோவான் இந்த சபைக்கு தூதராக காணப்படுகிறார். யோவான் புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியை - தனது சுவிசேஷம், நிருபங்கள் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றை எழுதினார். சிலர் பாலிகார்ப்பை சிமிர்னாவின் தூதராக கருதுகின்றனர். இவர் யோவானின் மாணவரும், சிமிர்னாவில் 86 வருடங்கள் வாழ்ந்து ஆயராக பணியாற்றியவர். "பாலிகார்ப் அப்போஸ்தலர்களால் அறிவுறுத்தப்பட்டு, கிறிஸ்துவைக் கண்ட பலருடன் தொடர்பு கொண்டார்" என்று பாலிகார்பின் சீஷனாகிய இரானியஸ் எழுதினார். மேலும் "பிலிப்பியர்களுக்கு பாலிகார்ப்பின் நிருபம்" (கிபி 155 இல் இருக்கலாம்) என்று பாலிகார்ப் எழுதினார். சபைக்கான அறிவுரைகள் மற்றும் நயமான கண்டிப்புகள், உதவியாளர்களுக்கும் மூப்பர்களுக்கும் தேவையான தகுதிகள் மற்றும் வாலிபரான ஆண்கள் மற்றும் பெண்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற ஆலோசனைகள் அவரது நிருபத்தில் இருந்தது. அவருடைய நிருபத்தில் கூறப்பட்டவற்றில் பெரும்பாலானவை ஏற்கெனவே அப்போஸ்தலனாகிய பவுலினால் உரையாற்றப்பட்டது. அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, கிமு 166இல் (சிலர் 155 என்று சொல்கிறார்கள்.) உயிருடன் எரிக்கப்பட்டார். பண்டைய ரோம நாட்டின் ஏகாதிபத்திய அதிகாரம் கொண்ட ஆளுநருக்கு முன், கிறிஸ்துவை நிந்திக்கும்படி கேட்டபோது, அவர்,"86 வருடங்களாக நான் அவருக்கு சேவை செய்தேன், அவர் எனக்கு எந்த தவறும் செய்யவில்லை. நான் எப்படி என் இராஜாவையும், என் இரட்சகரையும் தூஷிக்க முடியும்? " என்று பதில் அளித்தார்.

**முந்தினவரும் பிந்தினவரும்**

"முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது " என்று வெளிப்படுத்தல் 2:8 ன் இரண்டவாது பகுதி கூறுகிறது. இந்த வாத்தைகள் கிறிஸ்துவை குறிக்கிறது. (வெளிப்படுத்தல் 22:13ஐ ஒப்பிட்டு பார்க்கவும்) இவர் கல்வாரியில் மரித்து, மூன்றாம் நாளில் பிதாவாகிய யேகோவா தேவனால் மகிமையிலும் கனத்திலும் உயர்த்தப்பட்டார். (எபேசியர் 1:20-22)

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, மகா அலெக்சாண்டருக்கு முன்பு ஏறக்குறைய 300 வருடங்கள் சிமிர்னா பாழடைந்திருந்தது. பல நூற்றாண்டுகளாக பாழடைந்து, பிறகு அது பெரும் சிறப்பிற்கு மீண்டும் கட்டப்பட்டதினால், "மரித்திருந்து பிழைத்தவருமானவர்" என்ற வார்த்தைகள் நகரத்திற்கும் பொருந்தக்கூடிய மற்றொரு அர்த்தமாகவும் இருக்கலாம் என்று சிலர் பரிந்துரைத்துள்ளனர்.

**வசனம் 9,** "உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும் தங்களை யூதரென்று


The martyrdom of Polycarp

சொல்லியும் யூதராயிராமல், சாத்தானுடைய கூட்டமாயிருக் கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன். பெரும் இன்னல்களையும் துன்புறுத்தலையும் அனுபவித்த சிமிர்னா சபையின் காலத்தை இது நன்கு விவரிக்கிறது.

அந்த நேரத்தில் சபை உலகப் பொருட்களால் நிறைந்ததாகக் கருதப்படவில்லை. ஆனால் அவர்கள் விடாமுயற்சிக்கு ஒரு பரலோக வெகுமதியைப் பெறுவார்கள். "யூதரென்று (ஆவிக்குரிய இஸ்ரயேலர்) சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் " என்று கிளைவகுப்பாரால், சபை எண்ணிக்கையில் விரிவடைந்ததை விவரிக்கலாம். இரண்டாவது சபையில் சொல்லப்பட்ட (களைகளை) இந்த குறிப்பு, மத்தேயு 13ம் அதிகாரத்தின் ஏழு வரிசையான உவமைகளில், களைகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது உவமை இதற்கு இணையாக உள்ளது.

இருப்பினும், இங்கு நேரடியான அர்த்தங்களும் இருக்கலாம். "யூதர்களும் புறஜாதியாரும்.. (பாலிகார்ப்) உயிருடன் எரிக்கப்பட வேண்டும் என்று ஒருமனதாகக் கோரினார்கள்....ஒவ்வொருவரும் முழு வேகத்தோடு கட்டைகளை எடுக்க ஓடினார்கள்.... குறிப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் யூதர்கள் சுறுசுறுப்பாக இருந்தனர். (*The Lives of the Saints*, Sabine Baring-Gould, 1877, page 381) துன்புறுத்திய இந்த யூதர்கள் விசுவாசமுள்ள, உண்மையான இஸ்ரயேலர்களாக இருக்க மாட்டார்கள். "இஸ்ரயேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரயேலரல்லவே" (ரோமர் 9:6)

**வசனதட 10,** "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். பெரும் துன்பங்களை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கு இது உற்சாகத்தையும் ஆறுதலையும் அளிக்கிறது. இவர்கள் ரோமானிய அதிகாரிகளால்

சோதிக்கப்படுவார்கள். புறஜாதி தெய்வங்களை வழிபடும் உண்மையுள்ளவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் லிபெல்லஸ் *libellus* ("libel " (அவதூறு) என்ற வார்த்தை இதிலிருந்து பெறப்பட்டது) என்று எழுதப்பட்ட ஒரு அறிக்கையில் இருந்தது. தேவனை வழிபடவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டால், குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு புறஜாதி பலிபீடத்தின் மீது தூபத்தை வீசுவதன் மூலம் பதிலளிக்க முடிந்தது. சில கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் இருந்து திரும்பி, இதை செய்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொண்டனர். மற்றவர்கள் மரிக்கும் வரை விசுவாசமாக இருந்தனர். "அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" என்று இயேசு இவர்களுக்கே இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தை கொடுத்தார்.

**சிமிர்னா சபையின் துன்புறுத்தல்கள்**

பேரரசர் மார்கஸ் ஆரேலியஸ் Marcus Aurelius (கிபி 161-180) அவருடைய ஞானம் மற்றும் நல்லொழுக்கத்திற்காகவும் பேர் பெற்றவராக இருந்தார் என்றும் ஆனால் கிறிஸ்தவர்களை அவர் மிகவும் குறைவாக மதித்தார் என்றும் மதச்சார்பற்ற எழுத்தாளர்கள் கருதினார்கள் என்று வரலாற்றாசிரியர் Mosheim மோஷெயம் கூறினார். மேலும் அவர், "நீரோவின் ஆட்சியைத் தவிர்த்து, ஞானியும், நல்லொழுக்க முள்ள மார்கஸ் ஆரேலியஸின் ஆட்சியை விட, கிறிஸ்தவர்கள் மிகவும் கொடூரமாகவும் சாவுக்கேதுவானதாகவும் நடத்தப்பட்ட வேறெந்த ஆட்சியும் இல்லை. கிறிஸ்தவர்கள் மிகக் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் மற்றும் அவர்கள் குற்றமற்ற அப்பாவிகளாக இருந்தபோதிலும், மிகவும் காட்டுமிராண்டித்தனமான வடிவங்களில் மரணத்தைச் சந்திக்க விதிக்கப்பட்டனர்..... ஊழல் நீதிபதிகள்... அம்மக்கள் மீது குற்றம் சுமத்துவதற்காகப் போலியான குற்றஞ்சுமத்துபவர்களை லஞ்சம் கொடுத்து ஏற்படுத்தினார்கள்.... இந்தப் பாதிக்கப்பட்டவர்களில் ... புனிதமான மற்றும் மரியாதைக்குரிய சிமிர்னாவின் ஆயரான பாலிகார்ப் Polycarp / மற்றும் ஜஸ்டின் மார்ட்டர் Justin Martyr ஆகியோரும் இருந்தார்கள். தங்களுடைய பாடம் மற்றும் தத்துவத்திற்காக மிகவும் புகழ்பெற்றவர்கள்." என்றும் அவர் எழுதினார். "பாலிகார்ப் என்பவர் எரிக்கப்பட்ட பாகஸின் Pagus,மலைப்பகுதியானது,



Perpetua and Felicitas, martyrs for their faith

ஒரே நேரத்தில், ஆயிரத்து ஐநூறு வாக்குமூலர்கள் கொல்லப்பட்டதால், அவர்களின் இரத்தத்தால் சிவந்துவிட்டது, மற்றொரு சமயத்தில் எண்ணூறு பேர் அங்கு கொல்லப்பட்டனர்" என்று J. A. Seiss, in *The Apocalypse, Revelation of Jesus Christ*, கூறுகிறது.

கிபி 202 இல் ரோமானிய பேரரசர் செப்டிமஸ் செவெரஸ் Septimus Severus கிறிஸ்தவர்களாக மதமாறுவதற்கு தடை உத்தரவை வெளியிட்டார். கட்டளை கடுமையாக அமல்படுத்தப்பட்ட நகரங்களில் ஒன்று கார்தேஜ் Carthage . கார்தேஜில் 203ல், நடந்த துன்புறுத்தலின் போது பெர்பிட்டுவா Perpetua (ஒரு உன்னதமான குடும்பத்தின் மகள்) மற்றும் பெலிசிடாஸ் Felicitas (அவரது ஊழியக்காரி) ஆகிய இரண்டு இளம் பெண்களின் துன்புறுத்தல் மற்றும் மரணத்தை வரைபடமாக வரலாற்றாசிரியர் Milman மில்மேன் விவரித்தார். பெர்பெட்டுவாவின் தந்தை அவளது குடும்பம் மற்றும் கைக் குழந்தைக்காக கிறிஸ்தவ விசுவாசத்தை கைவிடும்படி பல முறை வற்புறுத்த முயன்றார். அவளது தீர்ப்புக்கு பிறகு, "நாங்கள் மிருகங்களுக்கு கையளிக்கப்பட்டோம், மிகுந்த உற்சாகத்துடன் சிறைக்கு திரும்பினோம்." என்று அவள் எழுதினாள். அங்கு அவள் கண்ட ஒரு தரிசனத்தையும் பதிவு செய்தாள் -" நான் மிக உயரமான ஒரு ஏணியைப் பார்த்தேன்... அது பரலோகத்திற்கு சென்றது, ஆனால் ஒரு நேரத்தில் ஒருவர் மட்டும் அதில் ஏறி செல்லும் அளவுக்கு அந்த பாதை **மிக குறுகலான** இருந்தது. ... பிறகு நான் ஒரு பெரிய தோட்டத்தைப் பார்த்தேன்... அதில் ஒரு வயதான மனிதர் மேய்ப்பனின் உடையில் அமர்ந்திருந்தார்... அவரைச் சுற்றி நின்ற ஆயிரக்கணக்கான ஜனங்கள் வெள்ளை ஆடைகளை அணிந்திருந்தனர். அவர் தலையை உயர்த்தி, என்னைப் பார்த்து, "என் குழந்தையே , நீங்கள் இங்கு வந்தது மகிழ்ச்சி" என்று கூறினார். பின்னர் அந்த பெண்கள் ஒரு அறைவட்ட பள்ளத்தில் மந்தையைப் போல் கூட்டிச் செல்லப்பட்டு, வலைகளில் தொங்கவிடப்பட்டு, ஆத்திரமடைந்த காளைகளினால் கொன்று போடப்பட்டார்கள். குற்றம் சாட்டப்பட்ட ஆண்கள் சிறுத்தைகள் மற்றும் கரடிகளால் கிழிக்கப்பட்டனர். பெர்பெட்டுவாவின் கடைசி வார்த்தைகள் அவளுடைய சகோதரனுக்கு "விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும்" என்ற ஒரு மென்மையான அறிவுரையாக இருந்தது.

"பத்து நாட்கள் உபத்திரவம்" (வசனம் 10), 303 முதல் 313 வரை பேரரசர் டையோக்லீஷியனின் Diocletian கீழ் தொடங்கப்பட்ட பத்து வருட தீவிர துன்புறுத்தலுக்கு ஒத்திருக்கிறது. சில நேரங்களில் பத்து என்ற எண் வேதத்தில் முழுமையை குறிக்கிறது. கானானை வேவு பார்க்க 40 நாட்கள் ஆனது. ஆனால் வனாந்தரத்தில் இஸ்ரயேலர்கள் 40 வருடங்கள் அலைந்தார்கள். இவ்வாறாக, தீர்க்கதரிசனத்தின் நாட்கள் பெரும்பாலும் வருடங்களாக நிறைவேறுகின்றன என்று பரிந்துரைக்கப்படுகிறது. (எண்ணாகமம் 14:34)மேலும்,

எசேக்கியேல் 4:6இல், எசேக்கியேலுக்கு எத்தனை நாட்கள் குறிக்கப்பட்டதோ, இஸ்ரயேலுக்கும் அதே வருடங்கள் குறிக்கப்பட்டது. இந்த பத்து வருட துன்புறுத்தல் குறிப்பாக மிகவும் தீவிரமானது என்று வரலாற்றாசிரியர்கள் விவரிக்கிறார்கள். கொடூரமான சித்திரவதைகள் விதிக்கப்பட்டது, நெருப்பினாலும் மூழ்கடிப்பதினாலும் கொடூரமாக கொல்லப்பட்டனர். ஒரே மாதத்தில் 17,000 பேர் கொல்லப்பட்டதாகவும், எகிப்தில் மட்டும் 144,000 கிறிஸ்தவர்கள் வன்முறையால் இறந்ததாகவும் சிலர் பதிவு செய்கின்றனர். கிறிஸ்தவம் என்ற பெயரையும் மதத்தையும் அழித்ததாக கொலையாளிகள் பெருமை பேசினார்கள்.

**வசனம் 11** "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் - ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது." இதுவே முதல் முறையாக "இரண்டாம் மரணம் " என்று வெளிப்படுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல் 20: 6, 20:14 மற்றும் 21: 8இல் இது மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல் 20:4-6 இல் உள்ள மொழி 11 வது வசனத்தைப் போன்றது. வன்முறையான மரணத்திற்கு உட்படுத்தப்பட்ட உண்மையான விசுவாசிகள் "இரண்டாவது மரணத்திற்கு" பயப்படத் தேவையில்லை என்று இரண்டு பகுதிகளும் உறுதியளிக்கின்றன. அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில், உயர்ந்த நிலையில், ஆவிக்குரிய ஜீவிகளாக திரும்புவார்கள்.

**சுருக்கம் மற்றும் முடிவு**

புறஜாதி தெய்வங்களை வழிபடும் அரசாங்கத்தினால் சிமிர்னா சபை பெரும் துன்புறுத்தலைச் சகித்தது. "மரண பரியந்தம்" இந்த துன்புறுத்தல்களை சகித்து உண்மையாக இருப்பவர்களுக்கு "ஒரு ஜீவ கிரீடத்தை" இயேசுவின் செய்தியில் வாக்களிக்கப்பட்டது. பின்னர் போப்பின் அமைப்பின் ரோமின் கீழ் வந்த துன்புறுத்தல்களுடன் ஒப்பிடும்போது, புறஜாதியான ரோமின் கீழ் டையோக்லீஷியனின் Diocletian "மகா துன்புறுத்தல்களை" தவிர, மற்றவைகள் அடிக்கடி நிகழாமலும், சற்று குறைவாகவும் இருந்தது. ஒருவர் வசிக்கும் இடத்தைப் பொறுத்தே துன்புறுத்தலின் அளவு சார்ந்திருந்தது. சில நீதிபதிகள் ஆணையைத் தீவிரமாக அமல்படுத்தினர், சில நீதிபதிகள் இணக்கமாக இருந்தனர். அதற்கேற்றபடி நீண்ட காலங்கள் அமைதி இருந்தது. பின்னர், இருண்ட யுகத்தில் பல நூற்றாண்டுகளாக துன்புறுத்தல் நீடித்தது.

## சபை மூன்று

# பெர்கமு



Daniel Szarkowicz

"பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்....." (வெளிப்படுத்தல் *2:12*)

### பெர்கமு பற்றிய சுவாரஸ்யமான உண்மைகள்

அப்போஸ்தலனாகிய யோவான் தனது கடிதத்தை எழுதியபோது, பெர்கமு மிகவும் செழிப்பானதாகவும் ரோமானியப் பேரரசின் மிகவும் செல்வாக்கு மிக்க நகரங்களில் ஒன்றாகும். கலாச்சாரம் மற்றும் கலையின் முக்கிய மையமாக இது அறியப்பட்டிருந்தது. துருக்கிய கடலோரத்தில் ஒரு காற்று வீசும் மலையின்மேல், நீளமான ஏஜீயன் கடலை நோக்கியிருக்கும் இந்நகரத்தின் சிறப்பை இன்று, ஈர்க்கக்கூடிய நினைவுச்சின்னங்கள் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. நகரின் அரங்கம்,10,000 க்கும் மேற்பட்ட பார்வையாளர்களைக் கொண்டுள்ளது. அதன் ஒலி அற்புதமானது. மேடையில் ஒரு சுற்றுலாப் பயணி ஒரு சாதாரண குரலில் பேசினாலும், மிக உயர்ந்த இருக்கையில் இருப்பவரும் கேட்கலாம். அலெக்ஸாண்ட்ரியாவில் உள்ள பெரிய நூலகத்திற்கு அடுத்தபடியாக இந்த நகரின் நூலகம் குறிப்பிடத்தக்கது. பாப்பிரஸ் மற்றும் காகிதத்தோல் தொகுதிகளின் 200,000 ஆவணங்கள் வரை பட்டியலிடப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ரோமானிய தளபதி மார்க் ஆண்டனி, கிளியோபாட்ராவுக்கு திருமண பரிசாக இதை வழங்கும் அளவுக்கு இது மத்திய தரைக்கடல் முழுவதும் மிகவும் பிரபலமாக இருந்தது.

பெர்கமு ஜனங்கள் கண்டுபிடிப்பாளர்களாகவும் புதுமைப்பித்தர்களாகவும் இருந்தனர். எடுத்துக்காட்டாக, அவர்கள் அன்று தோலினால் துல்லியமான காகிதத்தோலை செய்தார்கள். அவர் உலகின் முதல் மனநல மருத்துவமனை கட்டினதாக பழங்கால பதிவுகள் காட்டுகின்றன. மேலும் அஸ்க்லெபியன் Asclepius என்றழைக்கப்படும் ஒரு குணப்படுத்தும் மையத்தை, கிரேக்க தெய்வமாகிய அஸ்கலெபியஸின் மகிமைக்காக கட்டினார்கள். இன்று நன்கு அறியப்பட்ட சின்னமாகிய "பாம்பினால் சுற்றப்பட்ட ஒரு கோலை" அஸ்கெல்பியஸ் கையில் எடுத்துச் சென்றார். அஸ்கெல்பியன், மருத்துவமனை மற்றும் சுகாதார மையத்தின் ஒரு கூட்டாக



Constantine

இருந்தது. குளியலிலிருந்து, மற்ற சுத்திகரிப்பு, இன்னும் மிக பெரிய அறுவை சிகிச்சைகள் வரைக்கும் எல்லாவற்றையும் நோயாளிகள் அங்கு பெற்றார்கள். அதை நடத்திய பாதிரியார்கள், அவர்களின் நற்பெயரைப் பாதுகாக்க, எந்த ஒரு தீவிர நோயையும் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே "மரணம் நுழைய தடைசெய்யப்பட்டுள்ளது" என்று நுழைவாயிலில் ஒரு வாசகம் காணப்பட்டது.

பெர்கமுவின் ஜனங்கள் ஏராளமான கிரேக்க மற்றும் ரோமானிய தெய்வங்களை வழிபட்டனர். ஒரே தேவனையும், இயேசு கிறிஸ்து அந்த தேவனுடைய குமாரன் என்ற நம்பிக்கையோடு கிறிஸ்தவம் வந்தபோது, அந்த செய்தியை அமைதிப்படுத்துவதற்கான முயற்சிகள் தீவிரமாக இருந்தது.


ஒரு நிலைப்பாட்டில் இருந்து காணும்போது, பெர்கமு மிகவும் உயர் மற்றும் மேம்பட்ட நகரமாக இருந்தது. மறுபுறம் ரோமானியப் பேரரசிலுள்ள நகரங்களில், அது மிகவும் இருண்டதும், மிகுந்த மூடநம்பிக்கைகளைக் கொண்டதும், நகரங்களை குளிர்விக்கிறதாகவும் இருந்தது.

### பெர்கமுவில் உள்ள சபை

பெர்கமுவில் உள்ள சபை ("பூமிக்குரிய உயர்வு") மூன்றாவதும், கிறிஸ்தவ வளர்ச்சியின் காலத்தின் ஏழு நிலைகளில், 313 வில் இருந்து 1157 வரையில் ஒரு நீண்ட காலப் பகுதியை கொண்டது. முந்தி யூதர்களாலும், பின்பு புறஜாதியான ரோமானியர்களால் சபை மிகுந்த மற்றும் கடுமையான துன்புறுத்தல்களை அனுபவித்த இந்த காலத்தை இருண்ட யுகத்தின் நள்ளிரவு என்று கருதலாம். பெர்கமு சபை பெயரளவிலான மரபுவழியின் ஆழமான இருளில் சென்றது. சுவிசேஷத்தின் ஒளி கிட்டத்தட்ட அணைக்கப்பட்டது. பெயரளவிலான சபை சமுக அங்கீகாரத்தையும், ஜனங்களின் நன்மதிப்பையும் பெற்று பூமிக்குரிய அளவில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்தது. மற்ற விதைகளை விட சிறிய விதையாகிய ஒரு கடுகு விதையின் வளர்ச்சி, ஆகாயத்தில் உள்ள பறவைகள் வந்து தங்கும் அளவுக்கு ஒரு பெரிய மரமாக வளர்ந்தது என்று மத்தேயு 13:31-32வில், இயேசு

விவரித்தபோது, இந்த நிலையைக் குறித்து அவர் முன்னறிவித்தார். இந்த பெயரளவிலான சபையின் வளர்ச்சியை இது சித்தரிக்கிறது.

பிரபலமடைந்த போப் அமைப்பு, மதசார்பான முதல் பொது கூட்டத்திற்கு வழிவகுத்தது. இது முதன்மையாக "திருத்துவத்தின்" பிரச்சனையையும் நம்பிக்கைகளின் அறிக்கையை creed of beliefs. உருவாக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நேரத்தில் ஒரு அலெக்ஸ்ஸாண்ட்ரிய பாதிரியார் ஏரியஸ், முன்வந்து, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று கூறி, பிதாவை குமாரனை விட்டு பிரித்து காண்பித்தார். (நிரூபித்தார்) பெர்கமு சபை எதை எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான களத்தை அந்த சபையின் தூதனுடைய செய்தி அமைத்ததினால், அந்த காலத்தின் துவக்கத்திலேயே அந்த தூதன் இருந்திருக்கவேண்டும். எனவே ஏரியஸ் இந்த சபையின் தூதன் என்று கூறுவது நியாயமானது. சத்தியத்திற்காக அவரது நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டால், அவரது "பெரும் விவாதம்" உண்மையான சபை, பெயரளவிலான சபை மற்றும் ரோம சாம்சாஜ்யத்தின் முழு போக்கிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. மேலும் நாம் பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய இயேசுவையும் எவ்வாறு நம்புகிறோம் என்பதிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.




### வரலாற்று பின்னணி

புறமதத்திலிருந்து பெயரளவிலான கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய முதல் ரோமானிய பேரரசர் மகா கான்ஸ்டன்டைன். 313ல் அவர் அனைவருக்கும் மத சுதந்திரத்தை வழங்கினார், கிறிஸ்தவத்தையும் குற்றமற்றதாக்கி, சபைக்குள் கிறிஸ்தவ பேரரசர் என்ற பதவியை ஏற்றுகொண்டார். இது பெயரளவிலான சபையின் அதிவேக வளர்ச்சிக்கான சரியான சூழலை உருவாக்கியது. 325 இல் இவர் ஆரம்ப கால சபை மூப்பர்களின் முதல் மதவாத விவாதத்தை நீசியாவில் (இன்றைய இஸ்னிக் Iznik, துருக்கி) ஏற்படுத்தினார். பேரரசிற்குள் கருத்துக்களைப் பிரிக்கும் இறையியல் வாதங்களைத் தீர்ப்பதே அவரது நோக்கமாக இருந்தது.

இது நீசியன் விசுவாசத்தை ஸ்தாபித்ததோடு முடிவடைந்தது. இது இயேசு தேவனுக்கு இணையாகவும் அவருடன் நித்தியத்திற்கு தேவனாக இருக்கும் உபதேசத்தை வெளிப்படையாக உறுதிப்படுத்தியது. கிறிஸ்து தேவனைப் போல் இல்லாமல், அவர் பிறந்ததினால் அவருக்கு ஒரு துவக்கம் இருக்கிறது என்று ஏரியஸ் கிறிஸ்துவின் முழு தெய்வீகத்தை கேள்விக்குள்ளாக்கியதால் அந்த சர்ச்சை தொடங்கியது. அறிவு சார்ந்த இறையியல் விவாதமாகத் தொடங்கி பேரரசு முழுவதும் பரவியது.

இது ஆதிகால கிறிஸ்தவத்தில் பிரிவுகளை அச்சுறுத்தியது.

### ஏரியஸ் (256-336)

ஏரியஸின் வாழ்க்கை மற்றும் போதனைகள் பற்றிய தகவல்கள் வரையறுக்கப்பட்டுள்ளது, ஏனெனில், அவருடைய பெரும்பாலான எழுத்துக்கள், நீசியா ஆலோசனை கூட்டத்தால் கண்டனம் செய்யப்பட்ட பின்னர் அழிக்கப்பட்டது. அவரது எதிரிகளின் எழுத்துக்களில் மட்டுமே அவருடைய போதனைகளின் ஒரே பதிவு காணப்படுகிறது. ஏரியஸ், லிபியன் Libyan மற்றும் பெர்பர் Berber (வடமேற்கு ஆப்பிரிக்கா) வம்சாவளியைச் சேர்ந்தவர். அவரது தந்தையின் பெயர் அம்மோனியஸ், அந்தியோகியாவின் லூசியனின் Lucian மாணவர். லூசியன் ஒரு மதிப்பிற்குரிய கிறிஸ்தவ ஆசிரியராக இருந்தார். அவர் தனது விசுவாசத்திற்காக இரத்தசாட்சியாக மரித்தார். ஏரியஸ் தனது பல நம்பிக்கைகளை லூசியினிடம் இருந்து பெற்றார். எரியஸ் ஒரு உயரமான, தனித்துவமான தோற்றம் கொண்ட வெளிப்படையானவர் என்று அவருடைய எதிரிகள் அவரை குறித்து வர்ணித்தனர். அவரது நடத்தை, சுய ஒழுக்கம் மற்றும் புத்திசாலித்தனம் ஆகியவற்றால் பலர் ஈர்க்கப்பட்டனர். நீசியா ஆலோசனை கூடுகையில் சுமார் இரண்டு மாதங்களாக வேதாகமத்தில் உள்ள வசனங்களில், "என் பிதா என்னிலும் பெரியவராக இருக்கிறார்." (யோவான் 14:28), மற்றும் "சர்வ சிருஷ்டிக்கும் முதற் பேறானவர்" (கொலோசேயர் 1:15) போன்றவற்றை மேற்கோல் காட்டி வாதிட்டார். குமாரனை விட தந்தை பெரியவர் என்றும், குமாரன் தந்தையாகிய தேவனுக்கு கீழ்ப்பட்டவர் என்றும் அவருக்கு குமாரன் சமமாகவோ நித்தியமாகவோ இல்லை என்று ஏரியஸ் வலியுறுத்தினார். இயேசு இல்லாத காலம் இருந்தது என்று அவர் வாதிட்டார். எனவே, தேவனுடைய குமாரனாகிய இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர், இயற்கையாகவே நித்திய பிதாவாகிய தேவனை விட இயேசு தாழ்ந்தவர் என்றும் அவர் வாதாடினார்.

எனினும், இது அங்குள்ள கூட்டத்தார் மத்தியில் சிறுபான்மையினரின் கருத்தாக இருந்தது. கிறிஸ்துவும் தேவனைப் போன்ற தெய்வீக இயல்புடையவர் என்ற விசுவாச பிரமாணத்தை கையெழுத்திட ஏரியஸ் மறுத்து தோல்வியடைந்தார். இதை தொடர்ந்து, நீசியாவின் கூடுகை ஏரியஸை மதங்களுக்கு எதிரான கொள்கையில் வெறியனாக அறிவித்தது. ஏரியஸ் மற்றும் இறுதிவரை அவருக்கு

ஆதரவாக இருந்த இரண்டு வலுவான ஆதரவாளர்களை, அவர்களின் அலுவலகங்களில் இருந்து அகற்றி, நாடு கடத்தினார்கள். இருப்பினும், "ஏரியஸின் கொள்கைகளின்" பெரும் வாக்குவாதங்கள் அங்கு முடிவடையவில்லை. இது இன்னும் 60 ஆண்டுகள் தொடர்ந்தது. மர்மமான சூழ்நிலையில் கான்ஸ்டான்டினோப்பிளில் ஏரியஸ் திடீரென இறந்தார். அவரது எதிரிகளால் விஷம் கொடுக்கப்பட்டு அவர் மரித்திருக்கலாம் என்று நவீன அறிஞர்கள் கருதுகின்றனர்.

### சபைக்கான செய்தி

● "பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது - உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாம லிருந்ததையும் அறிந்திருக்கிறேன்."(வெளிப்படுத்தல் 2:12-13)

இந்த செய்தியின் துவக்கத்தில், கிறிஸ்து அந்த சபையின் காலத்தில் உள்ள விசுவாசமுள்ள பரிசுத்தவான்களை "இருபுறம் கருக்குள்ள பட்டயத்தால்" ஸ்திரப்படுத்துகிறார். (எபிரெயர் 4:12) இது தேவனுடைய வார்த்தையாகிய பழைய மற்றும் புதிய ஏற்பாடாகும். இவைகள் உண்மையை பாதுகாப்பதற்கும், பிழையை ஒழிப்பதற்கும் திறமையாக பயன்படுத்தப்பட வேண்டும். உலகளாவிய பகுத்தறிவுக்கும் நிகழ்ச்சி நிரல்களை எதிர்த்துப் போரடுவதற்கும் அவர்கள் வேதத்தை பயன்படுத்தவேண்டும் என்று அவர் ஆணையிடுகிறார். அந்தக் காலத்து விசுவாசமுள்ள பரிசுத்தவான்கள் "என் நாமத்தை உறுதியாக பற்றிகொண்டு "மிகவும் வைராக்கியமாக இருந்தனர்.

ஆனால் கோதுமை மற்றும் களைகள் உவமையில், சொல்லப்பட்ட "நல்ல விதைகளை" போல உண்மையான சபை பெயர் சபையால் முறையாக விழுங்கப்பட்டது. (மத்தேயு13:24-30)வயலின் நல்ல விதைகளை விட களைகள் மிஞ்சி வளர்ந்து, அறுவடை நேரம் வரை அதிகமான வளர்ச்சி அடைந்தது.

ரோமை குறிக்கும்,"சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் அவர்கள் குடியிருப்பது" பரிசுத்தவான்களின் விசுவாசம் இன்னும் போற்றத்தக்கதாக உள்ளது. புறமதத்தின் வீடாகவும், கோட்டையாகவும் இருந்த ரோம், பின்னர் வத்திக்கானில் போப்பமைப்பின் மையமாக மாறியது. "உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் " என்ற காரியம் பரிசுத்தவான்கள் மீது வழக்குத் விசாரணைகளின் தீவிரத்திற்கு சாட்சியமளிக்கிறது. அந்திப்பா (போப்புக்கு எதிராக) - "யாரையும் தந்தை என்று அழைக்காதீர்கள்" என்ற இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, எதிர்ப்பவர்களைப் பற்றி பேசுகிறது. (மத்தேயு23:9)

● "ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு, விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரயேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு. அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக் கொள்ளுகிறவர்களும் உன்னிடத்தி லுண்டு, அதை நான் வெறுக்கிறேன். நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்." (வெளிப்படுத்தல் 2:14-16)

பிலேயாம் தேவனுடைய புறஜாதி தீர்க்கதரிசியாக இருந்தார். அவர் தனிப்பட்ட ஆதாயத்திற்காக, இஸ்ரயேலை வழிதவறச் செய்து, அந்நிய தேவர்களை வணங்கி, புறஜாதி பெண்களோடு வேசித்தனம் செய்வதற்குமான ஆலோசனையை பிலேயாம் பாலாக் இராஜாவுக்கு வழங்கினான். இதன் காரணமாக தேவன் தேசத்தை வாதையினால் அடித்தார். அநேகர் மரித்தார்கள். (எண்ணாகமம் 22-25)

நீசியாவில் நடந்த முதல் மதம் சார்ந்த கூட்டத்தோடு, மகா கான்ஸ்டன்டைன் சபை மற்றும் அரசின் சட்டவிரோதமான கூட்டனியைத் தொடங்கினார் -ஆவிக்குரிய விபசாரம். கான்ஸ்டன்டைன் சபையை கூட்டி, அதற்குத் தலைமை தாங்கி, முடிவை அறிவித்தார். அவர் இறப்பதற்கு முன்பு வரை ஞானஸ்நானம் பெறாததால், அவரது நம்பிக்கைகள் மற்றும் கிறிஸ்தவத்தைப் பற்றிய அவருடைய புரிதல் விவாதிக்கப்படலாம்.

முதல் ஆலோசனை சங்கத்தின் முடிவு மற்றும் அதன் மரபுவழியின் கோட்பாட்டு நியாயாதிபதிகள், உண்மையான சபைக்கு ஒரு "தடைக் கல்லானது". பெயரளவிலான சபையின் சார்பில், கிறிஸ்தவ கருத்துக்களுடன் மதமற்ற பழக்க வழக்கங்கள் கலக்கப்படுதல் மற்றும் பொருள் ஆதாயம் மற்றும் மத அதிகாரத்திற்காக புறமத சடங்குகளுடன் மத விழாக்களை ஒன்றிணைத்தல், ஆகியவை ஆவிக்குரிய வேசித்தனத்தின் ஒரு வடிவமாகும். ஆதிக்கத்திற்கான போராட்டம் தேவாலயத்தின் அனைத்து அணிகளுக்கும் பரவியது. இந்த எண்ணம் "நிக்கோலாய் மதஸ்தினரின் போதனைகளில்" வெளிப்பட்டது. நிக்கோலாய் என்ற பெயர் கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டது : "நிக்கோஸ்" மற்றும் "லாய்" *nikos* and *laos*; .இதற்கு "ஜனங்கள் மீது வெற்றி"என்று பொருள். (Strong's G3532) இது விசுவாசிகள் மீது ஆதிக்கம் செலுத்துவதைக் குறிக்கிறது. இதனால் ஒரு




சிலருக்கு மட்டுமே வேதாகமத்தை அணுகவும் படிக்கவும், பின்னர் மற்றவர்களுக்கு கற்பிக்கவும் அதிகாரம் கிடைத்தது. இது விசுவாசிகள் தங்களுக்கான விஷயங்களை படித்து நிரூபிக்க வேண்டியதில் இருந்து விடுவித்தது. அதற்கு பதிலாக, தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு சிறந்த தகவல் கிடைத்தது என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். மேலும் அவர்களே ஆவிக்குரிய தலைவர்களா இருப்பார்கள் என்று பொருள்படுத்திகொண்டனர். பவுல் கொடுத்த அறிவுரைகளுக்கு (2தீமோத்தேயு 2:15) எதிராக இது விசுவாசிகளின் படிப்பு, வளர்ச்சிக்கான தனிப்பட்ட பொறுப்புகளை நீக்கியதால், இது விசுவாசிகளுக்கு மிகவும் தீங்கு விளைவித்தது.

- "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன், ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது."(வெளிப்படுத்தல் 2:17)

அந்த காலத்தின் உண்மையான சபைக்கு கொடுத்த ஆசீர்வாதம் எச்சரிக்கைகளைப் போலவே ஆச்சரியமாக இருக்கிறது. உடன்படிக்கைப் பெட்டியில் மறைந்திருக்கும் பொன் பாத்திரத்தில் இருந்த "மறைக்கப்பட்ட மன்னா", கிறிஸ்துவோடு மறைந்திருக்கும் உண்மையுள்ள பரிசுத்தவான்களுக்கு ஜீவனை கொடுக்கும் ஆவிக்குரிய உணவு மற்றும் அழியாத தன்மையைப் பற்றி பேசுகிறது. "வெள்ளை கல்", தேவன் தன்னுடையவர்கள் யார் என்று அவர் அறிந்திருப்பதை நமக்கு உறுதியளிக்கிறது. அவர் அவர்களின் இருதயங்களின் தூய்மையைக் காண்கிறார். பரிசுத்த ஆவியினால் தேவன் அவர்களை முத்திரையிட்டு, அவர்களின் அன்பானவரின் பெயராகிய கிறிஸ்துவின் பெயரை அவர்களுக்குக் கொடுக்கிறார்.

## முடிவுரை

குழப்பம் நிறைந்த, அபாயகரமான நம்முடைய நாட்களில், காலங்களையும், தேவனுடைய கண்ணோட்டத்தின் படி நம்முடைய பங்கையும் புரிந்து கொள்ள நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அப்போது ஏரியஸ் அரசியல் ரீதியாக வளைந்து கொடுப்பதற்கு அழுத்தப்பட்டது போல தற்போதைய கலாச்சாரத்திலும், அரசியல் அதிகாரத்திற்கு வளைந்து கொடுக்கும்படி அழுத்தம் கொடுக்கப்பட்டதால், இடமளிக்க அழுத்தம் கொடுப்பதை காண்கிறோம். பெர்கமு சபையின் தூதரான ஏரியஸின் உதாரணம் ஒரு மாதிரியாகவும், விசுவாசம் மற்றும் விடாமுயற்சிக்கு ஒரு உந்துதலாகவும் உள்ளது. நம் நம்பிக்கைகளுக்காக நிற்பதற்கு உறுதியும் தைரியமும் தேவைப்படுகிறது. நாம் தேவனாகிய பிதாவையும் அவருடைய குமாரனாகிய இயேசுவையும் எப்படி நம்புகிறோம் என்பதில் ஏரியஸ் மற்றும் அவருடைய "பெரும் விவாதம்" மிக முக்கியமானது. வேதத்தின் அழகான மற்றும் முக்கியமான சத்தியமாகிய ஈடுபலியை, அதாவது ஒரு பரிபூரண மனிதராகிய இயேசு கொடுத்த சரிநிகர் சமான விலையைப் பற்றி புரிந்துகொள்வதற்கான அடித்தளத்தை இது அமைக்கிறது.

சபை நான்கு

# தியத்திராவின் சோதனைகள்



*David Rice*

"உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும் உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்" (வெளிப்படுத்தல் *2:19*)

சபை வரலாற்றில், 1157 முதல் 1517 வரை தியத்தீரா சபை ஒரு இருண்ட காலமாக இருந்தது. அது கனிவான கிறிஸ்தவ சீஷத்துவத்திற்கு இருண்டதாக இல்லாமல், இயேசுவின் சீஷர்களின் மேல் இருண்ட சுமைகளாகவும் விசுவாசத்தின் சோதனைகளாகவும் இருந்தது. இது போப் அமைப்பின் மிகப் பெரிய ஆதிக்கத்தின் காலமாக இருந்தது. இந்த காலம் இஸ்ரயேல் தேசத்திற்குள் பாகால் வணக்கத்தை கொண்டு வந்தவளும், யேகோவா தேவனின் தீர்க்கதரிசிகளை உபத்திரவப்படுத்தினவளுமான பொல்லாத அரசி யேசபேல் அடையாளப்படுத்துகிறாள்.

வெளிப்படுத்தல், 2:20"ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு, என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரியானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்."


இந்த காலத்தின் உண்மையுள்ள தலைவர்களில் ஒருவர் பீட்டர் வால்டோ ஆவார், அவர் இந்த சபையின் தூதராகவும், இயேசுவின் வலது கையில் உள்ள ஏழு "நட்சத்திரங்களில்" ஒன்றாகவும் பரவலாக ஏற்றுக்கொள்ளப் பட்டார். பீட்டர் வால்டோவின் ஊழியத்திற்கான தேதிகள் மாறுபடுகிறது. சகோதரர் வால்டோவுடன் தொடர்புடைய வால்டியர்கள் என்ற குழுவை, மதங்களுக்கு எதிரான கொள்கையில் மதவெறியர்கள் என்று 1160 முன்பே ரோம திருச்சபை தீர்ப்பளித்தற்கான சான்றுகளை சகோதரர் பிராங்க் ஷைலோ *The Keys of Revelation*, page 53, வில் தந்துள்ளார். போப்பமைப்பிற்காக "மனந்திரும்புவதற்கான காலம்" தீர்க்கதரிசனமாக 360 வருடங்களாக குறிப்பிடப்பட்டால், (வெளிப்படுத்தல் 2:21) இது 1517லில் சீர்திருத்தத்தை அடைந்திருந்தால், இது 1160 இல் தியத்தீரா காலத்தின் தொடக்கத்தை அறிவுத்துகிறது. ஆனால் 1160க்கு நீண்ட காலத்திற்கு முன்பு அல்ல.

சபை வரலாற்றின் இந்த பகுதி பொருத்தமானதாக இருக்கலாம். இடைக்கால ரோம சாமராஜ்யத்தோடு தொடர்போடு, "சாக்ரம்" 'sacrum' என்ற சொல்(அதாவது பரிசுத்தம், அர்ப்பணிக்கப்பட்டது என்ற பொருள்) முதலில் 1157 லில் பிரடெரிக் பார்ப்ரோசாவின் Frederick I Barbarossa கீழ் பயன்படுத்தப்பட்டது...... 1157க்கு முன் இந்த ஆட்சி எல்லை வெறுமனே ரோம சாம்ராஜயம் என்று குறிப்பிட்டது. (பரிசுத்த ரோம பேரரசு சங்கம்.) அப்போது ஆங்கிலேயரில் பிறந்த ஹட்ரியன் (ஆட்ரியன்) Hadrian (Adrian) போப் IV (1154-1159) ஆக இருந்தார்.

இந்த காலகட்டத்தில் கிறிஸ்த சோதனைகளின் எடுத்துக்காட்டுகள், "காலம் சமீபமாக இருக்கிறது" (பக்கம் 334-335) என்ற தொகுப்பில் இருந்து தொடர்கிறது. "1160 ஆம் ஆண்டில் ஆக்ஸ்போர்டு ஆலோசனை கூட்டத்தில் வால்டென்சஸ் Waldenses நிறுவனத்தை ஒப்படைத்தார்கள். இவர்கள் கேஸ்கொனியில் Gascony (பிரான்ஸ்) இருந்து இங்கிலாந்திற்கு மதசார்பற்றவர்களிடம் தண்டனைக்காக குடிபெயர்ந்தவர்கள். அதன்படி, ஹென்றி II என்ற இராஜா, ஆண்களையும் பெண்களையும் பகிரங்கமாக சாட்டையால் அடிக்க உத்தரவிட்டான். பின்னர் சிவப்பாக சூடாக்கப்பட்ட இரும்பினால் கன்னத்தில் முத்திரை குத்தப்பட்டு, கடும் குளிரிலே அவர்களை அரை நிர்வாணமாக வெளியே துரத்திவிட்டான். மேலும் அவர்களுக்கு இரக்கம் காட்டவோ, சிறிதும் ஆதரவளிக்கவோ யாரும் அனுமதிக்கப்படவில்லை."

கிபி 1224லில் ஜெர்மானிய பேரரசன் ஃப்ரெட்ரிக் ஒவ்வொரு மதவெறியர்களுக்கும் தண்டனை வழங்கினான். ஜெர்மனியின் பேரரசரான ஃபிரடெரிக் கி.பி 1224 - ஆம் வருடத்தில், அனைத்து வகையான மதபேதம்





Statue of Peter Waldo

உடையவர்களை உயிருடன், நெருப்பில் சுட்டெரிக்கப்படவும், அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படவும் மற்றும் அவர்களின் சந்ததியினர், துன்புறுத்துபவர்களாக மாறாவிட்டால், அவர் கீர்த்திக்கு ஆளாக்கப்படவும் செய்தார். பிரான்சின் அரசரான லூயி, கி.பி 1228 -ஆம் வருடத்தில் மதபோதகங்களை ஒழிப்பதற்கான சட்டங்களை வெளியிட்டார் மற்றும் அவர்களின் மரணதண்டனையை அமல்படுத்தினார். இவர் டூலூஸ் Toulouse என்னும் ,இடத்தின் கோமகன் ஆன ரேமண்ட் என்பவரை நண்பனோ அல்லது அடிமையோ, எவரையும் விட்டுவைக்காமல், தனது ஆதிக்கத்திலிருந்து மதபேதங்களை ஒழித்து க்கட்டும்படி கட்டாயப்படுத்தினார்.

### இயேசுவைப் பற்றிய விளக்கம்

வெளிப்படுத்தலில் உள்ள சபைகளுக்கு சொல்லும் ஒவ்வொரு செய்தியும் இயேசுவைப் பற்றிய விளக்கத்துடன் தொடங்குகிறது. இதில் பெரும்பாலானவைகள் வெளிப்படுத்தல் 1:13-16 லில் அவரைப் பற்றிய அறிமுகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. "தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது.." (வெளிப்படுத்தல் 2:18) என்று தியத்தீராவுக்கான விளக்கம் கூறிகிறது. போப் அமைப்பின் நாட்களிலே, இயேசுவின் உணர்திறன் பெற்ற பார்வை, தீமையிலிருந்து நல்லதை வேறுபடுத்தியது. அவருடைய பாதங்கள் "மெருகேற்றப்பட்ட வெண்கலம்" போல் இருப்பது அவரது தீர்ப்பு நீதியில் ஸ்திரப்பட்டிருப்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

இந்த காலத்தின் கொடுமைகள் தெய்வீக தீர்ப்பைப் பெறும் என்று 23ம் வசனம் நமக்கு உறுதியளிக்கிறது. "அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன், அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும், அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்."

### ஆவிக்குரிய கொள்ளை நோய்

சபை வரலாற்றின் இந்த இருண்ட காலம், நான்காம் முத்திரையில் வெளிர் பச்சை அல்லது மங்கின (சில நேரங்களில் மரணத்துடன் தொடர்புடை நிறம்) நிறமுள்ள குதிரையினால் சித்தரிக்கப்பட்டுள்ளது. "அதில் ஏறி இருந்தவனுக்கு மரணம் என்று பெயர், பாதாளம் அவன்பின் சென்றது."(வெளிப்படுத்தல் 6:8) ஏனெனில் மத உலகம் இந்த காலகட்டத்தில் விசுவாச துரோகியான போப் அமைப்பினால் ஆளப்பட்டது, ஆவிக்குரிய உயிர்ச்சத்திற்கு அதிகமான குறைபாடுகள் இருந்தது.

வசனம் 23 ல், "அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன், " இங்கு "கொல்லுவேன்" என்ற சொல் கொள்ளை நோயைக் குறிக்கிறது. இது அங்கீகரிக்கப்படாத காரணத்தினால் மரணத்தைக் கொண்டு வந்தது. NASB இல் இது "கொள்ளைநோய்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தியத்தீரா காலத்தில்,போப் அமைப்பின் ஊழலை எதிர்க்கும் துணிவு அல்லது ஊக்கம் இல்லாதவர்கள் பலருக்கு ஆவிக்குரிய மரணம் வந்தது. இந்த சூழ்நிலைகளை நாம் சமாளித்திருப்போமா? அன்று தடுமாற்றம் அடைந்த கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் செய்தி, ஆழ்ந்த சுயபரிசோதனையின் மூலமாக நமக்கும் பயனளிக்க வேண்டும்.

அந்த அன்பான பரிசுத்தவான்களுக்கு இயேசுவின் செய்தி லேசான உற்சாகமளித்தது. முதலில் சோதனையில் அவர்களின் பக்தியை பாராட்டியது. பின்னர், அப்போது நிலவிய சபையின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் அவர்களுக்கு உடந்தையாக இருக்கக்கூடாது என்று அவர்கள் எச்சரிக்கப்படடார்கள்.

நம்மேல் இருக்கும் சுமையைவிட அவர்களின் சுமை கடுமையாக இருந்தது. அன்று பாவமுள்ள தலைமை குருக்களுக்கு எதிர்த்து நின்று தீப்பிழம்புகளில் அழிந்தவர்களை போல, நம்முடைய விழுந்துபோன மாம்சத்தின் வழிகளுக்கு எதிராக உறுதியாக நின்றும் இயேசுவின் வார்த்தைகளுக்கு நாம் பதிலளிக்க முடியும். இரண்டாவதாக, நம்முடைய ஆவிக்குரிய சேவைக்காகவும், நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வழிநடத்துதலைப் பற்றிய சிறந்த புரிதலுக்காக நாம் தயவோடும், மகிழ்ச்சியுடனும், ஆனால் உறுதியாகவும் நிற்க முடியும்.

தியத்தீராவை அச்சுறுத்தும் ஆவிக்குரிய கொள்ளை, நேரடியாக வெளிப்பட்ட, கருப்பு மரணத்திற்கு Black Death இணையாக இருந்தது. அந்த புபோனிக் Bubonic கொள்ளை நோய்,"மனித வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட கொடிய தொற்றுநோய்... (அது ) யூரேசியா மற்றும் வட ஆப்பிரிக்காவில்

75-200 மில்லியன் ஜனங்கள் இறப்புக்கு வழிவகுத்தது, ஐரோப்பாவில் 1347 முதல் 1351 வரை... ஐரோப்பியாவில் உச்சத்தை எட்டியது. 1300 அளவுக்கு ஐரோப்பிய ஜனங்களை மீட்க 1500 வரை ஆனது." (Black Death, Wikipedia).

## பீட்டர் வால்டோ

வால்டோவின் வாழ்க்கையின் பல விவரங்கள் தெரியவில்லை, ஆனால் "அவர் ஒரு பணக்காரர் என்று கூடுதலான ஆதாரங்கள் தெரிவிக்கின்றன மேலும், அவர் லியோனின் (பிரான்ஸ்) துணி வியாபாரியாகவும், கற்றறிந்த மனிதராகவும் இருந்தார்." 1160 ஆம் ஆண்டிற்கு முன்பு, அவர் தொடர்ச்சியான நிகழ்வுகளால் ஈர்க்கப்பட்டார். (1) புனிதராகிய அலெக்சியஸின் Alexius வாழ்க்கை பற்றிய ஒரு பிரசங்கங்கள், (2)உருமாற்றம் மிக பெரிய குற்றமாக கருதப்பட்டபோது அது நிராகரிக்கப்பட்டது. (3) இராவிருந்தில் திடீர் என்று ஒரு நண்பரின் மரணம். "அவர் ஒரு தீவிர கிறிஸ்தவ வாழ்க்கையை வாழத் தொடங்கினார். அவருடைய சொத்துக்களை மனைவிக்கு கொடுத்துவிட்டு, மீதமுள்ள பொருட்களை ஏழைகளுக்கு அவர் தானமாக வழங்கினார்." (Peter Waldo, Wikipedia)

"தேவனையும் உலக பொருட்கள் ஆகிய இரண்டு எஜமானர்களுக்கு ஒருவராலும் சேவை செய்ய முடியாது" என்பதை அறிந்திருந்த வால்டோ பகிரங்கமாக கற்பித்தார். போப்பின் அதிகப்படியான செயல்களைக் கண்டனம் செய்தார், மேலும் சுத்திகரிப்பு மற்றும் உருமாற்றத்தை, "வெளிப்படுதலில் சொல்லப்பட்ட வேசியின்" கோட்பாடுகளாகக் கருதினார். யேசபேல் யார் என்று வால்டோ அடையாளம் கண்டதாக தெரிகிறது.

புதிய ஏற்பாட்டை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்க உள்ளூர் மதகுருவை வால்டோ நியமித்தார். லத்தீன் மொழியை தவிர இதுவே முதல் பொதுவான மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. அவரும், அவருடைய ஒரு தோழனும் போப் அலெக்சாண்டரால் II ரோமுக்கு வரவேற்கப்பட்டார். உலகளாவிய ஆசாரியத்துவம், பொது மொழியில் சுவிசேஷம் மற்றும் தன்னார்வ வறுமை ஆகியற்றை மதகுருமார்கள் குழுவிற்கு விளக்கினார். போப் வெளிப்படையாக தனது வறுமையின் சபதத்தை உறுதி செய்தார். ஆனால் வால்டோ பாமரனாக இருந்ததால் பிரசங்கிக்க தடை விதித்தார். அதே ஆண்டு மார்ச் மாதத்தில் நடந்த மூன்றாவது லேட்டரன் Lateran ஆசோனை கூட்டத்தில் வால்டோவின் இயக்கம் அல்ல, அவருடைய யோசனைகள் கண்டனம் செய்யப்பட்டது." (1179) 1180 இல், வால்டோ ஒரு விசுவாச அறிக்கையை உருவாக்கினார், அது இன்னும் உள்ளது.

அந்த மூன்றாவது லேட்டரன் ஆலோசனை கூட்டத்தில், "வால்டியர்களின் பிரசங்கத்தைப் பற்றி தீர்ப்பு வழங்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. அரசியலின் பார்வையில், சபையின் ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படாதவாறு இவ்வாறு முடிவு செய்யப்பட்டது. (Papal Encyclicals.net) பின்னர்1184 இல் லூசியஸ் III ஆல் வால்டோ வெளியேற்றப்பட்டார். அவர் இறந்த பிறகு 1215 இல் நான்காவது லேட்டரன் ஆலோசனை கூட்டம் வால்டியர்களின் கோட்பாடுகளை கண்டனம் செய்தது.

## சாத்தானின் ஆழங்கள்

"தியத்தீராவிலே இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன். உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்." (வெளிப்படுத்தல் 2:24, 25)

பின்னர், சீர்திருத்தத்தில், தேவனுடைய ஜனங்கள் மீது அதிக முன்னேற்றம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் தியாத்தீராவுக்கு, யேசபேலின் நடத்தை மற்றும் பழக்கவழக்கங்களுக்கு எதிராக விசுவாசம் வைப்பதே போதுமானதாக இருந்தது.

"நான் வருமளவும்" என்று கிறிஸ்துவின் வருகையைக் குறிப்பிடுகிறது. பின்னர், சர்தைக்கு,"ஒரு திருடனைப் போல", என்றும் பிலதெல்பியாவுக்கு "நான் சீக்கிரமாக வருகிறேன்" என்றும், லவோதோதிக்கேயாவுக்கு "நான் வாசலில் நின்று தட்டுகிறேன்" என்றும் இயேசுவின் வருகையைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு, தியத்தீராவின் இருண்ட காலத்திலிருந்து, கிறிஸ்துவின் வருகை பற்றி, ஏழாம் சபையாகிய லவோதிகேயாவில் அவருடைய பிரசன்னம் வரையில் அடுத்தடுத்த குறிப்புகள் உள்ளது.

"சாத்தான்" என்ற வார்த்தைக்கு எதிரி அல்லது எதிர்ப்பவன் என்று அர்த்தம், மேலும் வெளிப்படுத்தலில் அடிக்கடி பயன்படுத்தப்படும் போது, அது பெயர் சபையின் மூலம் எதிரியின் எதிர்ப்பைக் குறிக்கிறது. இவ்வாறு, "சாத்தானின் ஆழங்கள்" என்ற இந்தவெளிப்பாடு, இந்த காலகட்டத்தில் போப்பமைப்பின் வலிமைக்கு பொருத்தமானதாக உள்ளது.

இந்த சபையின் பரிசுத்தவான்களுக்கு வாக்களிக்கப்பட்ட வெகுமதி - தேசங்களை ஆட்சி செய்வதாகும்.

"அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான், அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள்" (வெளிப்படுத்தல் 2:27) போப் அமைப்போடு அரசியல்


வல்லமைகளினால் பதிக்கப்பட்ட இந்த சபைக்கு இது பொருத்தமான உத்தரவாதமாகும். உரிய நேரத்தில் உபத்திரவப்படும் பரிசுத்தவான்கள் இந்த உலகின் ஊழல் சக்திகளை அகற்றுவார்கள்.

## விடிவெள்ளி நட்சத்திரம்

"விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன் "(வெளிப்படுத்தல் 2:28) இயேசுவே அந்த விடிவெள்ளி நட்சத்திரம். (2பேதுரு1:19) திரைக்கு அப்பால் அவரே பரிசுத்தவான்களின் பரம்பரைச் சொத்து. இருப்பினும், தியத்தீராவுக்கு பொருத்தமான இரண்டாவது அர்த்தமும் இங்கு உண்டு.

"நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும்" (வசனம்19) இயேசு முன்னதாகவே குறிப்பிட்டிருந்தார். இந்த காலத்தில் ஜான் வைக்லி∴ப் "சீர்திருத்தத்தின் விடிவெள்ளி நட்சத்திரமாக" தோன்றினார். இவர் 1371 முதல் 1384 வரை சத்தியத்தின் சார்பாக ஒரு குறிப்பிடத்தக்க வல்லமையை நிரூபித்தார். பீட்டர் வால்டோவின் ஆவிக்கு இணங்க அவர் பொதுவான குருக்களாக லோலார்ட்ஸ் ˙- ஐ தூண்டினார். மேலும் அவருடைய "லியோனின் ஏழை மனிதர்களுக்கு" கிறிஸ்துவின் எளிய கட்டளைகளைப் போதித்து, வேதத்தின் பகுதிகளை விநியோகித்தார்.

வால்டோவைப் போல வைக்ளி∴பும், பொது மொழியில் வேதத்தை, மொழிபெயர்க்க ஆணையிட்டார். இந்த முறை ஆங்கிலத்தில். வைக்ளி∴ப் ஊழியம் இங்கிலாந்தில் மலர்ந்தது, அதே இடத்தில் இருந்து வந்த போப் இந்த காலகட்டத்தின் தொடக்கத்தில், 1157இல் ஆட்சி செய்தார். "சீர்திருத்தத்தின் விடிவெள்ளி நட்சத்திரம்" ஜான் வைக்லி∴ப் 1384இல் காலமானார், 70 வாரங்கள் கழித்து 1874இல் உண்மையான விடிவெள்ளி நட்சத்திரத்தின் முன்னோடி தோன்றினார்.




விக்லி∴ப் போஹேமியாவைச் சேர்ந்த ஜான் ஹஸின் ஆர்வத்தைத் தூண்டினார். வைக்ளி∴ப் இறந்து 31 வருடங்களுப் பிறகு 1415 இல் அவர் எரிக்கப்பட்டார். ஜான் ஹஸ், தனது கடைசி அனுபவத்தில், தன்னை ஒரு வாத்துக்கு ஒப்பிட்டு, நூறு ஆண்டுகளில் தேவன் குரல் அடங்காத ஒரு அன்னத்தை வளர்க்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். அந்த பிரார்த்தனைக்கு மார்ட்டின் லூதரின் குரலில் பதில் அளிக்கப்பட்டது.

பீட்டர் வால்டோ, ஜான் விக்லி∴ப், ஜான் ஹஸ் மற்றும் அவர்களின் அர்ப்பணிக்கப்பட்ட எளிமையான ஊழியர்களின் உழைப்பினால் ஊட்டப்பட்ட போஷாக்கினாலும், அளித்த ஊக்கத்தினாலும், ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு வந்த சீர்திருத்தத்திற்கு வழி வகுத்தது. { ஜான் வைக்லி∴பின் மரணத்திலிருந்து 1843 இல் வில்லியமின் எதிர்ப்பார்ப்புகள் வரை, 153,153,153 வருடங்களின் கூட்டுத்தொகை என்பதையும் , வைக்லி∴பின் வாரிசான ஜான் ஹஸின் மரணத்திலிருந்து 1874 வரை 153,153,153 வருடங்களின் கூட்டுத்தொகை என்பதையும்1546இல் மார்டின் லூதரின் இறப்பில் இருந்து 1852 இல் சார்லஸ் ரசலின் பிறப்பு வரை 153,153,153 வருடங்களின் கூட்டுத்தொகை என்பதையும் நாம் கவனிக்கிறோம்.}

## ஐந்தாம் சபை சர்தை

# விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்

"ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக் கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு." (வெளிப்படுத்தல் *3:3*)



***Len Griehs***

கிமு 547 இல் கோரேஸினால் கைப்பற்றப்பட்ட வல்லமையுள்ள இராஜ்யமாகிய லிடியாவின் (துருக்கியின் மேற்கு மாகாணங்கள்) தலைநகரமான சர்தை {"சர்தை" என்பதன் பொருள் நிச்சயமற்றது. அர்னால்ட் ஜெனிகோவிட்ச் ஃப்ட்ரூக்டன்பாம், *Footsteps of the Messiah*,(மேசியாவின் அடிச்சுவடுகள்), மூன்று விருப்பங்களை கொடுக்கிறது: மகிழ்ச்சியின் இளவரசர் அல்லது எஞ்சியுள்ள, அல்லது தப்பிப்பவர்கள். கடைசி இரண்டில் ஒன்று சீர்திருத்தத்திற்கு பொருத்தமாக இருக்கலாம்} இருந்தது. சர்தையின் காலத்தில் புறமதம் செழித்தது. முன்னாள் நம்பிக்கைளுக்குத் திரும்பிய பல கிறிஸ்தவர்களுக்காக யோவான் துக்கப்பட்டார். " நீ கேட்டுப் பெற்றுக் கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. " என்று மூன்றாம் வசனம் கூறுகிறது.

சர்தையை அடையாளப்படுத்தும் சுவிசேஷ யுகத்தின் ஐந்தாவது சபைக்கான செய்தி, போப் மார்க்கம், சீர்திருத்தலினால் வருத்தப்பட்ட அந்த நேரத்தைப் பற்றியது. சர்தை சபையின் தூதனாக இந்த எழுத்தாளர் கருதும் மார்டின் லூதர்,1517 இல் சீர்திருத்தத்தைத் தொடங்கினார். அவர் அசுர வேகத்தில் போப் மார்க்கத்தின் கட்டுப்பாட்டின் வீழ்ச்சியை துரிதப்படுத்தினார்.

"ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது வானத்திலிருந்து பூமியின் மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன், அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது.... மேலும் அவர்களைக் கொலைசெய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்து மாதமளவும் அவர்களை வேதனைப் படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது, அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும் " (வெளிப்படுத்தல் 9:1,5)




John Wycliffe, "Morning Star"

ஜான் வைக்ளிஃப் அதிகாரப்பூர்வமாக கத்தோலிக்க தேவாலயத்தை விட்டு வெளியேறவில்லை என்றாலும், அவர் லூதருக்கு சுமார் 150 வருடங்களுக்கு முன், புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்திற்கு முன்னோடியாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டார். போப்புகளுக்கான போட்டியில் தேர்வு நடந்த போது, இங்கிலாந்தில் அவரது புகழின் காரணமாகவும், 1378 ஆம் ஆண்டின் பெரும் பிளவினாலும், விக்லிஃபை "வீட்டுக் காவலில்" வைத்து, தனது மதிப்புள்ள சபையின் போதகராகிய ஆயரிடம் விட்டுவிட்டார்கள். 1384, டிசம்பர் 28ம் தேதி அன்று புனித இன்னோசென்ஸ் Holy Innocents' Day நாளின் போது, பூசை வைக்கும்போது, அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு சில நாட்களில் இறந்துவிட்டார். "வானத்தின் நட்சத்திரமான" லூத்தர் 133 வருடங்களுக்குப் பிறகு விட்டன்பெர்க்கிலிருந்து சீர்திருத்தத்தை உயர்த்தினார்.

"பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள்." (வெளிப்படுத்தல் )என்று யோவான் சிமிர்னாவுக்கு எழுதினார். கிபி 303 முதல் 313 வரை, பேரரசர் டையோக்லீஷியனால் தொடங்கப்பட்ட பத்து வருட துன்புறுத்தலுக்கு, இந்த "பத்து நாள்" உபத்திரவத்தை சகோதரர்கள் பொதுவாக பொருத்துவார்கள். வில்லியம் பென் William Penn " *The Sandy Foundation Shaken* " என்ற புத்தகத்தை வெளியிட்டு, புதிய உலகிற்கு, பிலதெல்பியா நிலையை துவங்கி வைத்தபோது "ஒரு நாளுக்கு ஒரு வருஷம்" என்பது ஐந்து மாதங்கள் அல்லது 1517 முதல் 1667 வரை, சர்தை சபையின் காலத்தின் 150 நாள் உபத்திரவத்திலும் காணப்படுகிறது.

கத்தோலிக்க திருச்சபையின் சில நடைமுறைகளுக்கு எதிராக லூதரின் தாக்குதல், ஜெர்மனியில் உள்ள விட்டன்பெர்க் பல்கலைக்கழகத்தில், தார்மீக இறையியலைக் கற்பிக்கும் போது, அவரது முழுமையான கண்டனத்தை பொதுமக்களுக்கு எடுத்துச் செல்ல முடிவு செய்தார். {கத்தோலிக்கச் சபையின் மறைகல்வியானது பின்வருமாறு கூறுகின்றது - பாவத்தண்டனைக் குறைப்பு (indulgence) என்பது, "ஒப்புரவு அருளடையாளம் மூலமாக இறைவன் முன்னிலையில் ஏற்கனவே



Martn Luther, reformation messenger

குற்றப்பொறுப்பு, மன்னிக்கப்பட்ட பாவத்துக்குரிய இம்மைத் தண்டனையின் பொருத்துதலாகும் / நிவர்த்தியாகும். கத்தோலிக்க திருச்சபையானது இதுகுறித்து கிறிஸ்து மற்றும் தூயவர்களுடைய நற்பேறுபலன்கள் கருவூலத்தை அதிகாரப்பூர்வமாகப் பகிர்ந்தளித்துப் பயன்படுத்துகிறதாகக் கொள்கின்றது."}

ரோமுடனான லூதரின் இடைவெளி, ஐரோப்பாவில் சீர்திருத்தத்தின் போக்கை பட்டியலிட்டது - சுவிட்சர்லாந்து (ஹல்ட்ரிக் ஸ்விங்லி, ஜான் ஓகோலாம்படேயஸ், 4 ன்ரிச் புல்லிங்கர்,) பிரிட்டன் (தாமஸ் கிரான்மர், வில்லியம் டின்டேல்), ஸ்காண்டிநேவியா (ஈராஸ்மஸ்), பிரான்ஸ் (ஜான் கால்வின் செல்வாக்கின் கீழ் ஹுகுனோட்ஸ் ), மற்றும் இத்தாலி (1550 இல் சுமார் 1000 வெனிசியர்கள் போப் ஜூலியஸ் III ஆல் அனபாப்டிஸ்டுகளின் ஒரு பகுதியாகக் கணக்கிடப்பட்டனர்.

## ஆதியிலே

1517 அக்டோபர் 31 இல், மார்ட்டின் லூதர் லத்தீன் மொழியில் எழுதப்பட்ட ஒரு ஆவணத்தை விட்டன்பெர்க் தேவாலயத்தின் கதவில் அறைந்தார் --( *Disputatio pro declaratione virtutis indulgentiarum*) இதற்கு அதிகாரத்தின் மீதான விவாதம் மற்றும் பாவ மன்னிப்பு சீட்டைப் பற்றிய கருத்து என்று பொருள். இறையியல் மற்றும் அறிவியலில் நிறுவப்பட்ட சத்தியங்களை விவாதிக்க அறிவு சார்ந்த விவாதங்கள் பொதுவானவை மற்றும் இயல்பான முறையாகவும் இருந்தது. அந்த ஆவணம் "95 ஆய்வறிக்கைகள்" என்று அறியப்பட்டது. பல புராட்டஸ்டன்ட் தேவாலயங்கள் இன்னும் அக்டோபர் 31ஐ சீர்திருத்த தினமாக அனுசரிக்கின்றன.

## விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும், ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" (வெளிப்படுத்தல் 3:5,6)

வெண் வஸ்திரம் நமக்கு கடனாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வெண் வஸ்திரம் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரமான, நீதிமானாக்கப்பட்ட நிலை என்று சகோதரர் ரஸ்ஸல் கூறுகிறார். மீட்டெடுக்கப்பட்ட இந்த முக்கியமான கோட்பாட்டை லூதர் விட்டன்பெர்க்கில் கற்பித்தார். ஹான்ஸ் லூதர் தன் மகனுக்காக ஒரு சட்டப்பூர்வமான வாழ்க்கையை கற்பனை செய்தார். இருப்பினும், வாழ்க்கையின் ஆரம்பத்தில், கடந்த கால பரிசுத்தவான்களின் வாழ்க்கையை அவர் படிக்கும் போது ஈர்க்கப்பட்டார். 1505 ஆம் ஆண்டில் ஒரு பயங்கரமான இடியில் சிக்கியபோது, அவர் தப்பித்தால் ஒரு துறவி ஆவேன் என்று சபதம் செய்தார். இதனால் அவர் எர்ஃபர்ட்டில் உள்ள அகஸ்டீனிய எரெமிட்டுகளின் Augustinian Eremites in Erfurt கடுமையான ஒழுங்கிற்குள் நுழைந்தார். இது அவர் கடந்த ஆண்டு பயின்ற பல்கலைக்கழகத்திற்கு சற்று தொலைவில் இருந்தது. வேதத்தின் மீது அகஸ்டினின் ஈர்ப்பில் ஈர்க்கப்பட்ட மார்ட்டின் வேதாகமத்தை படிக்கத் தொடங்கினார்.

கற்றுக் கொள்ளும் ஆர்வம் அவரை எரேமைட் பயிற்சியின் மூலம் தூண்டியது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர் ரோமில் உள்ள கூட்டமைப்பிற்கான பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கு சபையில் அவர் மிகபெரிய அளவில் ஊழலைக் கண்டார். ஆனால் அது இத்தாலியின் கலாச்சாரம் என்பதில் அவர் பெரிதும் அதிர்ச்சி அடைந்து பாதிக்கப்பட்டார். ஒரு வருடத்திற்குள் அவர் விட்டன்பெர்க்கில் கற்பிக்க அனுப்பப்பட்டார். அங்கு வேதத்தின் மீதான அவரது புலனாய்வு உந்தப்பட்டு, போப்பின் பாவ மன்னிப்பு சீட்டிற்கும், போப் தேவனுடைய வாயின் வார்த்தை என்று கோருவதற்கும் எதிராக ஒரு வெறுப்பை உருவாக்கினார்.

மாணவர்களுக்கு லூதரின் விரிவுரைகள் பெரிதும் சங்கீதத்திலிருந்து வந்தது. சபையில் வெளியிடப்பட்ட சங்கீதங்களின் தொகுப்பை அவர் சால்டர் Psalter என்ற புதிய பதிப்புகளை, அவரது மாணவர்கள் விரிவுரைகளின் போது குறிப்புகளை எடுக்க விரிவான விளிம்புகளுடன் (margins) அச்சடித்தார். அந்த சமயத்தில் இருந்தவர்களை நிராகரித்து, அவர்களின் சொந்த வர்ணனைகளை எழுத அவர் அவர்களை ஊக்குவித்தார்.

சங்கீதம் கற்பித்த பிறகு, லூதர் ரோமர்களின் புத்தகத்தைப் பற்றி விரிவுரை செய்யத் தொடங்கினார். 1515ல் அவரது இரண்டு விரிவுரை கையெழுத்துப்பிரதிகள் அவரது சொந்த கையெழுத்தில் இன்றும் உள்ளது. ரோமர் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி அவர் ஏற்கனவே விசுவாசத்தால் நீதிமனாக்கப்படுவதைப் பற்றியும், இயேசு இரட்சிப்புக்குரிய அனைத்து வழிகளையும் வழங்கினார்

என்பதையும் அவர் யோசித்துக்கொண்டிருந்தார் என்பதை இது குறிக்கிறது. (ரோமர் 10:9,10) எல்லா நீதியும் தேவனிடமிருந்து வருகிறது என்பதையும் அவர் சங்கீதத்தில் கண்டார். (சங்கீதம் 97:2, 119:42)°{குறிப்பு - சங்கீதம் 119:42, "நீதி" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை ஆனால் தேவனுடைய வார்த்தையின் நம்பகத்தன்மையைக் காட்டவும், நாம் நீதியைக் கற்றுக்கொள்ளவும், லூதர் இந்த வசனத்தைப் பயன்படுத்தினார். }கத்தோலிக்க போதனையில் நீதியை அல்லது நியாயத்தை வரையறுப்பதற்கு ஜஸ்ட்டஸ் *justus* மற்றும் பெகேர் *facare* என்ற வார்த்தைகளில் இருந்து ஜஸ்டி∴பிகேர் *justificare* என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு "நீதியை உருவாக்குவது" என்று பொருள். நீதி இல்லாதவர்களை, நீதிமானாக்க, தேவாலய சடங்குகள் மூலம் நீதிமானாக்கப்படலாம் என்று திருச்சபை கற்பித்தது.

எனினும், ரோமர் புத்தகத்தில் டிகையோஸ், டிகையோசூனே *dikaios*, *dikaiosune* என்ற கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டதை லூதர் கண்டார். இதற்கு நீதிமானாக்கப்படுவது என்று பொருள் அல்ல, மாறாக நீதியுள்ளவராக ஆக்குவது அல்லது கருதுவது அல்லது அறிவிப்பதே பொருள். சபையின் தலையீடு இல்லாமல், கிறிஸ்துவின் பலியின் மேலுள்ள விசுவாசம் மட்டுமே நீதிமானாக்கப்படுவதை கொண்டு வரும் என்று அவர் முடித்தார். "பாவத்தை வெறுக்கும் யாரானாலும், அவர்கள் ஏற்கனவே பாவத்திற்கு வெளியே இருக்கிறார்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமாகவும் இருக்கிறார்கள்." ரோமர் 1:17ன் அவருடைய புதிய கண்ணோட்டம். ஆபகூக் 2: 4 லிருந்து மேற்கோள் காட்டப்படுகையில், "...அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல, தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" நீதிமானாக கருதப்படுகிறதை அல்லது எண்ணப்படுகிறதை இங்கு குறிப்பிடப்படுகிறது. சங்கீதம் 119:42, "நீதி" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை ஆனால் தேவனுடைய வார்த்தையின் நம்பகத்தன்மையைக் காட்டவும், நாம் நீதியைக் கற்றுக்கொள்ளவும், லூதர் இந்த வசனத்தைப் பயன்படுத்தினார்.

## போப்பமைப்பின் மீது லுதரின் தாக்குதல்

"இராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து, தன்னை உயர்த்தி, எந்தத் தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான், கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும், நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும்." (தானியேல் 11:36)

அப்போஸ்தலர்கள் மறைந்தவுடன், ஆரம்பகால சபையில் கருத்து வேறுபாடுகளும் பிளவுகளும் வளர்ந்தது. (மத்தேயு13:25) அதிகாரப்பூர்வமான கோட்பாட்டை உருவாக்க ஆலோசகர்களும், குருமன்றங்களும் அழைக்கப்பட்டனர். அடுத்தடுத்த நூற்றாண்டுகளில், சபையும் போப்பமைப்பும் எல்லா வகையிலும் ஊழல் ஆனது. ரோமிலுள்ள புனித பேதுரு போராலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப நிதி சேர்க்கும் முயற்சியாக, டொமினிகளின் கத்தோலிக்கத் துறவியும் பத்தாம் போப் லியோவின் ஆணையருமான பீட்டர் டெட்சலின் Peter Tetzel செயல்பாடுகளை விமர்சித்து மெயின்ஸ் மற்றும் மிக்ட்பேர்க்கின் பேராயர் ஆல்பிரெக்டுக்கு Albrecht, லூதர் எழுதியபோது, அவர் போப் அதிகாரத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தத் தொடங்கினார்.

தேவன் மட்டுமே பாவ மன்னிப்பு வழங்க முடியும் என்று வலியுறுத்தும் ஒரு கடிதத்தோடு லூதர் "95 ஆய்வறிக்கைகளை" இணைத்தார். பாவ மன்னிப்பு சீட்டை விலைக்கு வாங்குவதினால் இரட்சிக்கப்பட முடியாது. ஆனால் அவர் அங்கு நிறுத்தவில்லை. இராஜா, தன்னை உயர்த்தி, எந்தத் தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி எல்லா சக்ராதிபதிகளுக்கும் மேல் ஆளுபவர் போப் என்பதை தானியேல் புத்தகத்தில் (தானியேல் 11:36)இருந்து லூதர் முடிவு செய்தார். கான்ஸ்டன்டைன் நாட்களில் இருந்து, மேற்கத்திய ரோம போப்பின் விசுவாச துரோகத்தின் உயர்வான உச்சத்தை விரிவுபடுத்தியது. போப்பமைப்பிற்கே சவால் விட லூதர் தயாராக இருந்தார்.

## உருமாற்றம் நிராகரிப்பு

1520 இல், லூதர் ஒரு போப்பின் ஆணையினால் கண்டனம் செய்யப்பட்டார், அதை விட்டன்பெர்க்கின் வாயிலில் எரித்தார். அங்கு அவர் போப் அதிகாரத்தின் அடித்தளமாக இருந்த நியதிச் சட்டத்தின் பல படைப்புகளையும் எரித்தார். அந்த ஆண்டில் அவர் மூன்று படைப்புகளையும் வெளியிட்டார்.

*Address to the Christian Nobility of the German Nation* -- இந்த உலகில் தேவனுடைய பிரதிநிதியாக ஒரு போலியானவராகவும், அந்திகிறிஸ்தாகவும் போப்பை அவர் குற்றம் சாட்டினார்.

*The Babylonian Captivity of the Church* — லத்தீன் மொழியில் எழுதப்பட்டு, மதகுருமார்களுக்கு



Huldryk Zwingli

உரையாற்றப்பட்டது. அதில் அவர் ஏழு சடங்குகளில் நான்கை தள்ளுபடி செய்தார். மற்றும் உருமாற்றமும் தள்ளுபடி செய்யப்பட்டது.

*The Freedom of a Christian* —நல்ல செயல்களை ஆதரித்தார், இரட்சிப்பின் தேவைக்காக அல்ல, மாறாக அன்பு, கனிவு மற்றும் தேவனுடைய அன்பான இயல்பையும் நன்றிகளையும் வெளிப்படுத்துவதற்காக. "ஒரு கிறிஸ்தவர் எல்லாவற்றிற்கும் முற்றிலும் சுதந்திரமான ஆண்டவன், யாருக்கும் உட்பட்டவர் அல்ல, ஒரு கிறிஸ்தவர் எல்லோருக்கும் உட்பட்ட ஒரு முழுமையான கடமைப்பட்ட ஊழியர்."

### சர்தை காலத்து புரட்சி

லூதர் போப் மார்க்கத்தை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து மற்ற சீர்திருத்தவாதிகள் ஐரோப்பா முழுவதும் தோன்றினார்கள்.

- Huldryk Zwingli ஹல்ட்ரிக் ஸ்விங்லி (1484-1531)ஈராஸ்மஸின் புதிய ஏற்பாட்டைப் படித்து, அவரது அன்றைய நாளின் சபையின் நடைமுறைகளை, பவுல் மற்றும் அப்போஸ்தலர்களின் சபையோடு ஒப்பிட்டு பார்த்தார். உபவாசத்தைப் பற்றி சுவிசேஷங்களில் காணப்படவில்லை என்று அவர் சவாலிட்டார். மேலும் வேதாகமம் மட்டுமே தெய்வீக சட்டத்தின் ஒரே ஆதாரம் என்று கூறினார்.

- John Calvin ஜான் கால்வின் (1509-1564) லூதர் மற்றும் அவரது இறையியலுக்கு பிரெஞ்சு குரலானார். மேலும், அவ்வப்போது திருத்தம் செய்து, அவரது போதனைகளை ஆதரித்தார்.

- Philipp Melanchthon பிலிப் மெலஞ்சதன் லூதரின் இயக்கத்தின் அறிவார்ந்த தலைவரானார். அவர் 1518 ல் 21 வயதில் விட்டன்பெர்க்கில் கிரேக்கப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார் மற்றும் விரைவாக லூதரின் யோசனைகளை தேர்ந்தெடுத்தார். கிறிஸ்துவின் பலியை நினைவு படுத்துவதில் உதவிய நினைவகமாகிய நற்கருணையை மெலஞ்சதோனின் மாணவர்கள் நிராகரித்தனர்.

மார்ட்டின் லூதர் தனது ஊழியத்தில் சில கடுமையான தவறுகளை செய்தார். அவருடைய கருத்துக்களை ஏற்காதவர்களிடம் சகிப்புத்தன்மை யற்றவரானார். குறிப்பாக யூதர்களுக்கு எதிரான தீர்ப்பை விளைவித்தது. இருப்பினும், சீர்திருத்தத்தைத் வழிநடத்த தேவன் லூதரைப் பயன்படுத்தினார். சில வழிகளில் அவர் பரிசுத்தவானாகிய பேதுருவைப் போலவே இருந்தார். வேறு எந்த சீஷரும் இயேசுவை திருத்த நினைக்கவில்லை. வேறு எந்த சீஷரும் இவ்வளவு கடுமையாக கண்டிக்கப்படவில்லை. ஆயினும் பேதுரு கெத்செமனே தோட்டத்தில் இயேசுவோடு போராடி மரிக்கவும் ஆயத்தமாக இருந்தார். அவர் அகாபே அன்பின் மாதிரி ஆனார். புறஜாதியினருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க தேவனால் அவர் பயன்படுத்தப்பட்டார். இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகு அவர் பன்னிருவரில் அங்கீகரிக்கப்பட்ட மூப்பரானார். அவருடைய ஊழியமானது அனைவருக்கும் சேவை செய்பவர்களுக்கு ஒரு முன்மாதிரி.

மார்ட்டின் லூதர் மற்றும் பேதுரு போன்ற குணங்களைக் கொண்டிருந்த மற்றவர்களால் தேங்கிய நிலையில் உள்ள சீர்திருத்த சபை இழுக்கப்பட்டது. அப்போஸ்தலர்களால் கற்பிக்கப்பட்ட சத்தியத்தை மீட்டெடுப்பதற்கான நேரமாக இது இருந்தது. ஆனால் முழுமையாக மீட்பதற்கு நேரம் தேவைப்பட்டது.

### பிற்சேர்க்கை

இந்த காலகட்டத்தில் போப்பமைப்பின் மதப் பிடிப்பு வெளிப்படுவது மட்டுமல்லாமல், லூதரால் தொடங்கப்பட்ட புரட்சி, சிருஷ்டிப்பின் அறிவியலைக் கட்டுப்படுத்த சபைக்குள் நுழைந்தது. கலிலியோ கலிலி 1564 இல் பீசாவில் பிறந்தார். இருபத்தோரு ஆண்டுகளுக்கு முன், போலந்து கணிதவியலாளர், வானியலாளர் மற்றும் மதகுரு நிகோலஸ் கோப்பர் நிக்கல் *De Revolutionibus Orbium Coelestium* (வானக் கோளங்களின் புரட்சிகளில்) என்ற புத்தகத்தை வெளியிட்டார்கள். பரலோக சரீரங்களை நிர்மாணிப்பதைப் பற்றி சபை கற்பித்த எல்லாவற்றிற்கும் முரணாக கோப்பர் நிக்கஸின் புத்தகம் கூறியது.

டோலமி மற்றும் அரிஸ்டாட்டிலின் கோட்பாடுகள் வேதத்தால் உறுதிப்படுத்தப்பட்டதாக நம்பி, சபை அவைகளை அறிவித்தது. பூமி இப்பிரபஞ்சத்தின் மையத்தில் அசைவில்லாமல் அமர்ந்திருப்பதாகவும், சூரியன் அதைச் சுற்றி வருவதாகவும் இந்த கோட்பாடுகள் கோரியது. இதற்கு சங்கீதம் 104: 5 ஐ மேற்கோள் காட்டியது. "பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்." கோப்பர்நிக்கஸ் இந்த கோட்பாட்டை மறுத்தார், சூரியன் மையத்தில் இருப்பதாகவும், பூமி மற்றம் பிற கிரகங்கள் அதை வட்டமிடுவதாகவும் கூறினார். (இவை "அலைந்து திரிந்த நட்சத்திரங்கள் என்று சபை கற்பித்தது.) வானம் முழுவதும் சூரியன் நகர்வது ஒரு ஒளியியல் மாயை, இது சுழலும் பூமியின் விளைவாகும்.

கலிலியோ தனது இருபதுகளில் இருந்து கோப்பர்நிக்கஸின் அறிக்கைகளுக்கு குரல் கொடுத்து ஆதரித்தார். அவர் 1588இல் அவைகளைக் குறித்து பகிரங்கமாக விரிவுரை செய்தார். அவர் பீசா பல்கலைக்கழகத் திற்குச் சென்று கணிதத்தை கற்பித்து, சாய்ந்த கோபுரத்திலிருந்து விடப்பட்ட பொருட்களின் சோதனைகள் மூலம் அரிஸ்டாட்டில் மற்றும் டோலமியை நிராகரித்தார். வியாழன் மற்றும் அதன் நிலவுகளின் இயக்கங்களைப் பற்றி

கலிலியோ எழுதி, *The Messenger of the Stars*, என்ற புத்தகத்தில் வெளியிட்டார்.

போப் பால் III (1534-49) மற்றும் கிரிகோரி XIII (1572தேர்ந்தெடுக்கப்பட்ட) ஆகியோர் கலிலியோவின் போதனைகளுக்கு சாதகமாக இருந்தனர் ஆனால் கோப்பர்நிக்கஸின் யோசனைகளை அலட்சியப் படுத்தினார்கள். 1542 ஆம் ஆண்டில், புராட்டஸ்டன்ட்களை அடக்குவதற்கான விசாரணையை பால் III புதுப்பித்தபோது, மெசஞ்சரில் *Messenger* வெளியிடப்பட்ட கிரகங்களின் இயக்கம் குறித்த கலிலியோவின் போதனையை அவர் கண்டனம் செய்தார். போப் மார்க்கம் வெறும் தவறாக வழிநடத்துவதோடு மட்டும் அல்ல, சபைக்கு நன்மை பயக்கும் வகையில் சத்தியத்தை ஒடுக்குகிறார்கள் என்பதை கலிலியோ தெளிவுபடுத்தினார்.

1613 ஜூன் 22இல், கலிலியோ "கொடூரமான குற்றங்களை செய்த குற்றவாளியாக" புதுப்பிக்கப்பட்ட விசாரணைக்கு முன் கடைசி முறையாக ஆஜரானார். அவர் தனது வேலையை மறுப்பதற்கு கட்டாயப்படுத்தினார்கள் : "நான் என் பிழைகள் மற்றும் மதவெறியை சபித்து வெறுக்கிறேன்" தடைசெய்யப்பட்ட புத்தகங்களின் பட்டியலிலிருந்து டயலோகோ நீக்கப்படுவதற்கு கிட்டத்தட்ட 200 ஆண்டுகள் செல்லலாம். கலிலியோவின் மறுப்பு இறுதியில் கத்தோலிக்க ஐரோப்பா முழுவதும் பரப்பப்பட்டது.

..........................................................................

### பிலதெல்பியாவில் உள்ள சபையின் தூதர் (1667 - 1874)

# வில்லியம் பென், சிலுவை மற்றும் கிரீடம்



*(William Penn)*
***Richard Doctor***

"சிலுவையை எடுப்பதற்கான வழி ஆத்துமாவின் முழுமையாக (ராஜினாமா) எதிர்ப்பு .....உண்மையில் வழி குறுகியது, மேலும் நுழைவாய் மிகவும் நெருக்கமானது.... சிலுவையை தாங்க முடியாதவர்கள் ஒருபோதும் கிரீடம் பெற முடியாது."

The Sandy Foundation Shaken "(மதிப்பு கேடான சொற்களின் அல்லது அவதூறு " என்ற தலைப்பில் புதிதாக அச்சிடப்பட்ட புத்தகம், லண்டன் பிஷப்பின் கைகளை அடைந்தது. இது திரித்துவத்தின் மீதான நேரடித் தாக்குதலாக இருந்தது," பிதா, குமாரன் மற்றும் ஆவி, ஒரே நித்திய பொருள் அல்ல, மேலும் தெய்வீக இயல்பு, ஒன்று மற்றொன்றாக இல்லாதபடி மூன்றும் தனித்துவமாக இருந்தால், அது மூன்று தனித்துவமான தேவர்களாக இருப்பார்கள்.....அறிவுள்ள எந்த மனிதனாலும் மூன்று தனித்துவமான முடிவற்றவைகள் உள்ளது என்று சொல்லமுடியுமா ? "சுருக்கமாக திரித்துவம் அல்லது மும்மூர்த்திகள் "புறமத வெறியர்களின் தத்துவம்".

குறுகிய வரிசையில், 23 வயதான இளம் எழுத்தாளர், வில்லியம் பென், லண்டன் டவரில் Tower of London "நெருக்கமான சிறையில்" வைக்கப்பட்டிருந்தார் (December 16, 1667) .ராணியின் வீட்டில் உள்ள அவரது வார்டிலிருந்து அவரது வீட்டு வாசலில் இருந்து சில அடி தூரத்தில் தனியார் மரணதண்டனைத் தொகுதியின் கடுமையான நிழற்படத்தின் தடையற்ற காட்சி இருந்தது.

குணாதிசயத்தில், பென் பெரும்பாலும் அவரது தாயார் மார்கரெட் ஜாஸ்பர் வான்டர்ஷூரன் பென் Margaret Jasper Vandershuren Penn போலிருந்தார். மார்கரெட் ரோட்டர்டாமிலிருந்து ஒரு டச்சு வியாபாரியின் அன்பான மற்றும் விவேகமான மகளாக இருந்தார். அவள் கணவர், சர் வில்லியம் பென், உலக வர்த்தகத்தை கட்டுப்படுத்த பிரிட்டிஷ் மற்றும் டச்சுக்காரர்களுக்கு இடையே நடந்த சண்டையின் போது அவர் கடற்படை அதிகாரியாக பணியாற்றினார். பின்னடைவுகள் மூலம், சர் வில்லியம் இப்போது பதவி இழக்கப்பட்டு, அவமானப்பட்டு, உடல் நலக் குறைவால் அவதிப்பட்டார்.



William Penn, Treaty with the Indians in 1861

கடற்படை அதிகாரியான பென் நீண்ட காலமாக அவரது பெயர் அளவிலான மகனின் மத ஆர்வத்தின் ஊழலைச் சுமந்தார். அவரது பதினாறாம் இளம் வயதில் வில்லியம், தாமஸ் லோ வின் அதிரடி பிரசங்கத்தினால் செயல்பட்டு, இங்கிலாந்து சபையை பகிரங்கமாக விமர்சித்ததற்காக மதிப்புமிக்க கிறிஸ்தவ கல்லூரியான ஆக்ஸ்போர்டிலிருந்து வெளியேற்றப்பட்டார் (1663). . கடற்படை அதிகாரி தனது மகனை சவுக்கால் அடித்து, வீட்டை விட்டு வெளியேற்றினார். ஒரு தந்திரமான மனுஷனாக, கடற்படை அதிகாரி இளம் வயது வில்லியம்மை, நிஜமான உலகத்தைப் பற்றி ஏதாவது ஒன்றை கற்றுக்கொள்வதற்கு பாரிஸ்க்கு அனுப்பினார். பாரிஸில் உள்ள அவரது முகவர்கள் தவறு செய்த மகனைக் கண்காணித்து அறிக்கைகளை அனுப்பினார்.

#### நமது ஹியூகெனோட் மரபு

தனது பார்வையாளர்களிடமிருந்து நழுவி, எல் அகாடமியில் L'Academie Protestante de Saumur, மதத்தை படிக்கவும், பின்னர் ஹியூகெனோட் Huguenot போதனையில் செழிப்பான மையத்தில் படிக்கவும் பென் பாரிஸை கைவிட்டார். சாயுமரில், Saumur பென் புகழ்பெற்ற இறையியலாளர் மற்றும் இயக்குனர் மோயில் அமிராவத்துடன் வாழ்ந்து படித்தார். அமிராட் போராடினார், ஆனால் இலவச கிருபை மற்றும் உலகளாவிய இரட்சிப்பின் ஆர்மீனிய கோட்பாட்டுடன் கால்வினிஸ்ட் தேர்தல் கோட்பாட்டை சமரசம் செய்ய திருப்திகரமான விளக்கத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. எப்படியோ, இரண்டுமே உண்மைதான். இந்த வேதங்களை ஒத்திசைப்பது எதிர்காலத்தில் 200 வருடங்கள் ஆகும்.

நாம் ஹியூகெனோட்டிற்கு பெரும் கடன்பட்டிருக்கிறோம். அன்று சாயுமரின் காற்றில் இன்று நாம் படிப்பதை போல் தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் தீர்க்கதரிசனங்களைக் குறித்த விவாதங்கள் நடந்துகொண்டிருந்தது. தானியேலின் 1260 நாட்களைப் பற்றிய விளக்கமாகிய பிரெஞ்சு புரட்சியை குறித்து ஒரு நூற்றாண்டுக்கு முன்பே ஹியூகெனோட்டில் கணித்துள்ளது. ஹியூகெனோட் அறிஞர் பியர் ஜூரியு(1637-1713),பின்னர் 1686ல் தேவனுடைய சிறப்பான தீர்ப்பு பிரான்சின் மீது விழும் அதாவது நகரத்தின் பத்தாவது பகுதியில்

(வெளிப்படுத்தல் 11: 13), 1780- 90 ன் சகாப்தத்தில், நிச்சயமாக 1796க்குள் என்று ஒரு இளைஞன் எழுதினார். லாச்லான் டெய்லர், ஜோசப் பிரீஸ்ட்லி மற்றும் ஜான் லாத்ராப் போன்ற வெளிப்பாட்டாளர்களால் இந்த நுண்ணறிவுகள் செம்மைப்படுத்தப்பட்டது.(1731-1820), லாத்ராப் வேதாகம காலகணக்கின் மேல் உள்ள ஆர்வத்தால் தூண்டப்பட்டார், இதை கொண்டு வில்லியம் மில்லர் (1782-1849) தனது ஊழியத்தின் போது ஒரு முழு சுடரை எரியவிட்டார்.


William Miller

வெளிப்படுத்தலின் ஏழு சபைகள் தொடர்ச்சியான வரலாற்று காலங்களாக ஹியூகெனோட்ஸ் அடையாளம் கண்டுகொண்டது. ஐரோப்பாவின் மதப் போர்களின் அழிவு மற்றும் வடுக்கள் இன்னும் காணப்படுகின்றன. ஆயினும்கூட, அரசமைப்பு மாறியது. மதவெறியர்கள் இனி கொலை செய்யப்படவில்லை. சபை ஆறாவது அல்லது பிலதெல்பியா நிலைக்குள் நுழைந்தது என்று ஹியூகெனோட்ஸ் நம்பினார்.

சர் வில்லியின் முகவர்கள், இளம் வில்லியம்மை கண்டுபிடிக்க கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆனது. கவலைப்பட வேண்டாம் என்றும், வில்லியமின் சிறந்த விஷயங்களை விரும்புகிறவர்களோடு, சிறப்பான போக்கை வைத்திருக்கும் ஒரு "மிக சிறந்த குணம் படைத்தவர்" என்று அவர்கள் அறிக்கை செய்தனர். நிச்சயமாக இந்த ஆய்வில் சிறிய தீங்கும் வராது.

## ஆண்டவரிடத்தில் அர்ப்பணித்தல்

அமிராட்டின் திடீர் மரணம், 1664 ல் தாமதமாகத் திரும்பிய இளம் வில்லியம்மை ஆழ்ந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர் சட்டப் படிப்பை மேற்கொண்டார். இருப்பினும், தேவனோடு "உடன்படிக்கை" உறவில் உள்ளவர்கள் மேல் அவரது எண்ணங்களும் இருதயத்தில் உள்ள அனுதாபமும் தொடர்ந்தது. "பலியினாலான உடன்படிக்கையில்" பங்கேற்பது நம்முடைய பாக்கியம் (சங்கீதம்)மெதுவாக மீட்கப்பட்டது.

தேவனுடைய முன்னேற்பாடான கிருபை அவருடைய ஊழியர்களில் ஒருவரின் மீது இருக்கும்போது, முரண்பாடுகள் சாதாரணமானவைகள். 1665இல் சர் வில்லியம் தனது மகனை அயர்லாந்துக்கு அனுப்பினார், அங்கு இளம் வில்லியம் இராணுவ நடவடிக்கையையும், இரத்தத்தையும் அனுபவித்தார். உற்சாகத்தால் மலர்ந்து, புகழ் மற்றும் அதிர்ஷ்டம் கைகளின் வழியாக வரும் என்ற நம்பிக்கையினால் ஏமாற்றப்பட்டு, ஒரு அரை உருவபடத்தை அமைத்தார். இந்த வேலை ஒரு துடிப்பான இளைஞரின் கருமையான தோள்பட்டையில் நீளமான முடி, போரின் கருப்பு கவசம் மற்றும் ஒரு கழுத்துக்குட்டையை அணிந்திருந்ததை காட்டுகிறது. அவரது கண்களில் வெளிப்படுத்தப்பட்ட கருணை மட்டுமே, உருவப்படத்தின் செய்தியை வெளிப்படுத்துகிறது. பிற்கால வாழ்க்கையில், ஆயுதம் ஏந்திய அமெரிக்க இந்தியர்களின் குழுவை சந்தித்தபோது, புகழ்பெற்ற தனது ஆயுதங்களை கீழே வைத்தார். கிறிஸ்தவ சமாதானம் மற்றும் சகோதர அன்பின் தூதராக, முழு இராணுவ உடையில், இளம் வில்லியம் பென்னின் வண்ணம் தீட்டி சித்திரம் மட்டுமே குறிப்பிட்ட வாழ்க்கையின் உருவப்படமாக உள்ளது.

குடும்ப சொத்துகளை வாடகை மற்றும் குத்தகைக்கு விடுவதற்கு சர் வில்லியம் 1667 இல் அவரை அயர்லாந்தின் கார்க்கிற்கு அனுப்பினார். மீண்டும் தாமஸ் லோயின் பயணப் பிரசங்கத்தில் பென் கலந்து கொண்டார் - "சிலுவையை சுமந்து செல்லுங்கள், தேவனுக்கு உண்மையாக இருங்கள், அப்பொழுது யாரும் உங்களிடம் இருந்து எடுக்க முடியாத நித்திய கிரீடத்தை அவர் உங்களுக்கு கொடுப்பார். பண்டைய கால மனிதர்கள் நடந்து வந்த இந்த வழியைத் தவிர செழிப்பாக இருப்பதற்கு வேறு வழியில்லை."

## பென் அர்ப்பணித்தார்

சரியான நேரத்தில் தேவனுடைய சரியான வேலையை சபையின் ஆறாம் தூதனாக எடுத்துச் செல்ல வில்லியம் சரியான மனிதராக இருந்தார். சீர்திருத்தத்தின் தொடக்கத்திற்கு சரியாக ஐந்து தீர்க்கதரிசன மாதங்களுக்குப் பிறகு (150 ஆண்டுகள், வெளிப்படுத்தல் 9:10) பல முறைகயில் முதல் முறையாக இளம் பென் கைது செய்யப்பட்டார். (நவம்பர் 3, 1667) ஞாயிற்றுக்கிழமை நடந்த "மதவெறியரின்" தீவிரமான கூடுகையில் கலந்து கொண்டதே இவர் செய்த குற்றமாக இருந்தது. மத சுதந்திரத்தின் "திறந்த வாசலுக்காக" (வெளிப்படுத்தல் 3: 8) பென்னின் எதிர்ப்பு மற்றும் சபையையும் அரசியலையும் பிரிப்பதே, அவரது வாழ்க்கையின் கருப்பொருளாக இருந்தது. எந்த ஐரோப்பிய அரசும், கத்தோலிக்கர் அல்லது புராட்டஸ்டன்ட் சபையினரும் இத்தகைய சுதந்திரத்தை பொருத்துக்கொள்ளவில்லை. இந்த உலகத்தை நிலைமாற்ற, பென் தேவனுடைய தூதராக இருந்தார்.

சர் வில்லியம் தனது மகனை வீட்டை விட்டு வெளியேற்றினார். இளம் வில்லியம் முதல் அவரது தந்தை வரை நீண்ட இறையியல் கட்டுரைகள், கவனிக்கப்படாமல் போனது ஆச்சரியப்படுவதற்கில்லை. பென் , *The Sandy Foundation Shaken* என்ற அடுத்த கட்டுரையை எழுதினார். இது அவரை லண்டன் கோபுரத்தில் வைத்தது.


## சிலுவையும் கிரீடமும்

கோபுரத்தில் இருந்த பென் சும்மா இருக்கவில்லை. கிறிஸ்துவின் பரிசுத்தமான சிலுவையின், இயல்பு மற்றும் ஒழுக்கத்தையும் காட்டியது. மேலும் சுயத்தை வெறுத்தலும்,

நித்தமும் கிறிஸ்துவின் சிலுவையை சுமத்தலுமே, ஓய்வெடுப்பதற்கும், தேவனுடைய இராஜ்யத்திற்கும் ஒரே வழி என்று காண்பிக்கும்படியாக *No Cross — No Crown;* என்ற ஒரு பிரசங்கத்தை அவர் எழுதினார். முந்நூறு ஆண்டுகள் மற்றும் 53 பதிப்புகளுக்குப் பிறகும் கூட, இது பரிசுத்த வாழ்க்கைக்கான அனைவருக்குமான அழைப்பாகும். பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் டச்சு மொழிகளில் பதிப்புகளின் விநியோகம், கிறிஸ்தவர்களின் இருதயங்களில் சிலுவை மற்றும் கிரீடத்தின் உருவத்தை பதிக்க உதவியது.

"கிறிஸ்துவின் சிலுவை, கிறிஸ்துவின் கிரீடத்திற்கு கிறிஸ்துவே வழி.... நான் சுமார் இருபத்திரண்டு வயதிருக்கும் போது, தேவன் அவருடைய நித்தியமான இரக்கத்தினால், என் கால்களை என் இளமையின் மலரில் வழிநடத்திய ஒரு பாதையாகும். இந்த உலகம், மாம்சம் மற்றும் பிசாசுக்கு எதிராக (போராட)...அவர் என்கரம் பிடித்து, உலகின் இன்பங்கள் மற்றும் மாயைகள் மற்றும் நம்பிக்கைகளிலிருந்து என்னை வெளியே அழைத்துச் சென்றார்."

"ஓ, வாருங்கள், மிகவும் சோர்வேயுராத, மிக வெற்றிகரமான நமது இரட்சிப்பின் அதிபதியைப் பின்பற்றிச் செல்வோம் வாருங்கள்,அவருக்கு, உலகின் அனைத்து மாபெரும் அலெக்சாண்டர்களும், வலிமையான சீசர்களும் தங்களுடைய சேனையிலுள்ள அற்ப சிப்பாயியை விட இன்னும் தாழ்ந்தேயிருப்பார்கள். ஏனெனில், மனுக்குலத்தை இரட்சிக்க கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கினார், ஆனால் இவர்களோ, தங்களை பெரியவர்களாக்கிக்கொள்ள மக்களை பேரளவில் அழித்தார்கள்....அவர்கள் தங்கள் இராஜ்யத்தை கொள்ளையிடுதலின் மூலமாகவும், இரத்தத்தாலும் வளர்த்துக்கொண்டார்கள், ஆனால் இவரோ பாடுபட்டு, துன்பப்பட்டு இராஜ்யத்தை வளர்க்கின்றார்... அவர்களின் வெற்றிகள் அனைத்தையும் பின்தொடர்ந்து துன்பமும் அடிமைத்தனமும் வந்தது, இவர் யாரை மீட்டுக்கொண்டாரோ அவர்களுக்கு அதிக சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தார். அவர்கள் செய்த எல்லாவற்றிலும் , அவர்கள் தங்களையே பிரியப்படுத்த முயன்றனர், இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தருமான இவரோ, தாம் செய்த எல்லாவற்றிலும் தனது பிதாவைப் பிரியப்படுத்தவே முயன்றார். நாம் மகிமைக்குள் வர வேண்டுமானால், நாம் பின்பற்ற




வேண்டிய சுயத்தை வெறுத்தலுக்கு, மிகவும் பரிபூரண முன்மாதிரி இவரே." ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சபை கிறிஸ்தவ வாழ்க்கை அனுபவங்களை குறைத்து, பரலோகத்தின் ஊக்கமளிக்கும் வாக்குத்தத்தங்களில் கவனம் செலுத்தியது. இந்த நினைவுகளை "மேகங்கள் போல சிதறடிக்கப்பட்டது" என்று அகஸ்டின் (354-430) எழுதினார். பென் அதற்கு நேர்மாறாக நினைத்தார். சபை நித்தியமான பயன்பெறுவதற்கே, சாதகமற்ற சூழ்நிலையில் இந்த வாழ்க்கை அனுபவங்கள் பெறப்பட்டது. கிறிஸ்துவுக்கான துன்பங்கள் மற்றும் ஆவியின் கனிகள், துன்பத்தினால் வளர்ந்து, தேவனுடைய பரிசுத்தமான ஆலயமாக வளர்ச்சி அடையச் செய்கிறது. பாவ நிவாரண பலியில் சபையின் பங்கை பற்றிய புரிதல் மீட்கப்பட்டது. மீண்டுமாக, பென் ஒரு அழிவுகரமான அடியைப் பெற்றார். சிறையில் இருந்தபோது தாமஸ் லோ இறந்தார்.

## ஒரு பரிசுத்த பரிசோதனை

கோபுரத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகு (ஜூலை 1669 ) பென் பிரிட்டிஷ் தீவுகள் முழுவதும் குவாக்கர் கூட்டங்களுக்கு சேவை செய்ய பயணம் செய்தார். அவரது தந்தையின் உடல்நிலை மேலும் பலவீனமடைந்தது, மற்றும் மரணத்தின் நிழல் சூழ்ந்த போது, சர் வில்லியம் தனது மகனுடன் சமரசமானார். சர் வில்லியம் 1670, செப்டம்ர் 16 இல் குடும்ப பொறுப்பை பென்னிடம் விட்டுவிட்டு சர் வில்லியம் இறந்தார். இங்கிலாந்தில் செலுத்த வேண்டிய பெரிய கடன் இருந்தது. பென் இப்போது முழு நேர ஊழியத்தில் நுழைந்தார், ஹாலந்தில் மற்றும் ஜெர்மனியில் இரண்டு மிஷனரி சுற்றுகளை ஏற்பாடு செய்தார். அவருடைய ஊழியம் இங்கு முடிவடைந்திருந்தால், சிலுவை மற்றும் கிரீடம், நம்முடைய மனங்களிலும், இருதங்களிலும் மறக்க முடியாத அளவுக்கு நம் மனதை ஒருமுகப்படுத்தியிருக்கும். அனைவரிடமும் "எளிமையாகவும், நேர்மையாகவும்" இருக்கவேண்டிய குவாக்கர் கருப்பொருளின் எதிரொலிகளை நாம் கேட்டிருக்கலாம். புதிய உலகில் ஒரு காலனியை கிரீடத்தின் கட்டணமாக நிறுவி,பென் குடும்பத்திற்கு ஒரு கடனைத் தீர்க்கும், ஒரு "புனித பரிசோதனை" பற்றி அவரது எழுத்துக்களில் இன்னும் எண்ணங்கொண்டார் என இதுவரை எந்தக் குறிப்புமில்லை. மிகுந்த சிரமத்திற்குப் பிறகு இது வழங்கப்பட்டது.

பெரும்பாலான அமெரிக்க குடிமக்களுக்கு பென் ஒரு சிறந்த காலனித்துவ நிறுவனரும், சமாதானத்திற்குரிய ஒரு மனுஷனுமாக நினைவுகூரப்பட்டார். அவர் பிலதெல்பியாவை, "பென்சில்வேனியாவின்" முன்னணி நகரமாக நிறுவினார். சர் வில்லியமை கௌரவிக்கும்படியாக பிரிட்டிஷ் அரசு பிலதெல்பியாக என்ற பெயரை சூட்டியது. ஐரோப்பிய ஒழுங்கிலிருந்து விடுபடுவதற்கும், பிரதிநிதித்துவ

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் சுதந்திரம், அரசு உரிமைகள், மத சுதந்திரம் மற்றும் சமாதானமாக அரசாங்கத்தின் கீழ் ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வதற்கே, இந்த "பரிசுத்த பரிசோதனை" ஒரு கிறிஸ்தவ முயற்சியாக இருந்தது.மூன்று தலைமுறைகளாக பூர்வீக அமெரிக்க இந்தியர்களின் சமாதான ஒப்பந்தம் மதிக்கப்பட்ட ஒரு காலனித்துவ நிறுவனர் பென் ஆவார்.ஆகவே, பென், அவரது மகன் மற்றும் அவரது பேரன் காலனியை நிர்வகித்தனர். கிறிஸ்தவர்களின் நண்பர் அல்லாத வால்டேர், மோசேக்கு பிறகு மிகப் பெரிய சட்டமியற்றியவர் என்று பென்னை பாராட்டினார்.

ஒரு நூற்றாண்டிற்கும் குறைவாக, பென்சில்வேனியா "கொஞ்சம் பலத்தின்" மேலும் உள்ள ஆூரண முயற்சிகளுக்கு தொட்டிலாக இருந்தது. (வெளிப்படுத்தல் 3:8) பிலதெல்பியா சுதந்திரத்திற்கான போராட்டத்தின் மைய புள்ளியாகவும், எல்லா இடங்களிலும் ஆண்களுக்கு முக்கியத்துவமும் இருந்தது. பென் கட்டிய குடிமை மண்டபத்தில், காலனித்துவ தூதுக் குழு சுதந்திரத்தை அறிவித்தது. (July 4, 1776). பின்னர்அவர்கள் மீண்டும் ஒரு அரசியலமைப்பை உருவாக்க அங்கு சந்தித்தனர். (1787) அல்லது பாஸ்டர் ரஸ்ஸலின் மூலம் லவோதிகேயா சபையின் ஊழியம் தற்செயலாகத் பென்சில்வேனியாவில் உள்ள அலிகேனி Allegheny நகரில் தொடங்க வேண்டும் என்பது தற்செயலானதாக தெரியவில்லை!

சபை ஏழு

# லவோதிக்கேயாவின் பொறுப்புகள்

"நீ குளிருமல்ல அனலுமல்ல.." (வெளிப்படுத்தல் *3:15*)



***James Parkinson***

சுவிசேஷ யுகத்தின் இறுதி காலம், லவோதிக்கேயாவின் காலத்துக்கான கடிதத்தில் காட்டப்பட்டுள்ளது. (வெளிப்படுத்தல் 3:14-22) நம்முடைய ஆண்டவர், கிறிஸ்தவ வரலாற்றில் நம்முடைய காலத்திற்குரிய சில பாராட்டுகளை தருகிறார். நாம் ஒவ்வொருவரும், பெற்ற படிப்பினைகளை வேறு யாரேனும் ஒருவருக்கு பயன்படுத்த முயலுவதற்கு முன் நமக்கு அதை முதலில் பயன்படுத்துவோம்.

**வசனம் 14** லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் - உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது- " குறிப்பு:{கடைசி சபையின் தூதன் அதன் தொடக்கத்தில் செயல்பட்டு, லவோதிக்கேயாவுக்கு செய்தியை வழங்குவார். பாஸ்டர் சி.டி. ரஸ்ஸல் 1870களில் தொடங்கி, ஈடுபலியையும், மறுசீரமைப்பையும் உலகளாவிய அளவில் கற்பித்தார். அவர் பாபிலோன் தாழ்த்தப்பட்டதை கண்டு அதில் இருந்து கிறிஸ்தவர்களை வெளியே வரும்படி அழைத்தார்.}

"ஆமென்" என்றால், "அது அப்படியே ஆகக்கடவது" என்று பொருள். நம்முடைய யுகத்தில் மற்ற வகையான "சாட்சிகள்" உள்ளதா ? இயேசுவுக்கு ஒரு ஆரம்பம் இருந்ததையும், தேவனுடைய சிருஷ்டிப்பில் இயேசு முதல்வராக இருக்கிறார் என்றும், எல்லாவற்றையும், மற்றும் அனைவரையும் சிருஷ்டிப்பதற்கு அவர் தேவனோடு வேலை செய்தார் என்பதை மறுப்பவர் இருக்கிறார்களா ? (யோவான் 1:2-3)




**வசனம் 15,16** உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ குளிருமல்ல அனலுமல்ல, நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற படியினால் உன்னை என் வாயினின்று வாந்திப்பண்ணிப் போடுவேன்."

நாம் குளிர்ந்த நீர் அல்லது சூடான தேநீர் குடிக்க விரும்புகிறோம், ஆனால் இவைகள் வெதுவெதுப்பாக இருக்கும் போது அல்ல. வெயில் சூடான நாளில் குளிர் பானத்தை விட நமக்கு புத்துணர்ச்சி தருவது எது ? பல சூடான தேநீர் குணப்படுத்துகிறது. நாம் புத்துணர்ச்சியையும் பெறவேண்டும், குணப்படவும் வேண்டும். நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், கிறிஸ்துவின் ஆயிர வருட இராஜ்யத்தில் ஒரு பெரிய அளவில் நாம் இந்த உலகிற்கு,"ஜீவத் தண்ணீரை" வழங்குவோம். மேலும் தேசங்கள் ஆரோக்கியம் அடைவதற்கு மரத்தின் (கிறிஸ்துவின் சிலுவை) இலைகளை வழங்குவோம்." (வெளிப்படுத்தல் 22:1-2) ஆனால் மற்றவர்களை ஊக்குவிக்கவும், புதுப்பிக்கவும் இப்போது நாம் தவறினால், மேலும் துக்கத்தில் இருப்போருக்கு ஆறுதல் கூற நம்மால் முடிந்த அனைத்தையும் செய்யவில்லை (ஏசாயா61:2) என்றால், மற்றவர்கள் நம் இடத்தை பிடிப்பார்கள்.

### சுயத்தை மாற்ற வேண்டும்

**வசனம் 17-19** நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால், நான் - நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும் உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன், ஆகையால் நீ ஜாக்கிரதையாக இருந்து, மனந்திரும்பு."




நாம் வரலாற்றின் பொருளாதார ரீதியாக பணக்கார காலத்தில் வாழ்ந்தாலும், மகிழ்ச்சிக்கும், திருப்திக்கும் அது தளர்வான தொடர்புடையதாக உள்ளது. நம்மை விட அதிர்ஷ்டம் இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதற்காக நம் தேவைக்கு அதிகமாக சம்பாதிப்பது நல்லது தான். (உபாகமம் 15:7-11, 24:14-15, கலாத்தியர் 2:10) ஆயினும், நம்மிடம் போதுமான அளவு இருக்கும்போது, நாம் ஆூரணர்கள் என்பதை மறந்துவிடும் ஆபத்து உள்ளது -- நன்மை மற்றும் தீமையான இயல்புகளின் கலவை (அப்போஸ்தலனாகிய பவுல் ஒப்புக்கொண்டபடி,ரோமர் 7:15-23)

நமக்கு எதுவும் தேவையில்லை என்று விழுந்துபோன இயல்பு நினைப்பதற்கு வேறு வழிகளும் உள்ளது. "நான் அலமாரியில் வைத்திருக்கும் அனைத்து வேதாகம மொழிபெயர்ப்புகளையும், ஒத்த வாக்கிய அகராதிகளையும் மற்றும் சொற்களஞ்சியங்களையும், "வேதாகமத்தின் ஆய்வுகள்", மறுபதிப்புகள் மற்றும் பிற விஷயங்களை பாருங்கள். நான் அவைகளை புதிதாக வைத்திருக்கிறேன். எனக்கு வேறு என்ன வேண்டும்?" என்று நான் நினைக்கலாம். இவைகள் அனைத்தும் வெறுமனே அலமாரியில் இருந்தால், அதனால் நமக்கு என்ன உதவி ? நன்கு பயன்படுத்தப்பட்ட வேதாகமத்தை நாம் பாராட்டவேண்டும். அதையும் தாண்டி, வேத வசனங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

நாம் பெற்ற அறிவில் வேறுபாடுகள் உள்ளது. இயேசு கிறிஸ்து அனைவருக்காகவும் ஈடுபலியைச் செலுத்தினார் என்பதே கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளம். "ஒவ்வொரு மனுஷனுக்காகவும் இயேசு கிறிஸ்து மரணத்தை ருசிப்பார்த்தார்" என்பதற்கு எல்லோரும் பயனடைவார்கள் என்று அர்த்தம் -- "இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது." (1தீமோத்தேயு2:5-6, எபிரெயர் 2:9) முழு உலகிற்கான செய்தியில் நம்முடைய இந்த நற்செய்தி, மையமாக இருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம் (*Parousia*) தொடங்கியுள்ளது (உலகத்தின் உயிர்த்தெழுதலுக்கு முந்தைய துவக்க நிலை) என்று நாம் முடிவு செய்தால், நாம் பாபிலோனிலிருந்து வெளியே வருவதற்கு அழைக்கப்படுகிறோம். நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதற்கு ஏற்ப நாம் நடக்கவேண்டும்.

குறைவான முக்கியத்துவம் வாய்ந்தவை, சிலர் வேதத்திலிருந்து மறுசீரமைப்பு கிறிஸ்துவின் பிரசன்னத்தில் இருந்து தொடங்குகிறது என்றும், அதேநேரத்தில் மற்றவர்கள் உண்மையுள்ள சபை நிறைவடையும் வரை மறுசீரமைப்பு, காத்திருக்கிறது என்றும் முடிவுக்கு வருகிறார்கள். இன்னும் சிலர் நாம் முடிவு காலத்தில் இருந்தாலும், இன்னும் முடிவு வராததுபோல, நாம் மறுசீரமைப்பின் காலத்தில் இருந்தாலும், அது இன்னும் எதிர்காலத்தில் உள்ளது என்று வேதாகமத்தின் படி முடிவு செய்கிறார்கள். நாம் எதை நினைத்தாலும், இந்த கேள்வியைப் பற்றி நான் என் மனதை மாற்றிக்கொள்ள வேறு ஏதாவது செய்வேனா? மேலும் நாம் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல்... வாக்குவாதம் செய்யாதபடிக்கு" (2தீமோத்தேயு2:14) ஜனங்களை மறுசீரமைப்பின் நம்பிக்கையினால் ஆறுதல்படுத்துவதே முக்கிய கருத்தாகும்.

மாம்ச இஸ்ரயேலருக்கு ஒரு மீட்பர் தேவை என்பதை உணர்த்தும் படி, அவர்களின் பாவத்தன்மையைச் சுட்டி காட்ட தேவன் மோசே மூலம் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார். நாம் பூரணத்துவத்தின் தரத்தில் இருந்து எவ்வளவு குறைவாக இருக்கிறோம் என்பதை காட்டுவதற்கு நம்முடைய வேத படிப்பு நம்மை கொண்டு வருகிறதா? அக்கினியினால் சுத்திகரிக்கப்பட்ட பொன், தெய்வீக தன்மை "அக்கினியைப்" போன்ற அனுபவங்களினால் உருவாகும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. (1பேதுரு4:12-16) யேகோவா தேவன்," புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார், அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும் படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும் படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்."(மல்கியா 3:2-4) பொன்னான தாது அதன் பாத்திரத்தில் நெருப்பினால் சுத்திகரிக்கப்படும்போது, சுத்திகரிப்பவர் அந்த பொன்னில் தனது சொந்த உருவம் பிரதிபலிக்கும் வரை அதில் உள்ள கசடு எரிந்து கொண்டே இருக்கும். அதேபோல நம் ஒவ்வொருவருக்கும் செய்யப்படும்.

வெண் வஸ்திரம் தூய்மையைக் குறிக்கின்றது, இந்த தூய்மை கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் மட்டுமே பெறமுடியும். ".. இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்து போடுங்கள் என்றார்.... பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன்" (சகரியா3:4) என்று யேகோவா தேவனின் தூதன் கூறினார்.

நாம் கண்களை அகலமாக திறந்துவைக்க வேண்டும். "ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய

அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். "(மத்தேயு 24:24) இன்று புனிதர்களைஅல்லது நிறுவனங்களைப் பற்றி (ஒரு பிரிவு அல்லது மற்றொன்றில்) கண்டுபிடிக்கப்பட்ட அல்லது மிகைப்படுத்தப்பட்ட கதைகள் உள்ளது. நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு எங்களோடு இணைய வேண்டும் அல்லது மற்ற மொழிகளில் பேச வேண்டும் (அந்நிய அல்லது கேவலமான மொழியாக இருந்தாலும் )அல்லது தெய்வீக சுகமளிப்பவர்களை (விசேஷமாக பணத்திற்கு)முன்வைக்கவேண்டும் என்று சொல்லுவார்கள்.


இவற்றில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பரிசுத்த வேதாகமத்திலிருந்து ஒரு நம்பிக்கையின் பகுதியை நீங்கள் கேள்வி எழுப்பினால், சிலர் உங்கள் விசுவாசம் குறைவுள்ளது (உங்களுக்கு மிக மோசமான விஷயங்கள் நடக்கும்) என்று சிலர் கூறுவார்கள். ஆனால் இப்படிப்பட்டவைகள் தவிர்க்கப்படவேண்டும். "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசாயா1:18) கிறிஸ்தவ குணமே முக்கியமானது. இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் கிறிஸ்துவோடு சேரவேண்டும்.

### வித்தியாசங்களைக் குறித்து பாஸ்டர் ரஸ்ஸல்

சபையின் ஆவிக்குரிய தேவைக்கு பாஸ்டர் சி. டி. ரஸ்ஸல் கொடுத்த மிக கடினமாக ஆலோசனை இதுவாக தான் இருக்க முடியும் : நியாயமான, நிறைவுள்ள அடிக்கடி வழக்கமான சந்திப்புகள் இருக்கவேண்டும். அதில் சத்தியத்தின் வேறுபட்ட பார்வை என்று ஒருவர் நம்புவதை முன்வைப்பதற்கு, நியாயமான முழு வாய்ப்புகளை அங்கீகரிக்கப்பட்ட சபை அவருக்கு வழங்கவேண்டும்.

"தெய்வீக வெளிப்பாட்டின் ஆய்வில், சபை முதலும் கடைசியாகவும், எப்போதும் கிறிஸ்துவின் உபதேசங்களின் (எந்த உறுப்பினரும் மாற்றவோ அல்லது திருத்தவோ கூடாது, அல்லது அதற்குரிய எந்த கேள்விகளுக்கும் சம்பந்தம் இல்லை) அடிப்படைக் கோட்பாடுகளுக்கு இடையிலான வேறுபாட்டை எப்போதும் அங்கீகரிக்க வேண்டும். மேலும் மேம்பட்ட கோட்பாடுகளின் விவாதங்கள், அடிப்படைக் கோட்பாடுகளுடன் முழுமையாக இணங்க வேண்டும்" என்பதே அவருடைய முதல் அறிவுறுத்தலாக இருந்தது. (*Studies in the Scriptures*, Volume 6, pages 314-319).

இதன் காரணத்தை அவர் பின்வருமாறு விளக்குகிறார் -" இதுபோன்ற சில குறிப்புகள் இல்லாவிட்டால், இரண்டு ஆபத்துகள் சந்திக்கப்படலாம் - ஒன்று, கிறிஸ்தவமண்டலத்தின் பெயர் சபைகளில் தற்போது நிலவும் அபாயத்தில் விழும் ஆபத்து நேரிடலாம், அதில் அவர்களின் வழக்கமான சபைக்கூட்டங்களில் மூலம் கூட அவர்களின் காதுகளை அணுகுதல், இயலாத காரியமாகிவிட்டது. அதாவது அவர்களை எந்த வழியில் அணுகினாலும் அவர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள். மற்றொரு ஆபத்து என்னவென்றால், தனிநபர் கொண்டிருக்கும் ஒரு




கோட்பாட்டைக் அவருடைய தீர்ப்பை உண்மையாகக் கருதினால், அது எவ்வளவு தப்பாக இருந்தாலும், பகுத்தறிவற்றதாக இருந்தாலும் சரி, அது நியாயமான விசாரணையைக் கொண்டிராமல் ஒருபோதும் திருப்தி அடையாது. அதற்கு பதிலாக அந்த தலைப்பில் தொடர்ந்து தடுமாற்றம் ஏற்படும்."

### நான் வாசற்படியில் நிற்கிறேன்

**வசனம் 20** "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்."

"நான் சீக்கிரமாய் வருவேன்" அல்லது "நான் வருவேன்" என்று இயேசு 1, 4, மற்றும் 6 ம் சபைகளுக்கு கூறுகிறார். (வெளிப்படுத்தல் 2:5, 25, 3:11)ஆனால் சபையின் கடைசி நிலையில், "நான் வாசற்படியில் நன்று தட்டுகிறேன்" அல்லது நான் இங்கு இருக்கிறேன் என்று அவர் கூறுகிறார்.வெளிப்படுத்தல் 10:11 லில் சொல்லப்பட்டது போல இப்போது நாம் அவருடைய சத்தத்தை கேட்க வேண்டும். (மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், இராஜாக்களையுங் குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும்.) மற்றும் 18:4 (என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், ...அவளைவிட்டு வெளியே வாருங்கள்) என்று சொல்லவேண்டும். இது ஒரு தனிப்பட்ட விஷயம்.

**வசனம் 21** "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்."

முதலில் நாம் இந்த உலகத்தையும், மாம்சத்தையும் பிசாசையும் ஜெயிக்கவேண்டும். "இந்த வார்த்தை உண்மையுள்ளது - என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம். அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம், "(2தீமோத்தேயு2:11-12) சுருக்கமாக சொல்லபோனால், சிலுவை இல்லாமல், கிரீடம் இல்லை.

வெற்றி அடைய வேண்டிய சில விஷயங்கள் வெளிப்படுத்தல் 20:4-6இல் பரிந்துரைக்கப்படுகிறது. "...இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்."

**வசனம் 22** "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன்கேட்கக்கடவன் என்றெழுது என்றார்."

பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பவரை தவிர வேறு யார் ஆவியானவர் சொல்வதை கேட்க முடியும்? (1கொரிந்தியர் 2:10-12) இது நமக்கான செய்தி.

தேவனுடைய ஏழு ஆவிகள், அவருடைய சிங்காசனத்திற்கு முன் செயலற்ற நிலையில், இயேசுவின் முதல் வருகையில் அவருக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தேவனுடைய திட்டத்தில் இருந்தது. ஆனால் கிறிஸ்துவின் ஈடுபலியோடு, தேவனுடைய ஏழு ஆவிகள் (ஏழு நிலைகளில் உள்ள பரிசுத்த ஆவி)"பூமியெங்கும் அனுப்பப்படுகிறது" (வெளிப்படுத்தல் 4:5, 5:6) வரவிருக்கும் யுகத்தின் ஆசாரியத்துவத்தின் வளர்ச்சிக்காக, இந்த சுவிசேஷ யுகத்தின் சபையின் ஏழு நிலைகள் ஒவ்வொன்றிற்கும் பரிசுத்த ஆவி அனுப்பப்படுகிறது. இந்த இறுதிக் கட்டத்தில் ஜீவிப்பது நம்முடைய பாக்கியம். நாம் "கேட்போம்"

ஏழு காலங்கள்

# கண்ணோட்டம்



David Rice

"என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்ககளின் இரகசியத்தையும் எழுது. அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபையின் தூதர்களாம், நீ கண்ட ஏழு குத்து விளக்குகளும் ஏழு சபைகளாம்." (வெளிப்படுத்தல் *1:20*)

வெளிப்படுத்தல் 1-3 அதிகாரங்களின் ஏழு சபைகளுக்கு, சுவிசேஷ யுகத்தில் ஏழு தொடர்ச்சியான காலங்களுக்கு தீர்க்கதரிசனமான அர்த்தங்கள் உண்டு என்ற கருத்து நம்முடைய சகோதரர்கள் மத்தியில் பரவலாக உள்ளது. இது மட்டுமே பொருள் என்று அல்ல. இந்த நகரங்கள் ஒவ்வொன்றிலும் சபைகள் இருந்தன. சொல்லர்த்தமாக, ஒரு தேவதூதன் மூலம் தொடர்பு கொண்ட இயேசு கொடுத்த செய்திகளை எழுதும்படி யோவான் அறிவுறுத்தப்பட்டார்.

"... நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது." (வெளிப்படுத்தல் 1:11)

இந்த ஒவ்வொரு இடத்திலுள்ள கிறிஸ்தவ சமுதாயம் இந்த புத்தகத்தின் ஒரு நகலைப் பெற்றது என்று பொருள்படுவதாக தோன்றுகிறது. இயேசு விரும்பிய குறிப்பான ஆலோசனைகளை ஒவ்வொரு சபையும் பெறுவதை இது உறுதியளிக்கிறது. நிச்சயமாக, ஒவ்வொரு சபையும் அவர்களுக்கான செய்தியை சிறப்பான ஆர்வத்துடன் பார்த்திருக்க வேண்டும். இவ்வாறு யோவானின் நாளில், கிறிஸ்தவர்கள் தங்களுக்கான பிரத்யேகமான இயேசுவின் ஆலோசனையைப் படித்ததினால், உடனடியான நன்மை அடைந்தனர்.


குறைந்தபட்சம் ஏழு சமூகங்களுக்கு இந்தப் புத்தகத்தின் விநியோகமானது, தொகுப்பின் அனைத்து நம்பகத்தன்மையையும், அது ஓர் அப்போஸ்தலர் மூலம் வந்ததென்பதையும் குறிக்கும். சபையானது பின்னாட்களில், ஒரு வரலாற்று ஒலி பரிமாற்றத்துடன் ஒரு புத்தகத்தைப் பெறுவதற்காய் புத்தகத்திலிருக்கும் ஆர்வமூட்டுகிற அடையாளங்களானது, பரந்த மரியாதையையும், பரவலான விநியோகத்தையும் ஆதாயமடையச் செய்தது. இந்த வகையான புத்தகத்திற்கு, அது மிகவும் முக்கியமானதாய் இருக்கும்.

## ஏழு தூதர்கள்

ஒவ்வொரு இடத்தில் உள்ள கிறிஸ்தவ சமுதாயம் போதுமான அளவுக்கு பெரிதாக இருந்தது. அவர்கள் மத்தியில் பொதுவான ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தின் உணர்வுகளோடு ஒரே நகரத்தில் பல்வேறு கூட்டங்கள் இருந்தன. ஒவ்வொரு சமூக கூட்டமும் தங்களுடைய பகுதியில் உள்ள சகோதரர்களுக்கு அக்கறை கொண்ட ஒரு தலைவரை மேய்ப்பராக அங்கீகரிப்பது ஆரம்ப காலத்தில் வழக்கமாக இருந்தது. உதாரணமாக, யூதாவின் சகோதரராகிய யாக்கோபு, எருசலேமில் மூப்பருக்குரிய பங்கை வெளிப்படையாக நிரப்பினார் என்பதை புதிய ஏற்பாட்டில் அவரைப் பற்றிய குறிப்புகளை காணலாம். (அப்போஸ்தலர் 12:17, 15:13, 21:18, கலாத்தியர் 1:19, 2:12, 1கொரிந்தியர் 15:7, யூதா1:1)

ஒவ்வொரு ஏழு சபைகளுக்கும் துவக்க செய்தியில் சொல்லப்பட்ட அறிவுறுத்தல் ஒத்திருக்கிறது. இது முதல் சபையின் எடுத்துக்காட்டில் பிரதிபலிக்கிறது. "எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது.." இந்த கட்டளைக்கு யோவான் எவ்வாறு இணங்கினார் ? அவர் ஒவ்வொரு சபையின் மூப்பருக்கு அல்லது "தூதருக்கு" செய்தியை அனுப்பியிருப்பார். ஆவிக்குரிய மூப்பர்களை "தூதர்கள்" என்று குறிப்பிடுவது அல்லது மற்றவர்களுக்கு உதவுவதற்கு தேவனால் பயன்படுத்தப்பட்ட தூதர்களைப் பற்றிய எடுத்துக்காட்டுகள் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டிலும் உள்ளது.

"ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும், வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே, அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்" (மல்கியா2:7) இங்கு எபிரெய வார்த்தை மலாக்கில் *malak* (H4397),இருந்து "தூதர்" என்ற வார்த்தை மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இந்த மலாக் 90 முறைக்கும் மேல் தூதர் என்றும் 4 முறை தூதுவர்கள் “ambassadors” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, புதிய ஏற்பாட்டில்," தூதர்களினிமித்தம்



Statue of James of Jerusalem

ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்." (1கொரிந்தியர் 11:10) இது மூப்பர்களுக்கு கொடுக்கக்கூடிய மரியாதைக்கான அடையாளத்தைக் குறிக்கிறது.

**ஏழு சபையின் காலங்கள்**

அடுத்த கட்டத்தில், சுவிசேஷ யுகம் முழுவதிலும் உள்ள ஏழு காலங்களை அடையாளப்படுத்தும் ஏழு சபைகளை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் உள்ள அந்தந்த "தூதர்", அந்தந்த காலத்தில் இருப்பதாக பரவலாக கருதப்படுகிறார்கள். குறிக்கப்படுகிறார்கள். சபையை வழிநடத்த இயேசு யாரோ ஒருவரைப் பயன்படுத்தினார். அதாவது அந்த காலத்தின் அனுபவங்களுக்கு பொருத்தமான ஒருவரை பயன்படுத்தினார்.

வெளிப்படுத்தல் 12இல், உண்மையுள்ள ஆனால் துன்புறுத்தப்பட்ட அந்த ஸ்திரீயாகிய சபை ஒரு அமைப்பாக 12 நட்சத்திரங்கள் கொண்ட கிரீடத்தை அணிந்திருந்தாள். இவைகள் 12 அப்போஸ்தலர்கள் அதாவது 12 தனிநபர்களை குறிக்கின்றன. வெளிப்படுத்தல் 1:16 இல் இயேசு" தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்.." இவைகளும் வரலாற்றில் முக்கியமான தருணங்களில் சபைக்கு உதவுவதற்காக இயேசுவால் வழிநடத்தப்பட்ட தனிப்பட்ட நபர்களைக் குறிப்பதாக தோன்றுகிறது.

மேலே உள்ள கட்டுரைகளில், சபையின் ஏழு நிலைகளுக்கும், ஒவ்வொரு தூதரை அடையாளம் காண குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் உள்ளது. நிச்சயமாக இங்கு விளக்கம் உள்ளது. தற்போதைய எழுத்தாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுகளை ஒத்துக்கொள்கிறார். ஆனால் சகோதரர்கள் சில சமயங்களில் தங்கள் தேர்வுகளில் வேறுபடுகிறார்கள். (இந்த பத்திரிகையின் ஆசிரியர்களிடமும் இது காணப்படுகிறது உண்மைதான்.)

உதாரணமாக, அப்போஸ்தலனாகிய பவுல் பல சபைகளை ஸ்தாபித்து, அவைகளுக்கு அறிவுறுத்துவதற்கு, புதிய ஏற்பாட்டின் 14 புத்தகங்களை அவருடைய நிருபங்களாக வழங்கினார் என்ற காரணத்தினால், அவர் முதல் சபையின் தூதராக கருதப்படுகிறார். பவுல் மனம் மாறுவதற்கு முன்பு, பெந்தெகொஸ்தே நாள் அன்று எருசலேமில் கூடியிருந்த அப்போஸ்தலர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து வந்த வருடங்களில், சபை நியாயப்பிரமாணத்தில் இருந்து விலகி, புறஜாதிகளிடம் விரிவடைந்ததன் காரணத்தினாலே, சபையை வடிவமைத்தில் பவுல் மாபெரும் தாக்கத்தை கொண்டிருந்தார். இப்படியாக இருந்தபோதிலும், அப்போஸ்தலனாகிய பேதுரு அந்த காலத்தின் துவக்கதில் இருந்ததினாலும், பெந்தெகொஸ்தே நாளில் யூதர்களுக்கும், கொர்நேலியுவை அவர் சந்தித்ததினால் புறஜாதிகளுக்கும் பரம அழைப்பின் "திறவுகோல்களையும்", திறப்பதற்கான சிலாக்கியத்தை இயேசு பேதுருவுக்கு கொடுத்ததினாலும் சில சகோதரர்கள்




அவரை இந்த கால தூதரின் வேட்பாளராக கருதுகின்றனர். (மத்தேயு16:18,19)

ஏழு நிலைகளின் காலங்களை ஒருவர் எவ்வாறு பிரிக்கிறார் என்ற காரியம் மற்றும் அந்த காலங்களின் தூதர்கள் யாராக இருக்கலாம் என்பதிலும், ஒருவரின் கருத்து பாதிக்கப்படலாம். மேற்கண்ட கட்டுரைகளில் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளோடு எழுத்தாளர் உடன்படுகிறார். ஆனால் சகோதரர்கள், நம்முடைய பதிப்பாசிரியர்கள் உட்பட, அவர்கள் காலத்தை எவ்வாறு பிரிக்கிறார்கள் என்பதில் வேறுபாடுகள் உள்ளது. 1882ல், R336ன் துவக்கத்தோடு சகோதரர் W. I. மான் Mann ஏழு சபைகளைப் பற்றி தொடர்ச்சியான கட்டுரைகள் எழுதினார். பிலதெல்பியா சபை, ஆறாம் காலத்தை சீர்த்திருத்தத்தோடு இணைக்கிறார். ஒருவர் இந்த அணுகுமுறையைப் பின்பற்றினால், அவர் மார்ட்டின் லூத்தரை ஆறாவது காலத்தின் தூதராக அடையாளம் காணக்கூடும். இருப்பினும், சீர்த்திருத்தம் ஐந்தாம் காலப்பகுதியான சர்தை சபையின் காலத்துடனும், பிலதெல்பியா விரிவான புராட்டஸ்டன்ட் உடனும் (சீர்த்திருத்தத்தின் முதல் 150 ஆண்டுகளுக்குப் பிறகு) இணைந்திருப்பதாகவும் பல சகோதரர்களால் கருதப்படுகிறது. ( ஐந்தாம் கால எக்காளம் 150 வருட காலமாகும் என்பதை வெளிப்படுத்தல் 9:5,10. - ஒப்பிட்டுப் பார்க்கவும்.)

இந்த விஷயத்தில் மார்டின் லூதர் ஐந்தாம் சபையான சர்தையோடு இணைவார், இவர் லூதரின் முன்னோடி, காலம் நான்கின் பிற்பகுதியில் ஜான் வைக்ளிஃப் ஒரு "விடிவெள்ளி நட்சத்திரமாக" இருப்பார். மற்றும் ஆறாவது சபை பிலதெல்பியா காலத்திற்கான மற்றொரு துதரை ஒருவர் தேட வேண்டும். அதாவது அந்த கட்டுரைகளில் காண்பித்தது போல.

மற்றொரு விருப்பம் நான்காம் சபையாகிய தியத்தீராவை பாதிக்கிறது. போப்பமைப்பின் மேலாதிக்க ஆண்டுகளாகிய 1260 வருடங்களின் துவக்க தேதி கிபி 539ல் ,யேசபேல் (போப் அமைப்பு) வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதி என்று ஒருவர் இந்த காலத்தைக் குறித்து கருதலாம். அந்த சமயத்தில் ஊழியம் செய்த ஒருவரை தியத்தீராவின் தூதராக தேடலாம். இதற்கு தியத்தீராவைப் பற்றிய கட்டுரையில் உள்ள அடி குறிப்பு ஒன்றைக் கவனியுங்கள்.

## கால அளவுகள்

இருப்பினும், ஒரு கணம், இந்த இதழின் கட்டுரைகளில் உள்ள நேரக் காலங்களைக் கையாள்வதினால் வரும் முடிவுகளை அப்படியே கருத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த நிலையில், ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தையும் குறிக்கும் கிபி ஆண்டுகளாவன - 33, 73, 325, 1157, 1517, 1667,1874 இந்த தேதிகளுக்கு சரியான காரணங்கள் உள்ளது. அது பெந்தெகொஸ்தே நாளில் சபை தொடங்கிய வருடமாகும்.

இரண்டாவது தேதி யூத அமைப்பின் மீதான தீர்ப்புக்கு 40 வருடங்களை அனுமதிக்கிறது. இது எக்காள தீர்ப்பு ஒன்றின் குறிப்பாக point of Trumpet Judgment One தெரிகிறது.(வெளிப்படுத்தல் 8:7) 73 ஆம் ஆண்டு மசாடாவின் வீழ்ச்சியுடன் ரோமானியர்களுக்கு எதிரான யூத எதிர்ப்பின் முடிவைக் கொண்டுவந்தது. 6 முதல் 73 வரையில் உள்ள முடிவான ஏழு ஆண்டுகளில் யூதக் கிளர்ச்சி முடிவடைந்தது. நோவாவின் வெள்ளத்திலும் கூட நாற்பது வருடங்கள் தோன்றுகிறது. அங்கு 40 நாட்கள் மழை பெய்தது. பேழைக்குள் பிரவேசிப்பது, கிறிஸ்து கிபி 33ல் தொடங்குகிறார் என்றால் (1பேதுரு 3:21),பின் வரும் 40 நாட்கள், 40 வருடத்திற்கு பின்வரும் தீர்ப்பைக் குறிக்கும். இது நம்மை கிபி 73க்கு அழைத்துச் செல்லும்.

325 ஆம் ஆண்டு நீசியா ஆலோசனை கூட்டத்தின் தேதியாக பிரபலமாக அறியப்படுகிறது. "ஆரம்பகால கிறிஸ்தவமானது, பொதுவாகச் சபை வரலாற்றாசிரியர்களால்.. நீசியாவின் முதல் கவுன்சிலுடன் (325) முடிவடைகிறதெனக் கணக்கிடப்படுகின்றது" (விக்கிபீடியா, பிலிப் ஷா∴ப் அவர்களின் வார்த்தையின் மேற்கோள், 1998, கிறிஸ்தவ சபையின் வரலாறு). இந்த விஷயத்தில், சிமிர்னா காலமானது, 73 முதல் 325 வரைக்குமானதென்றால், அது 252 வருடங்கள் நீடித்தது என்பதாகும். இது ஓர் ஆர்வமூட்டக்கூடிய எண்ணாகும், ஏனெனில் இது 1914 இல் சுரூபத்தை அழிப்பதற்கு வழிவகுத்த, 2520 வருடங்களின் மிகவும் பிரபலமான காலத்தின் பத்தில் ஒரு பகுதியாகும். தொடர்புடைய எக்காளத் தீர்ப்பு இரண்டு பேகன் (புறச் சமயச் சார்புடைய) ரோமின் வீழ்ச்சி மற்றியது (வெளிப்படுத்தல்)"இது



John Huss, a journey of no return, 1415

10 x 252 ஆண்டுகளுக்குப் பிறகு முழு சுரூபமும் வீழ்ச்சியடைவதற் கான ஆரம்ப அறிகுறியாகும்.

பெர்கமு காலக்கட்டத்தில் பெயரளவிலான சபையானது அதிகாரத்தைப் பெற்றது, சபையை ஆவிக்குரிய நீதியில், "பாபிலோனிய சிறைப்பிடிப்புக்கு" இட்டுச் சென்றது. இது இருண்ட யுகங்களின் மையமான 1157 - க்கு நம்மை அழைத்துச் சென்றால், பெர்கமுவின் காலக்கட்டம் 832 ஆண்டுகளாக இருக்கும். இது எரேமியா 52 :20 இல் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்ட எண்ணாகும், அப்போதுதான், சிதேக்கியா இராஜா சிறைபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாம்சீக இஸ்ரயேல் பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டுப்போனது.

1157 முதல் 1517 வரையிலான, தியத்தீராவின் காலக்கட்டமானது, 360 ஆண்டுகளாக இருக்கும், ஒரு தீர்க்கதரிசனக் காலம் பெரும்பாலும் தீர்க்கதரிசனத்தில் பயன்படுத்தப்படுகிறது. வெளிப்படுத்தல் 2 21 பற்றிய தியத்தீரா காலம் பற்றிய, தியத்தீரா காலம் பற்றிய, சகோத. ∴பிராங்க ஷாலியு அவர்களின் விளக்கங்கள் பின்வருமாறு -"அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்... மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை." *chronos*,"க்ரோனோஸ் என்கிற கிரேக்க வார்ததையிலிருந்து" தவணை/ என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைக்கு, "ஒரு காலம்" என்பது பொருளாகும். தீர்க்கதரிசனத்தில் பயன்படுத்தப்படட ஓர் அடையாள ஆண்டு... 360 ஆண்டுகளாகும். (*The Keys of Revelation*, எனும் புஸ்தகத்தில், பக்கம்63)

1517 முதல் 1667 வரையிலான, சர்தையின் காலக்கட்டம், 150 ஆண்டுகளாக இருக்கும், இது வெளிப்படுத்தல் 9 :5,10 இல் வரும், ஐந்தாம் எக்காளத்தின் "ஐந்து மாதங்களுக்கு" ஒத்திருக்கின்றது.

1667 முதல் 1874 வரையிலான, பிலதெல்பியாவின் காலக்கட்டம், 207 ஆண்டுகளாக இருக்கும் ஒற்றைப்படை ஆண்டுகள், பின்வருமாறு பிரிக்கலாம் - 3 x 23 x 3. மூன்று என்பது மீட்பைக் குறிக்கும் எண்ணாகும். இந்தக் காலக் கட்டமானது, (விசுவசத்தினால் நீதிமானாக்கப்படுதல்) ஈடுபலியின் மீது நிறுவப்பட்டிருந்த ஐந்தாம் காலக்கட்டந் துவக்கி, அதே ஈடுபலியின்(மற்றும் அதின் முழு முக்கியத்துவமான அனைவருக்கும் மறுசீரமைப்பு என்பதின்) மீது நிறுவப்பட்டிருந்த ஏழாம் காலம் வரை, நீடித்தது. பிலதெல்பியா காலக்கட்டத்தில், அட்வெண்டிஸ்ட் இயக்கத்தின் மூலம் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகுதல் பற்றி, 2300 ஆண்டுகளின் தீர்க்கதரிசனத்தின் மூலமாகக் கணிக்கப்பட்டது.

## முற்போக்கான காலங்கள்

வெளிப்படுத்தலின் ஏழு சபைகள், ஏழு தொடர்ச்சியான காலங்களில் சபையின் வளர்ச்சி பல்வேறு வழிகளில் ஆதரிக்கப்படுகிறதைக் குறித்த தீர்க்கதரிசனமான

அர்த்தத்தை கொண்டுள்ளது. இங்கு ஒரு சுருக்கமான மற்றும் எளிய அணுகுமுறை உள்ளது. எபேசு சபை ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டார்கள் என்பதே அந்த சபையின் மேல் கொண்ட அக்கறையாகும். அவர்கள் ஆதியிலே கிறிஸ்துவுக்காக கொண்டிருந்த அன்பு மற்றும் வைராக்கியத்தின் பிரகாசம் அப்போஸ்தலர் நடபடிகள் நன்கு சாட்சியமளிக்கிறது. அதனால் அந்தச் செய்தி ஆரம்பகால சபையுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளது.

"மரணபரியந்தம் உண்மையாயிரு" (வெளிப்படுத்தல் 2:10) என்று சிமிர்னாவுக்கு செய்தி சொல்லப்பட்டது. இந்த காலகட்டத்தில் புறஜாதியான ரோமின் மூலம் பிசாசு, "உங்களில் சிலரை" பல்வேறு துன்புறுத்தல்களால் மரணத்தின் சிறைச்சாலையில் போடுவான். இந்த உபத்திரவங்களில் மிக கொடுமையானது "பத்து நாட்கள்", அதாவது 303 முதல் 313 வரை நீடிக்கும்.


பெர்கமுவின் விசுவாசமான "அந்திபா" அவரது விசுவாசத்திற்காக பாராட்டப்பட்டார். இந்த பெயர் தந்தைக்கு எதிரானது. அதாவது அனைவருக்கும் ஆவிக்குரிய தந்தை போப்பு என்பதை அங்கீகரிப்பதற்கு எதிரானது என்று பொருள்படுகிறது. இந்த காலகட்டத்தில், நிக்கோலாய் மதஸ்தினர்களின் கோட்பாடு, தலைமைத்துவம், பெயர் சபையின் வளர்ச்சியுடன் உயர்ந்தது - ஆவிக்குரிய "யேசபேல்" முழுவதையும் சிதைத்ததை கவனித்ததோடு, இது நான்காம் சபை தியத்தீராவில் தொடர்ந்தது. (வெளிப்படுத்தல் 2:20)

"நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்" (வெளிப்படுத்தல் 2:25)என்று நான்காவது காலகட்டத்தில் இருப்பவர்களிடமும் "திருடனைப் போல் உன்மேல் வருவேன்"(வெளிப்படுத்தல் 3:3) என்று ஐந்தாம் சபைக்கும், "சீக்கிரமாய் வருகிறேன்"(வெளிப்படுத்தல் 3:11) என்று ஆறாவது சபைக்கும், "வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்" -- கிறிஸ்துவின் திரும்புதல் (வெளிப்படுத்தல 3:20, லூக்கா12:36) என்று ஏழாவது சபைக்கும் இயேசு கூறினார். இந்த தொடர் முன்னேற்றத்தைப் பற்றி பேசுகிறது.

### காலம் இரண்டு

இரண்டாவது தூதர் அப்போஸ்தலராக இருக்க வேண்டுமா அல்லது அப்போஸ்தலர்களின் சகாப்தத்தைத் தொடர்ந்து வேறு யாராவது இருக்கக்கூடுமா என்று ஒருவர் ஆச்சரியப்படலாம். இந்த விருப்பத்தேர்வு கடந்த சில ஆண்டுகளாக நம்மை ஈடுப்படுத்தியிருந்தது. ஆனால் மற்ற அப்போஸ்தலர்களை விட அதிகமாக வாழ்ந்தவரும், எருசலேம் மீதான தீர்ப்பு கடந்துவிட்டபின்னும் வாழ்ந்த அப்போஸ்தனாகிய யோவான் தான் இரண்டாம் தூதன் என்ற பொதுவான கருத்தை தற்போது ஆதரிக்கிறோம்.

வெளிப்படுத்தலின் ஏழு துதர்களை குறிப்பிடுவதற்கு, இஸ்ரயேலின் முதல் ஏழு நியாயாதிபதிகளை ஒருவர் எடுத்துக் கொண்டால் - ஒத்னியேல், ஏகூத், சம்கார், தெபொராள், கிதியோன், தோலா மற்றும் யாவீர் - ஏகூத், இருபுறமும்



Charles Russell, emphasizing the Ransom

கருக்குள்ள ஒரு கத்தியை எக்லோனை கொன்றதை கவனிக்கவும். அப்போஸ்தலன் யோவான், அவருடைய சுவிசேஷம் மற்றும் முதல் நிருபமாகிய, இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தால் ஞானக் கொள்கைகளை அழித்தார். (எபேசியர் 6:17, எபிரெயர் 4:12) எக்லோனைப் போலவே, "அறிவியல் என்று தவறாக அழைக்கப்படும்" (1தீமோத்தேயு6:20) ஞானக் கொள்கைகள், ஒரு காலத்தில் தேவனுடைய ஜனங்களிடையே ஒரு அச்சுறுத்தும் குடியிருப்பை ஆக்கிரமித்தது. ஆனால் எக்லோன் ஒரு இஸ்ரயேலன் அல்லாதது போல விஞ்ஞான கொள்கைகளும் கிறிஸ்தவம் அல்ல.

யோவானின் சீஷனாகிய பாலிகார்ப், ஆரம்பகால கிறிஸ்தவத்திற்காக உயிர் துறந்த தியாகிகளில் குறிப்பிடத்தக்கவர். பிறமத தெய்வங்களுக்கு ஒரு சிறிய அஞ்சலியைக்கூட வழங்க மறுத்த, அவரது உண்மையான உயர்ந்த உதாரணம், அவருடைய உயிரை இழக்கச் செய்தது. பின்னர், 303 மதல் 313 வரை டையோக்லீஷியனால் ஆரம்பிக்கப்பட்ட "பெரும் துன்புறுத்தலை" தாங்கிக்கொள்ள சிமிர்னா காலத்தில் பலருக்கு இது ஊக்கமளித்தது.

{33 முதல் 313 வரை 280 ஆண்டுகள் அல்லது வருடத்தின் 40 வாரங்களாகும். நாற்பது வாரங்கள் மனிதன் கர்ப்பத்தில் இருக்கும் நிலையான காலமாகும். இதனால் கிறிஸ்தவ சபை அழிப்பதற்கு அச்சுறுத்தப்பட்டபோது, அந்த ஸ்திரீ பிரசவ வலியினால் துன்பப்படுகையில் பிரசவித்தாள்.}

### ஏழாம் காலம்

ஏாாம் காலத்திற்கான அடித்தளக் கோட்பாடு ஈடுபலி யாகும். இது நெகேமியா எட்டாம் அதிகாரத்தில் அடையாளமாக குறிப்பிடப்படுகிறது. இந்த அதிகாரத்தில் நியமிக்கப்பட்ட ஆளுனராகிய நெகேமியாவின் கீழ் ஜனங்களை வழிநடத்தும் ஆசிரியராகவும், ஆவிக்குரிய தலைவராகவும் எஸ்றா இருந்தார். நெகேமியா நம்முடைய ஆண்டவராம் இயேசுவை சித்தரிக்கிறார் என்றும், அறுவடையின் போது இயேசுவின் கீழ் ஒரு ஆசிரியராகவும் ஆவிக்குரிய தலைவாராகவும் பணியாற்றிய ஏழாம் தூதனாகிய சகோதரர் ரஸ்ஸலை எஸ்றா சித்தரிக்கலாம் என்று நாம் நினைக்கிறோம். சகோதரர் ரஸ்ஸலின் சத்தியத்தை பற்றிய புரிதலின் அடித்தளம் ஈடுபலியாகும். அவர் லூதரை விட மேலே சென்று, லூதரின் மீட்பின் சத்தியத்தை மறுபடியும் சீரமைத்து, அதன் மிக பெரிய தாக்கங்களைக் காட்டினார். அதாவது மரண சாபத்திலிருந்து

அனைவரையும் மீட்டெடுத்து, ஜீவிப்பதற்கான முழு வாய்ப்பும் கொடுக்கப்படும் என்பதை விவரித்தார்.

நெகேமியா 8:4,"வேதபாரகனாகிய எஸ்றா அதற்கென்று மரத்தால் செய்யப்பட்ட ஒரு பிரசங்கபீடத்தின் மேல் நின்றான்" மரம் இயேசு மரித்த சிலுவை மரத்தை நமக்கு நினைவூட்டுகிறது. இதையொட்டி, தோட்டத்தில் உள்ள மரத்தினால் பாவம் இந்த உலகிற்கு வந்ததை நமக்கு நினைவூட்டுகிறது. இந்த "மேடையில்" நிறுவப்பட்டது தெய்வீக திட்டம், ஈடுபலியாகும்.

4ம் வசனத்தின் மீதமுள்ளப் பகுதியில் 13 நபர்களை பட்டியலிடுகிறது. இவர்கள் 6 மற்றும் 7 ஆக பிரிக்கப்பட்டு, எஸ்றாவுடன் நிற்கிறார்கள். பதிமூன்று என்ற எண் மீட்கும் பொருளை குறிக்கும் : இயேசு, பரிபூரணமானவர், ஏழு என்ற எண்ணைக் குறிக்கும். இவர்மேல் ஆறு என்ற அபூரணராகிய நம்முடைய பாவங்கள் சுமத்தப்பட்டது., எஸ்றாவின் போதனைகளை புரிந்துகொள்ள ஜனங்களுக்கு உதவும்படிக்கு 13 நபர்களின் இரண்டாவது பட்டியல் 7ம் வசனத்தில் பெற்றுள்ளோம். "....நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு விளங்கப்பண்ணினார்கள், ...அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்" - அறுவடையின் போது சத்தியத்தின் அமைச்சர்கள் ஒருமித்து வேலைச் செய்வது போல

வேதத்தை வாசித்து அதை கேட்கும்போது அவர்கள், "இஸ்ரயேல் புத்திரர் ஏழாம் மாதத்தின் பண்டிகையிலே கூடாரங்களில் குடியிருக்கவேண்டும் என்று .... எழுதியிருக்கிறதைக் கண்டார்கள்."(நெகேமியா8:14) இது அவர்கள் மறந்துவிட்ட ஒரு பண்டிகையாக இருந்தாலும், இப்போது இது வைராக்கியத்துடன் பாராட்டப்பட்டது. சகரியாவில் குறிப்பிடப் பட்டுள்ளபடி இது கூடாரப் பண்டிகை, மனுக்குலத்திற்கான இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை குறிப்பிடுகிறது. இது கிறிஸ்தவத்தால் மறக்கப்பட்ட அற்புதமான உண்மை, ஆனால் அறுவடையின் போது தெளிவாக பிரசங்கிக்கப்பட்டு, கற்பிக்கப்படுகிறது.

மறுசீரமைப்பு, அக்டோபர் 31,1517ல் ஜெர்மனியின் விட்டன்பெர்க்கில் உள்ள தேவாலயத்தின் கதவில் 95ஆய்வறிக்கைகளை மார்ட்டின் லூதர் வெளியிட்டதை நாம் ஆர்வத்தோடு குறிப்பிடுகிறோம் - மற்றும் ஏழாம் தூதர் அதே நாளில் தனது வேலையை முடித்தார், அக்டோபர் 31.

### இன்றைய தீர்க்கதரிசனம்

# அரசாங்கங்களும் மதங்களும்

"அதற்கு அவர் - அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்" (லூக்கா20: 25)

மசூதிகள், பள்ளிகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் மீதான அரசாங்க மேற்பார்வையை வலுப்படுத்தும் மசோதாவிற்கு பிரெஞ்சு நாடாளுமன்றத்தின் கீழவையில் சட்டமியற்றுபவர்கள் அதிகளவில் ஒப்புதல் அளித்தனர். இந்த மசோதாவின் நோக்கம் தீவிர இஸ்லாமியர்களிடமிருந்து பிரான்சைக் காப்பதும், பிரெஞ்சு நெறிகள் மீதான மதிப்பை ஊக்குவிப்பதும் ஆகும். கூடுதலாக, வெறுப்பு அல்லது வன்முறையைத் தூண்டும் கருத்துக்களை பரப்பும் எந்த மதக் குழுவையும் தற்காலிகமாக மூட இந்த மசோதா அனுமதிக்கும். மத அமைப்புகள் செயல்படுவதற்கு ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் அரசாங்க அனுமதியைப் பெற வேண்டும், மேலும் வெளிநாட்டு நிதியைப் பெற்றால் அவர்களின் கணக்குகள் ஆண்டுதோறும் அத்தாட்சி பெற வேண்டும். இந்த மசோதா தேவாலயங்கள் மற்றும் ஜெப ஆலயங்கள் உட்பட அனைத்து வழிபாட்டு தளங்களுக்கும் பொருந்தும், இருப்பினும் இது மசூதிகள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகளை இலக்காகக் கொண்டது. குடியரசு மசோதாவின் கோட்பாடுகளை வலுப்படுத்தும் சட்டம், மத உறுப்பினர்கள் யாராவது வன்முறையைத் அல்லது வெறுப்பைத் தூண்டினால், அந்த வழிபாட்டு தளங்களை நிரந்தரமாக மூடுவதற்கும், மத அமைப்புகளை நீதிமன்ற உத்தரவின்றி கலைப்பதற்கும் அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கும். அமெரிக்காவில், மத சுதந்திர மறுசீரமைப்புச் சட்டத்தை மீட்டெடுக்க சில குழுக்கள் பைடன் நிர்வாகத்தை வலியுறுத்துகின்றன, இது சில சுகாதாரப் பாதுகாப்பு, நிதி மற்றும் பாகுபாடற்ற சட்டங்களிலிருந்து மத அடிப்படையிலான விலக்குகளைப் பாதுகாக்கிறது. 2007 முதல் 2017 வரை, மதத்தின் மீதான அரசின் கட்டுப்பாடுகள் - மத நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளை கட்டுப்படுத்தும் மாநில அதிகாரிகளின் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் - உலகம் முழுவதும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தன. 2007 ஆம் ஆண்டிலிருந்து சில மதக் குழுக்களுக்கு எதிரான சமூக விரோதம் அதிகரித்துள்ளது, பியூ ஆராய்ச்சி மையம் இந்த சிக்கலைக் 2007 இல் கண்காணிக்கத் தொடங்கியது. சீனா இந்தோனேசியா மற்றும் ரஷ்யா போன்ற மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடுகள் உட்பட இன்று 50க்கும் மேற்பட்ட அரசாங்கங்கள், 2007 இல் 40 திலிருந்த கட்டுப்பாடுகளை காட்டிலும் இப்போது மதத்தின் மீது "உயர்ந்த" அல்லது "மிக உயர்ந்த" கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. மதம் சம்பந்தப்பட்ட மிக அதிகமான சமூக விரோதங்களை மக்கள் அனுபவிக்கும் நாடுகளின் எண்ணிக்கை இந்த சகாப்த கால ஆய்வில் 39 முதல் 56 ஆக உயர்ந்துள்ளது.

உலகளவில் தொடர்ந்து அதிக கட்டுப்பாடுகள் உள்ளவை, மதச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் அரசாங்கச் சட்டங்கள் மற்றும் கொள்கைகளும் (மதக் குழுக்கள் செயல்படுவதற்கு பதிவு செய்ய கட்டாயப்படுத்துதல்) மற்றும் மதக் குழுக்களுக்கு அரசாங்க ஆதரவும் (உதாரணமாக மதக் கல்வி, சொத்து மற்றும் மதகுருமார்களுக்கு நிதியளிப்பதன் மூலம்) ஆகும். இவை ஆய்வில் கண்காணிக்கப்பட்ட ஐந்து பிராந்தியங்களில் ஒவ்வொன்றிலும் உள்ளன - அமெரிக்கா, ஆசியா - பசிபிக், ஐரோப்பா, மத்திய கிழக்கு வட ஆப்பிரிக்கா மற்றும் சகாராவின் தெற்குப் பகுதியிலுள்ள ஆப்பிரிக்க நாடுகள். கடந்த சகாப்தத்தில் இந்த இரண்டு வகையான கட்டுப்பாடுகளும் அதிகரித்து வருகின்றன.

மதச் செயல்பாடுகளின் மீது அரசாங்க கட்டுப்பாடுகளும் மதக் குழுக்களை அரசாங்கம் துன்புறுத்துவதும் கடந்த சகாப்தத்தில் அதிகரித்து வருகின்றன - சில சந்தர்ப்பங்களில், இன்னும் ஆழமாக. உதாரணமாக, கணக்கெடுப்பில், ஐரோப்பாவில் மத செயல்பாடுகள் மீதான அரசாங்க வரம்புகள் (மத மாற்றம் மற்றும் ஆண் விருத்தசேதனத்தை கட்டுப்படுத்தும் முயற்சிகள் உட்பட) 2007 முதல் இரட்டிப்பாகியுள்ளது, மற்றும் மத்திய கிழக்கு -வட ஆபிரிக்க பிராந்தியத்தில் அரசாங்கத் தொல்லைகளை மதிப்பிடும் சராசரி மதிப்பெண் (அஹ்மதியர்கள் அல்லது இஸ்லாமின் பிற சிறுபான்மை பிரிவுகளுக்கு எதிரான குற்றங்கள் போன்றவை) 72 % ஆக அதிகரித்துள்ளது.

**சமுதாய மதத்தை நோக்கி சாயும் அமெரிக்கா**

அமெரிக்காவில், வில்லியம் பென் பிலடெல்பியாவை குறிப்பாக ஐரோப்பாவில் மதத் துன்புறுத்தலின் புகலிடமாக பிலெதல்பியாவை நிறுவிய


William Penn, atop city hall, Philadelphia

நாட்களிலிருந்து, மதத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள கோட்டை பற்றிய விவாதங்கள் நடந்து வருகின்றன. (இரண்டாம் வருகை மற்றும் சத்திய இயக்கத்தின் மீதான கவனம் பென்சில்வெனியாவில் ஆரம்பமானது தற்செயலாக நடந்தது அல்ல.)

சமூகவியலாளர்கள் "சமுதாய மதம்" என்று அழைக்கப்படுவதை பின்பற்றுவதாக அமெரிக்கா நீண்ட காலமாக அறியப்படுகிறது - தேசபக்தி, தேசத்தின் ஸ்தாபக ஆவணங்கள் மற்றும் தேவனை மையமாகக் கொண்ட ஒரு பகிரப்பட்ட, பிரிவில்லாத மதம்.

எவ்வாறாயினும், இப்போது அமெரிக்காவில், இதில் தேவனை சேர்ப்பது குறைந்து வருகிறது. நாத்திகர்கள் மற்றும் "குறிப்பாக எந்த மதமும் இல்லை" என்று சுய-அடையாளம் காண்பவர்கள் அமெரிக்க மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு வரை உயர்ந்துள்ளனர் (2020 ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆய்வு). கிறிஸ்தவர்களாக தங்களை அடையாளம் காட்டுபவர்கள் (2019 காங்கிரஸ் வாக்கெடுப்பு ) இப்பொழுது அமெரிக்க சட்டமன்ற பதவிகளில் பணியாற்றுகிறார்கள், அதில் "நாத்திகர்கள்" என்று வகைப்படுத்தப்பட்டவர்கள் ஊடுருவினால் என்ன நடக்கும் என்று தெரியவில்லை.

அமெரிக்க மக்கள் தொகைக்குள், பத்தில் ஆறு பேர் (63%) தேவாலயங்கள் மற்றும் பிற வழிபாட்டு இல்லங்கள் அரசியலில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இன்னும் அதிக பங்கு (76%) இந்த வழிபாட்டு இல்லங்கள் தேர்தலின் போது அரசியல் வேட்பாளர்களை அங்கீகரிக்கக்கூடாது என்று கூறுகிறது. இன்னும் மூன்றில் ஒரு பங்கு அமெரிக்கர்கள் (36%)தேவாலங்கள் மற்றும் பிற வழிபாட்டு இல்லங்கள் சமூக மற்றும் அரசியல் விஷயங்களில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றனர். (1954 இல் இயற்றப்பட்ட ஜான்சன் திருத்தம், தேவாலயங்கள் போன்ற வரிவிலக்கு பெற்ற நிறுவனங்களை எந்தவொரு வேட்பாளரின் சார்பாகவும் அரசியல் பிரச்சாரங்களில் ஈடுபடுவதைத் தடை செய்கிறது.)

சமூகவியலாளர்கள் கூறுகையில், ஒழுங்கமைக்கப்பட்ட மதத்தில் பங்கேற்பது எட்டு சகாப்த காலங்களில் முதல் முறையாக 50% க்கும் குறைவாக சரிந்துள்ளது. அரசியல் இப்போது ஒரு உண்மையற்ற மதமாக மாறியுள்ளது. மேக் அமெரிக்கா கிரேட் அகெய்ன் (MAGA) என்பதன் பக்தர்கள் வலதுசாரிகள் என்பதிலிருந்து, சமூக நீதி வீரர்கள் "விழித்திருக்கும் இடதுசாரிகள்" என்பதுவரை, அரசியல் செயல்பாடுகள் பெரும்பாலும் பலருக்கு மத வழிபாட்டுடன் இணைந்துள்ளன (2020 வாக்கெடுப்பு). பல மத நம்பிக்கைக் கொண்ட அமெரிக்கர்கள் பாகுபாடுகளை மனதில் வைத்தே தங்கள் சபையை தேர்ந்தெடுக்க முனைகிறார்கள் - ஜனாதிபதி வேட்பாளரின் தேர்வு, எவரோ ஒருவரை ஒரு புதிய தேவாலயத்திற்கு செல்ல வழிவகுக்கும்.

## இயேசுவின் குடியுரிமை கொள்கைகள்

"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன், ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை, உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான், அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள். ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மைசெய், அதனால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு, பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை, தீமைசெய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே" (ரோமர் 13: 1- 4)

பரிசேயர்கள் இயேசுவிடம் வரி செலுத்துவது பற்றி கேள்வி எழுப்பி அவரை சிக்கவைக்க முயன்றபோது, நம் ஆதார வசனத்தில் உள்ளதுபோல் அவர் அளித்த பதில், அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவரின் அவரது அரசாங்கத்துடனான தொடர்புக்கான சில கொள்கைகளைக் குறிக்கிறது. மேலே மேற்கோள் காட்டப்பட்ட ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இந்த கொள்கைகளை பவுல் மேலும்

வரையறுக்கிறார். இந்த வழிகாட்டுதல்களை பின்வருமாறு சுருக்கமாக சொல்லலாம்-

*தேவன் மீதான விசுவாசம் அரசாங்கத்தின் மீதான மரியாதையை தடுக்கக்கூடாது.

*அதே சமயம், ஒருவர் சிந்தனையற்ற சம்மதத்தை வெளிப்படுத்தக்கூடாது.

*ஒரு புரட்சிகர இயக்கம் அநீதியை சமாளிக்க வழி அல்ல

*ஒரு உண்மையான கிறிஸ்தவர் நீதிக்கான செல்வாக்கை வெளிப்படுத்த வேண்டும்.

*ஒரு கிறிஸ்தவரின் கொள்கைகள் அவர்களின் செல்வாக்கு வட்டத்திற்குள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

பேதுரு அரசாங்கத்திற்கான சரியான மரியாதை பற்றி எழுதினார் - "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள இராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவரால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்." (1பேதுரு 2: 13-14). ஆனாலும்அவர் அதை நம் வாழ்வில் தேவனின் அதிகாரத்திற்கு சமமாக கூறவில்லை. அரசாங்கங்கள் செய்யும்போது கூட, பாவத்தை அங்கீகரிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கப்படவில்லை. இயேசுவின் கட்டளைகளுக்கும்யேகோவாவின் தேவைகளுக்கும் கிறிஸ்தவர்கள் தங்கள் கடமைகளை செய்யாமல் இருக்க அரசாங்கங்கள் கட்டாயப்படுத்தினால், பேதுரு வேறு ஒரு இடத்தில் கற்பித்த நிலைப்பாட்டை அவர்கள் எடுக்க வேண்டும். "அப்படி அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி - நீங்கள் அந்த நாமத்தைக் குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா ? அப்படியிருந்தும், இதோ எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள் மேல் சுமத்த வேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான். அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் - மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது." (அப்போஸ்தலர் 5: 27 - 29).

சமூகத்துடனான நமது தொடர்பு முக்கியமாக தனிநபர்களின் நலன் மற்றும் பொறுப்பில் கவனம் செலுத்த வேண்டும். பாவத்தின் இருள் நிறைந்த உலகில் நீதிக்கான தீர்ப்பு மற்றும் மாற்றம் கொண்டுவரும் செல்வாக்காக நாம் இருக்க வேண்டும். "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் , உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள், அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும், இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு,பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு5 13 / 16),

தனிச்சுற்றுக்கு மட்டும்

மேலும் தகவல் மற்றும் புத்தக தேவைகளுக்கு தொடர்பு :

## ஞானத்தின் இனிமையான வேண்டுகோள்

ஞானம் தன் வீட்டைக் கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து, 2. தன் கொழுத்த ஐந்துக்களை அடித்து, திராட்சரசத்தை வார்த்துவைத்து, தன் போஜனபந்தியை ஆயத்தப்படுத்தி, 3. தன் பணிவிடைக்காரிகளை அனுப்பி, பட்டணத்தின் உயர்ந்த மேடைகளின்மேல் நின்று கூப்பிட்டு, 4. புத்தியீனனை நோக்கி: எவன் பேதையோ அவன் இவ்விடத்தில் வரக்கடவன். 5. நீங்கள் வந்து என் அப்பத்தைப் புசித்து, நான் வார்த்த திராட்சரசத்தைப் பானம்பண்ணுங்கள்.

